விலை : 20.00 website : www.valampurii.lk
பக்கங்கள் : இருபத்து நான்கு

# வலம்புரி Valampurii

E-mail: valampurii@yahoo.com, valampurii@sltnet.lk

சங்கு 17 வள்ளுவர் ஆண்டு 2047 பங்குனி 15 திங்கட்கிழமை (28.03.2016) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 100

கல்யாண மாலை
[சர்வதேச திருமண சேவை]
T.P: 021 720 1005

இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
Email:Kalyanamalai.jaffna@gmail.com
பதிவுக் கட்டணம்
1000/= மட்டுமே

## போர்க்குற்றச்சாட்டுக்கள் தொடர்பான

# சர்வதேச அழுத்தங்கள் குறைவடைந்து விட்டன!

## ஜனாதிபதி மைத்திரி விசேட உரை



(கொழும்பு)

**மனித உரிமை மீறல்கள் மற்றும் போர்க்குற்றச்சாட்டுக்கள் தொடர்பாக சர்வதேச நாடுகளினால் இலங்கை அரசு மீது பிரயோகிக்கப்பட்ட அழுத்தங்கள் தற்போது குறைவடைந்துள்ளதாக ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.**

கொழும்பில் நேற்று இடம்பெற்ற நிகழ்வு ஒன்றில் விசேட உரையாற்றியபோதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் அங்கு மேலும் உரையாற்றுகையில்,

கடந்த அரசாங்கத்தின் ஆட்சிக் காலத்தில் ஐக்கிய நாடுகள் சபை

24 ஆம் பக்கம் பார்க்க....

## இலங்கை அணிக்கு ஜனாதிபதி உற்சாகம்

(கொழும்பு)

இலங்கை கிரிக்கட் அணி வீரர்களின் திறமைகள் பெருமிதம் அளிக்கும் வகையில் அமைந்துள்ளதாக ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

இருபது- 20 நடப்பு உலக சம்பியன்களான இலங்கை அணி நேற்று முன்தினம் எதிர்பாராதவிதமாக இங்கிலாந்து அணியுடன்

24 ஆம் பக்கம் பார்க்க....

## பாகிஸ்தானில் குண்டு வெடிப்பு 50 பேர் பலி

(லாகூர்)

பாகிஸ்தானின் லாகூர் நகரிலுள்ள பூங்கா ஒன்றில் நேற்று மாலை நடந்துள்ள வெடிகுண்டுத் தாக்குதலில் குறைந்தது 50 பேர் கொல்லப்பட்டுள்ளதுடன் நூற்றுக்கும் அதிகமானோர் காயமடைந்துள்ளனர்.

24 ஆம் பக்கம் பார்க்க....

## "பனையோலையும் எழுத்தாணியும் இணையும்"




(யாழ்ப்பாணம்)

நாடாளுமன்ற மறுசீரமைப்பு மற்றும் வெகுஜன ஊடக அமைச்சர் கயந்த கருணாதிலக, ஊடகபிரதி அமைச்சர் கருணாரட்ண பரணவிதாரண மற்றும் தென்பகுதி ஊடகவியலாளர்கள் உள்ளிட்ட குழுவினர் நேற்றைய தினம் வலம்புரி பத்திரிகை காரியாலயத்துக்கு வருகை தந்திருந்தனர்.

"பனையோலையும் எழுத்தாணியும் ஒன்றாய் இணையும் நல்லி

24 ஆம் பக்கம் பார்க்க....

## கடற்புலிகளின் கண்ணிவெடியை அமெ.கடற்படைத் தளபதி ஆய்வு



(கொழும்பு)

இலங்கைக்கு பயணம் மேற்கொண்டுள்ள அமெரிக்கக் கடற்படையின் ஏழாவது கப்பற் படையணியின் கட்டளைத் தளபதியான வைஸ அட்மிரல் ஜோசப் ஓகொயின் நேற்று கிழக்குப் பிராந்திய கடற்படைத் தலைமையகத்துக்குச் சென்று ஆய்வுகளை மேற்கொண்டார்.

நேற்று முன்தினம் கொழும்புத் துறைமுகம் வந்த யு.எஸ்.எஸ் புளூரிட்ஜ் போர்க்கப்பலில் வந்த வைஸ் அட்மிரல் ஜோசப் ஓகொயின

24 ஆம் பக்கம் பார்க்க....

### இராணுவத்தினரிடம் சரணடைந்தபோது

## பெண் பிள்ளைகள் மீது பெற்றோர் அவதானமாக இருந்திருக்க வேண்டும்

### இப்படி தெரிவித்தார் பரணகம



(முல்லைத்தீவு)

இறுதி யுத்தத்தின்போது இராணுவத்திடம் சரணடைந்து இராணுவப் பகுதியில் பெண் பிள்ளைகளை அழைத்து வந்தபோது பெற்றோர்கள் அவதானமாக இருந்திரு

24 ஆம் பக்கம் பார்க்க....

## பரந்தனில் விபத்து அறுவர் படுகாயம்



(பரந்தன்)

கிளிநொச்சி பரந்தன் - முல்லைத்தீவு வீதியில் நேற்று இடம்பெற்ற

24 ஆம் பக்கம் பார்க்க....

## காணாமல்போனோரை கண்டறிய முல்லைத்தீவில் 366 பேர் சாட்சியம்

(முல்லைத்தீவு)

காணாமல்போனோரை கண்டறியும் ஜனாதிபதி ஆணைக் குழுவினுடைய விசாரனைகள் கடந்த மூன்று நாட்களாக முல்லைத்தீவு மாவட்ட செயலகத்தில் ஆணைக் குழுவின் தலைவர் மக்ஸ்வெல் பரணகம தலைமையில் இடம்பெற்றது.

இந்தநிகழ்வின் இறுதி நாளான நேற்று ஊடகவியலாளர்களிடம் கருத்துத் தெரிவிக்கும்போது அவர் இவ்வாறு தெரிவித்தார்

இந்த விசாரணைகளுக்காக விண்ணப்பிக்கப்பட்டவர்களுக்கு

23 ஆம் பக்கம் பார்க்க....

## அதிக வெப்பம் காரணமாக மயங்கி வீழ்ந்தவர் மரணம்

(யாழ்ப்பாணம்)

தற்போது நிலவும் அதிக வெப்பம் காரணமாக மயங்கி வீழ்ந்து, யாழ். போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த முதியவர் நேற்று முன்தினம் சனிக்கிழமை உயிரிழந்துள்ளதாக கோப்பாய் பொலிஸார் தெரிவித்தனர்.

மருதுநகர் கிளிநொச்சி பகுதியினை சேர்ந்த அஞ்சலிங்கம் தர்மதேவா (வயது 60) என்ற ஓய்வுபெற்ற பஸ் நடத்துனரே இவ்வாறு வெப்பப் பாதிப்பினால் உயிரிழந்துள்ளதாக கோப்பாய் பொலிஸார் தெரிவித்தனர்.

கடந்த 15ஆம் திகதி, கிளிநொச்சியில் இருந்து யாழ்ப்பாணத்தில் உள்ள உறவினர் ஒருவரைப் பார்க்க வந்த இவர், உறவினர் ஒருவ

24 ஆம் பக்கம் பார்க்க....

## இலங்கையின் 6 பிரதேசங்களில் ஐ.எஸ் தீவிரவாதிகள் ஊடுருவல்!

### தென்பகுதி ஊடகம் பரபரப்புத் தகவல்

(கொழும்பு)

ஐ.எஸ். பயங்கரவாத இயக்கத்துடன் தொடர்புடையவர்கள் இலங்கையின் ஆறு பிரதேசங்களில் ஊடுருவியுள்ளனர் என புலனாய்வு அறிக்கைகள் தெரிவிக்கின்றன என்று தென்பகுதி ஊடகம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

இலங்கையில் ஐ.எஸ். பயங்கரவாத இயக்கத்தைத் தடைசெய்வதற்கு இதுவரை எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படாததால் அந்த இயக்கத்துடன் சம்பந்தப்பட்டவர்கள் எனச் சந்தேகிக்கப்படுபவர்களைக் கைது செய்வதில் முட்டுக்கட்டைகள் உள்ளன என்று புலனாய்வுப் பிரிவினர் தெரிவித்துள்ளனர்.

24 ஆம் பக்கம் பார்க்க....

## அமெரிக்கா - இலங்கை இடையில் உடன்படிக்கை கைச்சாத்திடப்படும்

(கொழும்பு)

அமெரிக்காவின் உள்நாட்டு இறைவரி சேவை நிறுவனத்திற்கும் இலங்கை தேசிய இறைவரி திணைக்களத்திற்கும் இடையில் உடன்படிக்கை ஒன்றை கைச்சாத்திட இலங்கை அரசாங்கம் தயாராகி வருகிறது.

நாடுகளுக்கு இடையிலான உடன்படிக்கையாக இந்த உடன்படிக்கை கைச்சாத்திடப்பட உள்ளது.

அமெரிக்கா, இலங்கை இடையில் வரி அறவீட்டு தகவல்களை பரிமாறிக்கொள்ளும் நோக்கில் இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இது சம்பந்தமாக தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார விவகார அமைச்சர் என்ற வகையில் பிரதமர் ரணில் விக்ரமசிங்க முன்வைத்த யோசனைக்கு அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது. (செ-12)

# மைத்திரியும் ரணிலும் சிறந்த தலைவர்கள்

## பொன்சேகா புகழாரம்



(காலி)

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவும் பிரதமர் ரணில் விக்ரமசிங்கவும் சிறந்த தலைவர்கள் என பிரதேச அபிவிருத்தி அமைச்சர் பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா தெரிவித்துள்ளார்.

காலி, பலப்பிட்டிய பிரதேசத்தில் நடைபெற்ற வைபவம் ஒன்றில் பேசும் போதே அவர் இதனை கூறியுள்ளார்.

ஜனாதிபதியும் பிரதமரும் வயிற்று பிழைப்பு நடத்துபவர்கள் அல்ல. இதனால், சிறந்த அரசியல் இணைவுப் பொருத்தம் இருக்கின்றது.

இவர்களுக்கு பலமாக இருந்து நாட்டை கட்டியெழுப்புவதே எமது முயற்சியாகும் எனவும் சரத் பொன்சேகா குறிப்பிட்டுள்ளார்.

சரத் பொன்சேகா, அமைச்சராக பதவியேற்ற பின்னர், அவரது கிராம பிரதேசத்தில் அவருக்கு வரவேற்பளிக்கப்பட்டது.

தென் மாகாண சபை உறுப்பினர் அசோக தனவங்ச, பொன்சேகாவை வரவேற்றார். (செ-12)

## வயோதிபரிடம் வழிப்பறி !

(கரவெட்டி)

சாவகச்சேரி கப்பூது வீதியில் வழிப்பறிச் சம்பவம் ஒன்று இடம்பெற்றுள்ளது.

இச்சம்பவம் நேற்று மதியம் ஒரு மணிக்கு கப்பூது வீதியில் அமைந்துள்ள விராலி மடத்தடியில் இடம்பெற்றுள்ளது.

குறித்த இடத்தில் மோட்டார் சைக்கிளில் நின்ற சுமார் 20 வயது மதிக்கத்தக்க இரு இளைஞர்கள் அவ்வழியே மோட்டார் சைக்கிளில் வந்த வயோதிபர் ஒருவரை வழி மறித்து, தமது மோட்டார் சைக்கிளிற்கு பெற்றோல் வேண்டும் என உதவி கோருவது போல நடித்து சிறு தொகை பணத்தை கேட்டுள்ளனர்.

பின்னர் திடீரென அவ் வயோதிபரிடமிருந்த இரண்டாயிரம் ரூபாய் பணத்தினை வழிப்பறி செய்து கொண்டு மோட்டார் சைக்கிளிலேயே தப்பிச் சென்றுள்ளனர்.

இச்சம்பவம் தொடர்பில் குறித்த வயோதிபர் நெல்லியடிப் பொலிசில் செய்த முறைப்பாட்டினையடுத்து பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (செ-60)

# ரணிலின் சீன விஜயம்; நாமல் எம்.பி விசனம்

(கொழும்பு)

பிரதமர் ரணில் விக்ரமசிங்கவின் சீன விஜயம் குறித்து நாமல் ராஜபக்ஷ தனது டுவிட்டர் வலைத்தளத்தில் கேள்விகளை எழுப்பியுள்ளார்.

பிரதமரின் சீன விஜயத்திற்கான ஏற்பாட்டு நடவடிக்கைகளுக்காக தனிப்பட்ட ஆலோசகர்களை ஏன் வாடகைக்கு அமர்த்துகிறீர்கள் என நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ கேள்வி எழுப்பியுள்ளார்.

அத்துடன் ரணில் விக்ரமசிங்கவின் சீன விஜயத்திற்கான ஏற்பாடுகளை வெளிவிவகார அமைச்சு ஏன் மேற்கொள்ளவில்லை எனவும் அவர் கேள்வி எழுப்பியுள்ளார்.

மேலும் அரசாங்கத்தின் புதிய வரி விதிப்பு கொள்கை பற்றி கருத்து வெளியிட்டுள்ள அவர்,

எதிர்வரும் ஏப்ரல் மாதம் அமுலுக்கு வரும் வரி விதிப்புகள், புது வருடத்தை கொண்டாடும் இலங்கையர்களின் பலருக்கு பிரச்சினையாக இருக்கும் எனவும், இதனால் புது வருடத்திற்கு பின்னர் அதனை அமுலுக்கு கொண்டு வருமாறும் கூறியுள்ளார். (செ-12)

# மகிந்த குடும்பத்துக்கு எதிரான விசாரணைகள் துரிதப்படுத்தப்படும்

## ஜனாதிபதி மைத்திரி உறுதியளிப்பு

(கொழும்பு)

முன்னாள் ஜனாதிபதி மகிந்தவின் குடும்பத்தினரிற்கு எதிரான விசாரணைகளை துரிதப்படுத்துமாறு அதிகாரிகளிற்கு ஆலோசனை வழங்குவதாக ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன அமைச்சரவைக்கு உறுதியளித்துள்ளார்.

இது குறித்து தெரிவிக்கப்படுவதாவது, இலங்கையின் நிதி மற்றும் பொருளாதார நிலை குறித்த உண்மைகளை அறிந்துள்ள அமைச்சர்கள், இலங்கை பொருளாதாரத்தின் இந்த நிலைக்கு காரணமானவர்கள் நீதியின் முன்நிறுத்தப்பட வேண்டும் என வலியுறுத்தி வருகின்றனர்.

சிலர் குறிப்பிட்ட காலப்பகுதிக்குள் விசாரணைகளை பூர்த்தி செய்யக்கூடிய ஆணைக்குழுக்களை அமைக்குமாறு கோரியுள்ளனர். எனினும் நத்தை வேகத்தில் நகர்ந்து கொண்டுள்ள விசாரணைகளில் இதுவும் ஒன்றாக மாறிவிடுமோ என்ற சந்தேகமும் காணப்படுகின்றது.

கடந்த வாரம் இடம்பெற்ற அமைச்சரவை கூட்டத்தொடரின் போது இந்த விடயம் குறித்து ஆராயப்பட்டது. அமைச்சர் சம்பிக்க ரணவக்க இது குறித்து சுட்டிக்காட்டினார்.

முன்னாள் ஜனாதிபதி குடும்பத்திற்கு எதிரான பல விசாரணைகளில் முன்னேற்றம் ஏற்படவில்லை என அவர் கருத்து தெரிவித்தார்.



இந்தவிடயம் குறித்து கவனம் எடுப்பதாக ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன உறுதியளித்தார். (செ-12)

# அமெ.போர்க் கப்பலில் இலங்., அமெ.தூதுவர்கள்



(கொழும்பு)

அமெரிக்காவுக்கான இலங்கை தூதுவர் பிரசாத் காரியவசம், கொழும்புத் துறைமுகத்தில் தரித்து நிற்கும் அமெரிக்க கடற்படையின் போர்க்கப்பலை நேற்று சென்று பார்வையிட்டுள்ளார்.

அமெரிக்க கடற்படையின் ஏழாவது கப்பற் படையணியின் யு.எஸ்.எஸ்.புளூரிட்ஜ் போர்க்கப்பல் நேற்று முன்தினம் கொழும்புத் துறைமுகம் வந்து சேர்ந்தது.

அமெரிக்காவுக்கான இலங்கை தூதுவர் பிரசாத் காரியவசம் நேற்று இந்தப் போர்க்கப்பலைச் சென்று பார்வையிட்டார்.

இலங்கையில் உள்ள அமெரிக்கத் தூதுவர் அதுல் கெசாப்பும் அவருடன் சென்றிருந்தார்.

இதன்போது, அமெரிக்கப்போர்க் கப்பலின் செயற்பாடுகள் மற்றும் அதிலுள்ள வசதிகள் தொடர்பாக அமெரிக்க கடற்படை அதிகாரிகள் விளக்கமளித்திருந்தனர். (செ-12)

## பெண் சட்டத்தரணி மரணம்; கணவருக்கு விளக்கமறியல்


(அம்பாறை)

அம்பாறை ஆலையடி வேம்பு பிரதேசத்தில் தூக்கில் தொங்கிய நிலையில் மீட்கப்பட்ட பெண் சட்டத்தரணியின் கணவரை எதிர்வரும் 6ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு அக்கரைப்பற்று மாவட்ட நீதவான் நீதிமன்ற நீதிபதியும், மேலதிக நீதவான் நீதிமன்ற நீதிபதியுமான திருமதி நளினி கந்தசாமி உத்தரவிட்டார்.

புதன்கிழமை நீதிவான் முன்னிலையில் ஆஜர்படுத்தியபோதே மேற்படி தீர்ப்பை வழங்கினார்.

பெண் சட்டத்தரணி சடலமாக மீட்கப்படுவதற்கு சில மணித்தியாலங்களுக்கு முன் சட்டத்தரணியும் அவரது கணவரும் வாக்குவாதத்தில் ஈடுபட்டதாகவும் சட்டத்தரணியை அவரது கணவர் கையால் அடித்த தாகவும் பொலிஸாரின் ஆரம்பக்கட்ட விசாரணையில் இருந்து தெரிய வந்துள்ளது.

இதனையடுத்து கையால் அடித்த குற்றத்துக்காக சட்டத்தரணியின் கணவரை பொலிஸார் சந்தேகத்தின் பேரில் கைது செய்து நீதிபதி முன்னிலையில் ஆஜர்படுத்தியதையடுத்து விளக்கமறியலில் வைக்குமாறு நீதிபதி உத்தரவிட்டார். (செ-12)







இயேசு பிரான் உயிர்த்தெழுந்த நாளான நேற்றைய நன்னாள் கிறிஸ்தவ மக்களால் உலகெங்கிலும் கொண்டாடப்பட்டது. இந் நிகழ்வினையொட்டிய விசேட ஆராதனைகளுடன் யாழ்ப்பாணம் குருநகர் புனித யாகப்பர் ஆலயத்தில் நேற்றுக் காலை திருப்பலி நிகழ்வுகள் இடம்பெற்றபோது... (படங்கள் - உ.சாளின்)

# பாராளுமன்றம் ஏப்ரல் 5 ஆம் திகதி அரசமைப்பு சபையாக கூடுகின்றது

(கொழும்பு)

**பாராளுமன்றம் ஏப்ரல் 5 ஆம் திகதி முதன் முதலாக அரசமைப்பு சபையாகக் கூடவுள்ளதென்றும் அப்போது புதிய அரசியலமைப்பு தயாரிப்பதற்காக இரண்டு குழுக்கள் நியமிக்கப்படுமென்று அமைச்சரும் சபை முதல்வருமான லக்ஷ்மன் கிரியெல்ல தெரிவித்துள்ளார்.**

புதிய அரசியலமைப்பை தயாரிப்பதற்காக பாராளுமன்றம் சபாநாயகர் கருஜய சூரிய தலைமையில் அரசமைப்பு சபையாக மாறும். அரசமைப்பு சபை நடவடிக்கைகளில் ஊடகவியலாளர்கள் அனுமதிக்கப்படுவர் என்றும் இதில் மறைப்பதற்கு எதுவும் இல்லையென்றும் அவர் தெரிவித்தார். எதிர்க்கட்சியனர் சபைக்குள் ஒன்றும் வெளியில் ஒன்றுமாய் பேசுகின்றனர். பாராளுமன்ற



உறுப்பினர்களின் கொடுப்பனவுகளை அதிகரிப்பதற்கு பாராளுமன்றத்தில் நடைபேற்ற பேச்சு வார்த்தையின் போது இணக்கம் தெரிவித்த எதிர்க்கட்சிகளின் தலைவர்கள் வெளியில் வந்து இதை விமர்சிக்கத் தொடங்கி விட்டனர்.

இந்த மாதிரியான நிகழ்வுகளை தவிர்த்துக் கொள்ளவே நாம் அரசமைப்பு சபை தொடர்பாக பகிரங்கத் தன்மையுடன் நடந்து கொள்ள விரும்புகின்றோம் என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (இ-5)

## இறுதித்தீர்மானம் எட்டப்படவில்லை

கூட்டு எதிர்க்கட்சிகளின் மேதினக் கூட்டம் தொடர்பில் நேற்று முன்தினம் நடைபெற்ற தலவதுகொட கலந்துரையாடலிலும் இறுதித் தீர்மானம் எட்டப்படவில்லையென தெரிவிக்கப்படுகின்றது.

நேற்று முன்தினம் தலவத்துகொட ஹோட்டலில் நடைபெற்ற கலந்துரையாடல் சுமுகமாக இடம்பெற்றதாகவும், இதில், மே தின நிகழ்வுகள் இடம்பெறும் விதம் தொடர்பிலும், நாட்டின் தற்போதைய அரசியல் நிலவரங்கள் பற்றியும் கலந்துரையாடப்பட்டதாக அரசியல் வட்டாரங்கள் குறிப்பிட்டுள்ளன.

இக்கலந்துரையாடலில் கூட்டு எதிர்க் கட்சியிலுள்ள உறுப்பினர்களுடன் புத்தி ஜீவிகளும் கலந்துகொண்டதாகவும் அவ்வட்டாரங்கள் மேலும் தெரிவித்துள்ளன. (இ-5)

### ஐ.எஸ்.ஐ.எஸ்.பயங்கரவாத அச்சுறுத்தல்

## புலனாய்வுத் துறையை பலப்படுத்த வேண்டும்

### கேணல் சுசந்த சுட்டிக்காட்டு

இலங்கைக்கு ஐ.எஸ். ஐ.எஸ. பயங்கரவாத அமைப்பினால் ஏற்பட்டுள்ள அச்சுறுத்த லிலிருந்து பாதுகாப்புப் பெறுவதற்கு நாட்டின் புலனாய்வுத் துறையினரை பலப்படுத்த வேண்டும் என யுத்தம் தொடர்பான விசேட நிபுணர் ஓய்வு பெற்ற கேணல் சுசந்த செனவிரத்ன தெரிவித்துள்ளார்.

ஐ.எஸ். அமைப்பு பெல்ஜியம் மற்றும் பிரான்ஸ் ஆகிய நாடுகளில் தாக்குதல்களை நடத்தியிருந்தது.

ஐ.எஸ். அமைப்பு கைப்பற்ற எதிர்பார்த்துள்ள நாடுகள் பற்றி இதற்கு முன்னர் ஊடகங்களில் செய்திகள் வெளியாகின. எது எப்படிப் போனாலும், இலங்கையை தரைவழியாக ஆக்கிரமிப்ப தென்பது அவ்வமைப்பினால் முடியாத ஒரு காரியம்.

அவ்வாறு இலங்கையை அவ்வமைப்பு ஆக்கிரமிப்பதாக இருந்தால், எமக்கு முன்னால் இந்தியாதான் அதன் பாதிப்பை எதிர்நோக்க வேண்டியிருக்கும் எனவும் கேணல் சுசந்த மேலும் தெரிவித்துள்ளார். (இ-5)

## இலங்கை மிக விரைவில் பெரும் பொருளாதார நெருக்கடியை சந்திக்கும்

இலங்கை விரைவில் பெரும் பொருளாதார நெருக்கடியை எதிர்நோக்கும் என பல்கலைக்கழக பேராசிரியர்கள் சிலர் எச்சரித்துள்ளனர்.

தலவத்துகொடையில்மொனாக் ஹொட்டலில் நேற்று முன்தினம் நடைபெற்ற கூட்டு எதிர்க் கட்சியினருக்கு தெளிவுபடுத்தும் கருத்தரங்கிலேயே அவர்கள் இதனை கூறியுள்ளனர்.

சர்வதேச நிலைமைகளும், ஐக்கிய தேசியக் கட்சியின் அரசாங்கத்தின் பொருளாதார மற்றும் சர்வதேச நடைமுறைகள இதில் கடும் தாக்க ங்களை ஏற்படுத்தும் எனவும் அவர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

கூட்டு எதிர்க்கட்சியும் புத்திஜீவிகளின் குரல் என்ற அமைப்பும் இணைந்து இந்த கருத்தரங்கை நடத்தியதுடன் அதில் சுமார் 40 நாடாளுமன்ற உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்.

கலாநிதி தயான் ஜயதிலக்க, பேராசிரியர் டப்ளியூ.டி. லக்ஷ்மன், கலாநிதி. சுமணசிறி லியனகே, பேராசிரியர் ரஞ்சித் பண்டார உட்பட புத்திஜீவிகள் இந்த கருத்தரங்கில் உரையாற்றினர்.

இந்த கருத்தரங்கை அடுத்து, மே தினத்தை கொண்டாடும் விதமாக இந்தியாவுடன் அரசாங்கம் செய்து கொள்ள உள்ள எட்கா உடன்படிக்கை உட்பட சில விடயங்கள் குறித்து கூட்டு எதிர்க்கட்சியினர் கலந்துரையாடியுள்ளனர்.

எனினும் இந்த விடயங்கள் தொடர்பில் இறுதி முடிவுகள் எடுக்கப்படவில்லை எனக் கூறப்படுகிறது. (இ-5)

## மைத்திரி-மகிந்த ஒன்றிணைந்தால் நாட்டுக்கு விடிவுகாலம் பிறக்கும்!

### குணவங்ச தேரர் கூறுகிறார்


மகிந்த ராஜபக்ஷவுடன் ஒன்றிணைந்து செயற்படஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன முன்வந்தால் மாத்திரமே நாட்டுக்கு விடிவு காலம் பிறக்குமென்று எல்லே குணவங்ச தேரர் வலியுறுத்தியுள்ளார்.

இது தொடர்பாக சிங்கள வார இதழ் ஒன்றுக்கு அவர் அளித்துள்ள நேர்காணலில் மேலும் தெரிவித்துள்ளதாவது,

இலங்கை தற்போது அரசியல், பொருளாதார, சர்வதேச நெருக்கடிகளை எதிர்கொண்டுள்ளது. இவற்றில் இருந்து விடுபட முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுடன் இணைந்து செயற்பட ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன முன்வரவேண்டும். இவர்கள் இருவரையும் ஒன்றிணைக்கும் முயற்சியில் பிக்குமார் ஈடுபட வேண்டும்.

தற்போதுள்ள நிலையில் இலங்கையில் பெரும்பான்மை சிங்களவரின் எதிர்காலம் கேள்விக்குறியாகியுள்ளது. சிங்களவர்கள் பெரும் அச்சத்துடன் இருக்கின்றார்கள்.

சிறுபான்மை மக்கள் தங்கள் கோரிக்கைகளை நிறைவேற்றிக் கொண்ட திருப்தி மற்றும் சந்தோசத்துடன் தொடர்ந்தும் எதிர்பார்ப்புகளைக் கொண்டுள்ளார்கள்.



அத்துடன் அரசாங்கத்தின மீதான பொதுமக்களின் நம்பிக்கை சிதைந்து, தற் போது நம்பிக்கையீனம் அதிகரித்துள்ளது.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன உண்மையான பௌத்தர். அவர் ஒருபோதும் சிங்கள பௌத்தர்களுக்கு துரோகம் இழைக்க மாட்டார். எனினும் அவரைச் சுற்றிலும் இருக்கும் அரசாங்கத்தின் முக்கியஸ்தர்கள் சிங்கள மக்களின் எதிர்பார்ப்புகளை சிதைத்து, சிறுபான்மை மக்களின் கோரிக்கைகளை நிறைவேற்றும் மனோ நிலை கொண்டவர்கள்.

மைத்திரியை வெல்ல வைத்ததன் பின்னர் தான் எடுத்த முடிவு பிழையானது என்பதை மறைந்த சோபித தேரரும் உணர்ந்திருந்தார். அதன் காரணமாக ஒன்றிணைந்து செயற்படுவதற்கான அழைப்பை அவர் எமக்கு விடுத்திருந்தார் என்றும் எல்லே குணவங்ச தேரர் மேலும் தெரிவித்துள்ளார். (இ-5)

## பி.ரீ.ரீ.விற்பனை வரி அறவீடு குறித்து அரசாங்கம் கவனம்

பெறுமதி சேர் வரியை அரசாங்கம் அதிகரித்துள்ள நிலையில் பி.ரீ.ரீ எனப்படும் விற்பனை புரள்வு வரியை விதிப்பது குறித்து அரசாங்கம் கவனம் செலுத்தி வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

மாகாண ரீதியில் இந்த வரி அறவீடு செய்யப்பட்டு வந்தமை குறிப்பிடத்தக்கது.

அண்மையில் தெற்கில் நடைபெற்ற முதலமைச்சர்கள் மாநாட்டில் பி.ரீ.ரீ வரி அறவீடு செய்வது குறித்து தீர்மானிக்கப்பட்டுள்ளது. 2010 ஆம் ஆண்டில் அப்போதைய அரசாங்கம் வரவு செலவுத் திட்டத்தின் மூலம் பி.ரீ.ரீ.வரியை இரத்து செய்திருந்தது.

மீளவும் வரியை அறவீடு செய்ய சுற்று நிருபம் ஒன்றை வெளியிட தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இதன்படி மொத்த மற்றும் சில்லறை விற்பனை நிலையங்களுக்கு ஒரு வீத வரியையும், ஆடம்பர பண்டங்களான தங்க நகை, சிகரட் மற்றும்மதுபானம்போன்றவற்றுக்கு 5 வீத வரியையும் அறவீடு செய்ய சாத்தியமுண்டு என கொழும்பு ஊடகமொன்று செய்தி வெளியிட்டுள்ளது. விற்பனை புரள்வு வரி அறவீடு செய்ய தீர்மானிக்கப்பட்டுள்ளதாக வட மத்திய மாகாண முதலமைச்சர் பேசல ஜயரட்ன தெரிவித்துள்ளார். (இ-5)

## பாதாள குழுக்களை கட்டுப்படுத்தும் நடவடிக்கை வெற்றியளிக்கவில்லை

### பொலிஸார் மீது விசனம்

பாதாள உலகக்குழு செயற்பாடுகளை கட்டுப்படுத்தும் நடவடிக்கைகள் வெற்றியளிக்கவில்லை என தெரிவிக்கப்படுகிறது.

பாதாள உலகக் குழு உறுப்பினர்களை கட்டுப்படுத்தும் நோக்கில் பொலிஸார் நடவடிக்கைகளை ஆரம்பித்து ஒரு மாதமாகின்றது.

எனினும் இதுவரையில் முக்கியமான பாதாள உலகக் குழு உறுப்பினர்கள் எவரும் கைது செய்யப்படவில்லை.

தென் மாகாணத்தில் 12 பாதாள உலகக் குழுக்களும் மேல் மாகாணத்தில் 6 பாதாள உலகக் குழுக்களும் இயங்கி வருவதாக பொலிஸார் நடத்திய ஆய்வுகளின் மூலம் தெரியவந்துள்ளது.

பாதாள உலகக்குழு செயற்பாடுகளை கட்டுப்படுத்தும் நோக்கில் பொலிஸார் நடவடிக்கைகளை ஆரம்பித்ததனைத் தொடர்ந்து முக்கிய பாதாள உலகக் குழு உறுப்பினர்கள் தலைமறைவாகியுள்ளனர்.

அண்மைய நாட்களில் பாதாள உலகக்குழு செயற்பாடுகள் அதிகரித்துள்ளதாக எதிர்க்கட்சியினர் குற்றம் சுமத்தி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (இ-5)

# எதிரணிகளுக்கு கடும் சவால் விடுத்த மே.தீவுகளுக்கு அதிர்ச்சியளித்தது இன்ஸமாமின் ஆப்கானிஸ்தான்

எதிரணிகளுக்கு தண்ணி காட்டிய மேற்கிந்தியத் தீவுகள் அணியை, ஆப்கானிஸ்தான் அணி 6 ஓட்டங்களால் வீழ்த்தி தங்களது மதிப்பை நிரூபித்தது.

ஆட்டத்தின் 6ஆவது ஓவரில் அதிரடி வீரர் பிளெட்சர் பின் தொடை தசை நார் காயத்தினால் இன்னிங்சை தொடர முடியாமல் 11 ஓட்டங்களில் ரிட்டையர்ட் ஆனார்.






ஆப்கான் வெற்றி பெற்றவுடன் அந்த அணியின் பயிற்சியாளர் இன்ஸமாம் உல் ஹக் பெரிய புன்னகையுடன் மகிழ்ச்சியை வெளியிட்டார். ஆப்கான் வீரர்களின் மகிழ்ச்சிக் கொண்டாட்டத்தில் கிறிஸ் ஹெயிலும் இணைந்தார்.

இந்த ஆட்டத்தில் மேற்கிந்தியத் தீவுகளின் நட்சத்திரம் கிறிஸ ஹெயில் ஆடவில்லை என்பது குறிப்பிடத் தக்கது.

நாணயச்சுழற்சியில் வென்ற டரன்சமி முதலில் ஆப்கான் அணியை துடுப்பாட்டம் செய்ய அழைத்தார். அதன் படி களமிறங்கிய அவ் அணி ஒரு கட்டத்தில் 56/5 என்ற நிலையிலிருந்து நஜிபுல்லா ஸ்ட்ரானின் அற்புதமான இன்னிங்ஸினால் 123 ஓட்டங்களை எட்டியது.

நஜிபுல்லா ஸ்ட்ரான் 40 பந்துகளில் 4 பவுண்டரிகள், ஒரு சிக்ஸருடன 48 ஓட்டங்களை எடுத்தது வெற்றி இன்னிங்ஸாக அமையப் போகிறது என்பதை அவர் அறிந்திருக்க வில்லை.

அதிரடி தொடக்க வீரர் மொகமட் ஷெசாட் 22 பந்துகளில் 24 ஓட்டங்கள் எடுத்து பத்ரீ பந்தில் ஆட்டமிழந்தார்.

தொடர்ந்து ஆடிய மேற்கிந்தியத் தீவுகளின் கதை 20 ஓவர்களில்117/8 என்று முடிந்து போனது.

கடைசி ஓவர் உண்மையில் ஆப்கான் அணியின் மன உறுதிக்கு சவாலாக அமைந்தது. ஆடுகளத்தில் பிக் ஹிட்டர் பிராத்வெய்ட் நிற்கிறார்.

கடைசி ஓவரில் வெற்றிக்குத் தேவை 10 ஓட்டங்கள். பந்து வீச வந்தது ஆப்கான் ஓஃப் ஸ்பின்னர் மொகமட் நபி. முதல் பந்தை பிராத்வெய்ட் சுற்றினார் அருமையான பிளாட் பந்து ஓட்டம் இல்லை.

அடுத்த பந்து மேலேறி வந்து சுற்றினார், ஆனால் மொகமட் நபி இந்தப் பந்தையும் அவருக்கு அதிக இடம் கொடுக்காத வகையில் வீசினார் பந்தில் ஒன்றும் மாட்டவில்லை.

இந்த இரண்டு பந்துக்கும் முரணாக 3 ஆவது பந்து புல்டோஸாக அமைந்தது. பிராத்வெய்ட் நல்ல பந்துகளையே சிக்ஸ் அடிப்பவர், அன்று ரபாடாவின் நல்ல பந்தைத்தான் தூக்கி சிக்ஸ் அடித்து மே.தீவுகளுக்கு வெற்றியைக் கொடுத்தார்.

ஆனால் இந்த புல்டாஸ் அவருக்கு சரியாகச் சிக்கவில்லை, மிட்விக்கெட்டில் பந்து காற்றில் செல்ல, எங்கிருந்தோ ஓடி வந்த நஜிபுல்லா ஸ்ட்ரான் சரியான நிலையில் இல்லாவிட்டாலும் அவரிடம் இருந்த உறுதியினால் பந்து தரையைத் தொடுவதற்கு முன்பாக பிடியெடுத்தார்.

நெருக்கடியான தருணத்தில் மிக அருமையான பிடி என்றே கூற வேண்டும்.

பிராத்வெய்ட் ஆட்டமிழந்த பிறகு அடுத்த 3 பந்துகளில் 3 ஓட்டங்களே வந்தது.

இறுதியில் மேற்கிந்தியத் தீவுகள் 8 விக் கெட்டுக்களை இழந்து 117 ஓட்டங்களை எடுத்து 6 ஓட்டங்களால் தோற்றது.

முன்னதாக தொடக்க வீரர் சார்ள்ஸ், 15 பந்துகளில் ஒரு பவுண்டரி, 2 சிக்சர்கள் என்று 22 ஓட்டங்கள் விளாசி ஹமித் ஹசனின் வேகமான பந்தில் போல்ட் ஆனார்.

முதல் விக்கெட்டாக 7 பந்துகள் விளையாடி ஓட்டம் எடுக்க முடியாமல் லூயிஸ், அமிர் ஹம்சாவிடம் வீழ்ந்தார். பிளெட்சர் 11 ஓட்டங்கள் எடுத்திருந்தபோது காயம் காரணமாக ரிட்டையர்ட் ஆனார்.

முக்கியமான விக்கெட்டை ஆப்கான் லெக் ஸ்பின்னர் ரஷித் கான் வீழ்த்தினார். அவரின் பந்தில் மார்லன் சாமுவேல்ஸ் 5 ஓட்டங்களில் ஆட்டமிழந்தார். 38/3 என்ற நிலையில், டுவைன் பிராவோ (28), ராம்டின் (18) இணைந்து 41 ஓட்டஙகளை சுமார் 8 ஓவர்களில் சேர்ததனர்.

பிராவோவை அப் போது மொகமட் நபி எல்.பி.செய் தார். 2 ஓவர்கள் சென்ற பிறகு ராம் டினை லெக் ஸ்பின்னர் ரஷிட் கான் வீழ்த்தினார்.

அதிரடி வீரர் அன்ரோ ரசல் 7 ஓட்டங்களில் ரன் அவுட் ஆனார். டரன் சமி இறங்கும்போது நெருக்கடி கூடியது அவர் 6 ஓட்டங்களில் குல்பதின் நயீப் பந்தில் பிடி கொடுத்து 19ஆவது ஓவரில் வெளியேறினார். அபாயகரமாகத் திகழ்ந்த பிராத்வெய்ட் 2 சிக்சர்களுடன் 13 ஓட்டங்கள் எடுத்து கடைசி ஓவரில் மொகம்ட் நபியிடம் வீழ்ந்தார்.

பந்துவீச்சில் ஆப்கான் அணி சார்பில் மொகமட் நபி, ரஷித் கான் ஆகியோர் தலா 2 விக்கெட்டுகளைக் கைப்பற்றினர்.

ஆட்டநாயகனாக 48 ஓட்டங்களையும் கடைசியில் பிராத்வெய்ட்டின் பிரமாதமான பிடியையும் எடுத்த நஜிபுல்லா ஸ்ட்ரான் தேர்வு செய்யப்பட்டார்.




# மரண அறிவித்தல்

## கைலாசபிள்ளை செல்வராணி



வேலணை வடக்கைப் பிறப்பிடமாகவும், 149/3 கலாசாலை வீதி (பாற்பண்ணை வீதி), திருநெல்வேலியை வசிப்பிடமாகக் கொண்ட கைலாசபிள்ளை செல்வராணி 27.03.2016 ஞாயிற்றுக்கிழமை அன்று இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம் சங்கவதியம்மா தம்பதிகளின் அன்பு மகளும் விசுவலிங்கம்-நல்லம்மா தம்பதிகளின் அன்பு மருமகளும் கைலாசபிள்ளை (வடிவேலு ஸ்ரோர்ஸ் - வங்களாவடி, முன்னாள் வர்த்தகர்) அவரின் அன்பு மனைவியும், மகேந்திரனின் பாசமிகு சகோதரியும், நடேசமூர்த்தி, நாகேஸ்வரி, விக்கினேஸ்வரன், விக்கினேஸ்வரி, மகாலிங்கம் ஆகியோரின் மைத்துனியும், ஜசிந்தா (ஆசிரியர் யா/றோமன் கத்தோலிக்க தமிழ் கலவன் பாடசாலை) ஜெகதீசன் (பொறியியலாளர் சிங்கப்பூர்), ஜெனார்த்தனி, ஜெயகாந்தன் (B.com லண்டன்), ஜெயமாலா (ஆசிரியர் கொக்குவில் இந்துக் கல்லூரி) ஆகியோரின் பாசமிகு தாயாரும், ஜெயக்குமார், ரஜந்தி (சிங்கப்பூர்), சதீஸ் (உரிமையாளர் மதி கலர்ஸ் பிறிண்டர்ஸ்), தர்சினி (B.com), ஆயவன், (ஆசிரிய ஆலோசகர் கிளிநொச்சி வலயம்) ஆகியோரின் அன்பு மாமியாரும், சானுஜன், கயூரன், ரக்சயன் ஆதித்தியா, ஐஸ்வரியா, ஜெய்காஸ், பிரஹாயினி, டயாளினி, தருணிகா, அர்ட்சயன் ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் நாளை 29.03.2016 செவ்வாய்க்கிழமை பி.ப. 2.00 மணியளவில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக கோண்டாவில் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.


இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் அறியத்தருகின்றோம்.

தகவல் : குடும்பத்தினர்

# இலங்கைப் படையினருக்கு அமெரிக்க கப்பலில் பயிற்சி

(கொழும்பு)

கொழும்புத் துறைமுகத்தில் நங்கூரமிட்டுள்ள அமெரிக்கப் போர்க்கப்பலான யு.எஸ்.எஸ். புளூரிட்ஜ்ஜில், இலங்கை கடற்படையினருக்குப் பயிற்சிகள் அளிக்கப்படவுள்ளன. யுஎஸ்எஸ் புளூ ரிட்ஜ் நேற்று முன்தினம் கொழும்புத் துறை முகத்தை வந்தடைந்தது.



இந்தக் கப்பலில் வந்த அமெரிக்க கடற்படையின் 7ஆவது கப்பற் படையணியின் தலைமை அதிகாரியான வைஸ் அட்மிரல் ஜோசப ஓகொயின், நேற்று முன்தினம் பிற்பகல் இலங்கை கடற்படைத் தலைமையகத் துக்குச் சென்று, கடற்படைத் தளபதி வைஸ் அட்மிரல் ரவீந்திர விஜயகுணவர்த்தனவைச் சந்தித்துப் பேச்சு நடத்தினார்.

எதிர்வரும் 31 ஆம்திகதி வரை கொழும்புத் துறைமுகத்தில் தரித்து நிற்கவுள்ள அமெரிக்கப் போர்க்கப்பலில் இலங்கை கடற்படையினருக்குப் பயிற்சிகள் அளிக்கப்படவுள்ளன.

ஆயுதங்களைக் கையாளுதல், சேதங்களைக் கட்டுப்படுத்தல், இளநிலை அதிகாரிகளுக்கான பரிமாற்றப் பயிற்சிகள், மேலதிக நக ர்ப்புறச் சண்டைப் பயிற்சி உள்ளிட்ட பல்வேறு கூட்டுப் பயி ற்சிகளிலும், இருநாட் டுக் கடற்படையினரும் ஈடுபடவுள்ளனர்.

-அத்துடன், எதிர் வரும் 31ஆம் நாள் அமெரிக்கப் போர்க் கப்பல், கொழும்புத் துறைமுகத்தில் இரு ந்து புறப்பட்டு, இல ங்கை கடற்படையி னருடன் கூட்டுப் பயிற்சி ஒன்றை மேற் கொண்ட பின் னரே தமது பயணத்தை தொடரவுள்ளதும் குறிப்பிடத்தக்கது. (இ-5)

# சிறுமியை துஷ்பிரயோகம் செய்ய முயன்ற குடும்பஸ்தர் கைதானார்

பொகவந்தலாவ கிவ் கீழ் பிரிவு தோட்டத்தில் 12வயது சிறுமியை பாலியல் பலாத்காரத்துக்கு முயற்சித்த 35 வயது குடும்பஸ்தர் ஒருவரை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

குறித்த நபரை நேற்று முன்தினம் மாலை பொகவந்தலாவ பொலிஸார் கைது செய்ததாக தெரிவித்தனர்.

பெற்றோர்கள் வீட்டில் இல்லாதபோது வீட்டில் தனித்திருந்த சிறுமியிடம் அயலில் வசிக்கும் நபரொருவர் பாலியல் பலாத்காரம் செய்ய முயற்சித்த வேளை மேற்படி சிறுமி அந்த நபரிடமிருந்து தப்பித்து வந்து தனக்கு ஏற்பட்ட நிலையை விபரித்துள்ளார்.

இச்சம்பவம் நேற்று முன்தினம் பிற்பகல் 2 மணியளவில் இடம்பெற்றதாக சிறுமியின் பெற்றோர் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளனர்.

சம்பவம் தொடர்பில் முறைபாட்டினை பதிவு செய்து கொண்ட பொலிஸார் கிவ் கீழ் பிரிவு தோட்டத்தில் வைத்து கைது செய்து விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். குறித்த சிறுமி பொக வந்தலாவ பிரதேச வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட் டுள்ள தோடு சட்ட வைத்திய அதிகாரியின் மருத்துவ பரி சோதனைக்காக நாவலபபிட்டி மாவட்ட வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்ப டவுள்ளதாக வைத்தியசாலையின் வட்டாரங்கள் தகவல் வெளியிட்டுள்ளன. (இ-5)


## பிறந்தநாள் வாழ்த்துக்கள்

யாழ். வலயக்
கல்விப் பணிப்பாளர்
திரு. நடராஜா
தெய்வேந்திரராஜா
ஆயநல் அன்பு அறிவு நிறை
பொருளாய்
தூய வாழ்வொளிர
பிறந்தநாள் இந்நாளில்
நேயமிகு கல்வி, பொருள்,
வீரம், எழில் பெருக்கும்
நீள் செழித்த சேவைக்காய்
நெஞ்சார வாழ்த்துகின்றோம்.



வாழ்த்துவோர்:
யாழ். கல்வி வலய
அதிபர்கள்

(4147)



## கல்யாண மாலை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
| --- | --- |
| பிறப்பு: 1985 இந்து<br>நட்சத்திரம்: பரணி<br>கி.பா: 39சூரிசெவ் 3 இல்<br>உயரம்: 5'8"<br>தகைமை/தொழில்: BSc, MSc/ ஆசிரியர்<br>தொ.இ: B/4000 | பிறப்பு: 1978 இந்து<br>நட்சத்திரம்: விசாகம்<br>கி.பா: 49செவ் 8 இல்<br>உயரம்: 5'6"<br>தகைமை/தொழில்:ஆசிரியர்<br>தொ.இ: G/4823 |
| பிறப்பு: 1985 இந்து<br>நட்சத்திரம்: அத்தம்<br>கி.பா: 32 சூரிசெவ் 2 இல்<br>உயரம்: 5'3"<br>தகைமை/தொழில்:A/L/அரசதொழில்<br>தொ.இ: B/4019 | பிறப்பு: 1985 இந்து<br>நட்சத்திரம்: பூரம்<br>கி.பா: 16சூரிசெவ் 12 இல்<br>உயரம்: 160cm<br>தகைமை/தொழில்:HNDA/அரச தொழில்<br>தொ.இ: G/4827 |
| பிறப்பு: 1984 இந்து<br>நட்சத்திரம்: சதயம்<br>கி.பா: 25<br>உயரம்: 5'10"<br>தகைமை/தொழில்:பொறியியலாளர் ஆபிரிக்கா<br>தொ.இ: B/4020 | பிறப்பு: 1984 இந்து<br>நட்சத்திரம்: ரேவதி<br>கி.பா: 56செவ் 1 இல்<br>உயரம்: 167cm<br>தகைமை/தொழில்:பட்டதாரி/ஆசிரியர்<br>தொ.இ: G/4828 |
| பிறப்பு: 1982 இந்து<br>நட்சத்திரம்: அத்தம்<br>கி.பா: 21<br>உயரம்: 5'4"<br>தகைமை/தொழில்:MScலண்டன்<br>தொ.இ: B/4021 | பிறப்பு: 1986 இந்து<br>நட்சத்திரம்: உத்தராடம்<br>கி.பா: 16<br>உயரம்: 5'<br>தகைமை/தொழில்:A/L<br>எதிர்பார்ப்பு: வெளிநாடு மட்டும்<br>தொ.இ: G/4840 |

### கல்யாண மாலை

(சர்வதேச திருமண சேவை)
இல. 144, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்
பதிவுக் கட்டணம் ரூபா 1000 மட்டுமே
தொடர்பு:-021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
குறிப்பு: எமது காரியாலயம் காலை 9.00 - 5.00 மணிவரை திறக்கப்படும்.


## இராசி பலன்

28.03.2016
(பங்குனி 15, திங்கட்கிழமை)
சூரிய உதயம் காலை 6.11 மணிக்கு
பஞ்சமி பின்னிரவு 2.59 மணிவரை
அனுசம் முழுவதும்
சுபநேரம் 12.13-1.43 மணிவரை
இராகுகாலம் 7.43-9.13 மணிவரை

வளவன்

கிரகநிலை

| | | | |
| --- | --- | --- | --- |
| சூரி புத | | | |
| சுக் கேது | கிரகநிலை சந்திராஷ்டமம் பரணி | | |
| | | | |
| | சனி, சந், செவ் | | புத ராகு |

**மீனம்:** தடைப்பட்ட காரியங்களில் முன்னேற்றம் காண்பீர்கள், தித்திக்கும் பயணங்கள் இடம்பெறலாம், வரவேண்டிய பணவரவுகள் வந்து சேரலாம்.

**மேடம்:** இறைவழிபாட்டால் இனிமை காண வேண்டிய நாள், தேகாரோக்கியத்தில் கவனம் எடுக்கும் சூழ்நிலை உருவாகும், சிலர் மீது காரணமில்லாமல் கோபம் ஏற்படலாம்.

**இடபம்:** நாடிச் சென்ற கேட்ட இடத்தில் உதவிகள் கிடைக்கலாம், மகிழ்ச்சியான தகவல்கள் வந்து சேரலாம், புதிய பொருட்களை வாங்குவதில் ஆர்வம் காட்டுவீர்கள்.

**மிதுனம்:** தன்னம்பிக்கையும் தைரியமும் அதிகரிக்கும், வம்பு வழக்குகளைச் சமாளித்து வளம் காணும் நாள், செய் தொழிலில் சிறப்புகளைக் காணலாம், போசன சுகமுண்டு.

**கும்பம்:** நல்லவர்களின் அறிவுரையும், ஆதரவும் கிடைக்கும், பொழுது போக்கு விடயங்களில் ஆர்வம் காட்டுவீர்கள், வருமானம் திருப்திதரும் வகையில் அமையும்.

**கடகம்:** எதிர்கால நலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள், பெற்றோர் மீதான பாசம் கூடும், கல்வி நலன் கருதிய செலவுகள் ஏற்படலாம், தொழில் நன்மையுண்டு.

**மகரம்:** பெரிய மனிதர்களின் தொடர்புகள் உங்களின் தகுதியை உயர்த்தும், பணத் தேவைகள் எளிதில் பூர்த்தியாகும், மகிழ்ச்சியான தகவல்கள் வந்து சேரலாம்.

**சிம்மம்:** வெளியூர்த் தொடர்புகள் நன்மைதரும், வாகன சுகமுண்டு, தொழிலை விருத்தி செய்யும் எண்ணம் உருவாகும், மனதில் இனம்புரியாத கற்பனைகள் தோன்றும்.

**தனுசு:** ஆதாயமில்லாத அலைச்சல்கள் இடம்பெறலாம், மாற்றங்களால் ஏற்றம் பெறுவீர்கள், சுப செலவுகள் அதிகரிக்கும் நாள்.

**விருச்சிகம்:** குடும்பத்தினர் உங்களின் குண மறிந்து நடந்து கொள்வர், பண வரவு திருப்திதரும், விரும்பிய காரியங்கள் விரும்பியபடியே நடைபெறலாம்.

**துலாம்:** விலை உயர்ந்த பொருட்களை வாங்கி மகிழும் வாய்ப்புண்டு, கடினமான வார்த்தைகளைத் தவிர்ப்பது நல்லது, சுபகாரியப் பேச்சுக்களில் முன்னேற்றம் காண்பீர்கள்.

**கன்னி:** நீண்ட நாளைய பிணக்குகளில் திடீர் திருப்பங்கள் ஏற்படலாம், கொடுக்கல்-வாங்கல்கள் ஒழுங்காக உங்களின் உதவியை நாடுவீர்கள், போசன சுகமுண்டு.

# வட மாகாணத்தை ஆக்கிரமிக்க பல நடவடிக்கைகள் முன்னெடுப்பு

## முதலமைச்சர் விக்னேஸ்வரன் சுட்டிக்காட்டு

(யாழ்ப்பாணம்)

**வடமாகாணத் தமிழ் மக்களின் நிலை மேலும் மேலும் சங்கடத்திற்கு உட்பட்டு வருகின்றது எனவும் வடக்கை ஆக்கிரமிக்க பல நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன எனவும் வடமாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் சுட்டிக்காட்டியுள்ளார்.**




பாக்கியநாதன் அகிலனின் காலத்தின் விளிம்பு யாழ்ப்பாணத்தின் மரபுரிமைகளும் அவற்றைப் பாதுகாத்தலும் எனும் நூல் வெளியீடு நேற்று ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணியளவில் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி சபாலிங்கம் மண்டபத்தில் இடம்பெற்றது. இதில் பிரதம விருந்தினராக கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

இந்தப் புத்தக வெளியீட்டு நிகழ்வானது சற்று மாறுபட்ட தன்மையைக் கொண்டதாக, மக்களை சிந்திக்கத் தூண்டுவதான ஒரு நிகழ்வாக அமைந்திருக்கின்றது. நூலாசிரியரே வெளியீட்டுரை வழங்கி விட்டார். எமது கலாசார, பண்பாட்டு விழுமியங்கள் எம்மிடம் இருந்து எவ்வாறு சூறையாடப்படுகின்றன. அதனைக் கண்டும் காணாதவாறு வெறுமனே கண் மூடிகளாக வாழும் எம்மவர்களின் நிலை பற்றி இங்கே ஆழமாக எடுத்தியம்பி காலத்தின் விளிம்பின் கருப்பொருளைக் காட்சிப்படுத்தி விட்டார். உண்மையில் என் மனதில் கரிசனையாக எழுந்த கருப்பொருட்கள் பலவற்றைக் "காலத்தின் விளிம்பு" கோடிட்டுக் காட்டுகின்றது. இதற்கு தம்பி அகிலனுக்கு எனது நன்றியும் பாராட்டும் உரித்தாகுக. உதாரணத்திற்கு நூலாசிரியர், வீதி அகலிப்பும் அதனோடு தொடர்புபட்ட கலாசார விழுமியங்களின் இல்லாதொழிப்பும் என்ற விடயத்தில் நூலின் ஆரம்பம் தொட்டு இறுதி வரை ஆங்காங்கே குறிப்பிட்டிருப்பது அதன் தாக்கம் ஒரு கற்ற சமூகத்திடையே எவ்வளவு மன ஆதங்கத்தை ஏற்படுத்தியிருக்கின்றது என்பதைத் தெளிவாகப் புரியவைக்கின்றது.

வடமாகாண வீதி அகலிப்பு மற்றும் வீதிப் புனரமைப்பு தொடர்பாக நான் கடந்த காலங்களில் பல மேடைகளிலும் வெளிநாட்டு இராஜதந்திரிகளிடமும் பேசி வந்திருக்கின்றேன். வீதி அகலிப்பு மற்றும் வீதிப் புனரமைப்பு என்பன மத்திய அரசு ஏதோ தமிழ் மக்களுக்கு உதவி புரிவது போல ஒரு வெளித் தோற்றத்தை அல்லது வெளிப்பாட்டை ஏற்படுத்தியிருந்த போதிலும் உண்மை அதுவல்ல. இவ்வாறான பாரிய செயற்றிட்டங்களை நடைமுறைப்படுத்தும் அதிகாரத்தை மத்திய அரசாங்கம் தன்கைவசம் வைத்து நடைமுறைப்படுத்தி வந்தது என்பதை விட இவ்வாறு அகலிக்கப்பட்ட அல்லது மறுசீரமைக்கப்பட்ட வீதி களின் அமைவிடங்களை உற்று நோக்குவோமாயின் வீதி அகலிப் புக்கான காரணம் எமக்கு இலகு வாகப் புரிந்துவிடும்.

முதலில் இராணுவத்தினர் சுலபமாக எம்மைக் கடுமையான கண்காணிப்பு க்கு உட்படுத்தவே இவ் அகலிப்புக் கள் அல்லது புனரமைப்புக்கள் நடந்தன. மேலும் வட பகுதி மக்களு க்கு உதவி புரிகின்றது போன்ற ஒரு மாயத் தோற்றத்தை உருவாக்கி தென்பகுதி மக்களுக்கும் அங்கு ள்ள வர்த்தகர்களுக்கும் மற்றும் தென் பகுதியில் இருந்து இங்கு வந்து இங்கிருக்கும் வளங்களைப் பெற்றுச் சென்று அல்லது சூறையா டிச் சென்று தென்பகுதியில் பொருள் ஈட்டம் செய்பவர்களுக்கும் உதவி செய்யவே இவ் வீதிகள் அமைக்கப்பட்டன. வீதிகள் அமைப்பதில் எமது சாதாரண மக்களுக்கு இருந்த பங்கு மிகக் குறைவு. வீதிகளில் வேலை செய்யத் தெற்கிலிருந்து வேலையாட்களைத் தேர்ந் தெடுத்திருந்தார்கள். ஏன் என்று கேட்டதற்கு தமிழ் மக்கள் தெருக்களில் வேலை செய்யப் பிரியப்படவில்லை என்றார்கள். பிரதேச சபைகளிடம் ஆள் கேட்டு கோரிக்கை விடுத்தீர்களா என்ற என் கேள்விக்குப் பதிலில்லை.

மேலும் இவ் வீதிகள் அமைக்கப்பட்ட ஒழுங்குகளைப் பார்த்தோமானால் ஒவ்வொரு வீதியும் வடபகுதியில் உள்ள கடல் உணவு வர்த்தகம் அதிகளவில் நடக்கக் கூடிய கடற்கரையை ஒட்டிய கிராமங்கள் வரை நீண்டிருந்ததை அவதானிக்க முடியும். இங்கே எமது மீனவர்கள் கடலில் பிடித்து வருகின்ற மீன் வளங்களைக் குறைந்த விலைகளில் பெற்றுக் கொண்டு அவற்றை லொறிகள் மூலமாகவும் கூலர்கள் மூலமாகவும தென் பகுதிக்கு எடுத்து சென்று வர்த்தக நடவடிக்கைகளில் ஈடுபடுவதற்கு இவ் வீதிகள் பொருத்தமானதாக அமைந்தன.

எமக்கென வீதிகள் போடப்பட்டிருந்தால் ஏ-9 வீதியின் இருமருங்கிலும் இருக்கும் 60 வருடங்களுக்கும்மேலாக எந்தவித செப்பனிடலுங் காணாத தெருக்களும் அந்த காலகட்டத்தில் பழுது பார்க்கப்பட்டிருக்க வேண்டும். அவ்வாறு நடக்கவில்லை. இப்பொழுது நாங்கள் தான் அதற்கான நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளோம்.

இன்று வடமாகாணத் தமிழ் மக்களின் நிலை மேலும் மேலும் சங்கடத்திற்கு உட்பட்டு வருகின்றது. வடக்கை ஆக்கிரமிக்கப் பல நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. அதனை உணர்ந்து நாங்கள் தடுப்பு நடவடிக்கைகள் எடுத்தால் எம்மை அபிவிருத்திக்கு எதிரானவர்கள் என்கின்றார்கள்.

எம்மவர்களில் சிலர் அண்மையில் மத்திய அரசாங்கத்தின் அனுசரணையுடன் 37 மாடிக் கட்டடம் ஒன்றைத் தீவுகளில் ஒன்றில் கட்ட முனைந்தார்கள். சுற்றுச் சூழல் பற்றிய தகைமை அறிக்கை எடுக்காமலே அவ்வாறு கட்ட முனைந்தார்கள். எமது நில அமைப்பின் அடிப்படையில் ஒரு சிறிய தீவில் அப்பேர்ப்பட்ட கட்டடங்கள் கட்டுவதால் ஏற்படக்கூடிய பலத்த எதிர் மறையான தாக்கங்கள் பற்றி உணர்ந்தே நாங்கள் அதனைத் தடுத்தோம். ஆனால் எம்மவரே எங்களைத் தூற்றினார்கள். கிடைக்க இருந்த நன்மையையுங் கை நழுவ விட்டுவிட்டீர்களே என்று சாடினார்கள். அபிவிருத்தி என்ற சொல்லைப் பாவித்து எமது மரபுரிமைகள், சுற்றுச் சூழல், பண்பாட்டு வரலாற்றுச் சின்னங்கள் போன்றவை பறிபோவதை எமது மக்கள் உணராது வாழ்ந்து வருவது எமக்குப் பயத்தையும் பீதியையும் உண்டாககுகின்றன. அகிலனைப் போன்றவர்கள் மிகக் குறைவாக எம்மிடையே வாழ்ந்து வருவது எமது வருங்காலத்தைப் பற்றி நாம் வருத்தமடைய வைக்கின்றது. எமது படித்த இளைஞர் யுவதிகள் எம்மைச் சுற்றி நடப்பவை பற்றி விழிப்பாக இருக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கின்றேன்.

அடுத்து வீடற்றவர்களுக்குப் புதிய வீடுகள் வழங்கும் நடவடிக்கைகளில் ஏதோ ஒரு நாட்டில் குறிப்பிட்ட ஒரு தேவைக்காக முன்னரே தயாரிக்கப்பட்ட pre fabricated வீட்டு அமைப்புகளை இங்கே எடுத்து வந்து எமது தட்ப வெப்ப நிலைகளுக்கு சற்றுமே பொருத்தமற்ற வகையில் அமைத்துக் கொடுப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. எங்கோ பாவிக்க முடியாமல் இருந்த உருக்குக் கம்பிகளை இங்கே அனுப்பி பணமாக்க முயல்வோருக்கு நாங்கள் பக்க பலமாக இருக்க முனைகின்றோம். வீடற்றவர்களுக்கு வீடுகளை அமைத்துக் கொடுப்பது மிகவும் வரவேற்கக்கூடியது. இந்திய வீடமைப்புத் திட்டத்தின் கீழ் சுமார் ஐந்தரை இலட்சம் ரூபா செலவில் பயனாளிகளின் பங்களிப்புடன் ஒரு தொகுதி வீடுகள் அமைத்துக் கொடுக்கப்பட்டன.

பலர் இந்த வீட்டுத்திட்டங்களை பெற்றுக் கொண்டாலும் ஒரு தொகுதியினராலேயே அவ் வீட்டு அமைப்புக்களை முழுமையாக அமைக்க முடிந்தது. ஏனையவர்கள் நிதி பற்றாக்குறை காரணமாக கடன் பெற்றோ அல்லது வேறு ஏதாவது வழியில் ஒரு தொகை பணத்தை பெற்றுக் கொண்டோ அதன்மூலம் அவற்றைப் பூர்த்தி செய்து அவ் வீடுகளில் வசிக்கின்ற போதும் அவர்களும் கடனாளிகளாகவே காணப்படுகின்றார்கள்.

இவ்வாறான வீடுகளை அமைப்பதற்கு சுமார் 8 இலட்சம் ரூபா வரையில் தேவைப் படுவதாகப் புள்ளிவிபரங்கள் தெரிவிக்கின்றன. எனினும் இந்தியா தந்த ஐந்தரை இலட்சம் பெறுமதியான வீடுகள் இனாமாக எமக்குத் தரப்பட்டவை.

ஆனால் தற்போது அமைக்கப்படுகின்ற பொருத்தப்படும் வீடுகளோ சுமார் 21 இலட்சம் ரூபா வரை வீடொன்றின் பெறுமதி வரையறுக்கப்பட்டுள்ளது. இது கடனாகப் பெற்றுக் கட்டப்படுவது. குறை வட்டியுடன் திருப்பிக்கட்ட வேண்டியது. அவ்வீடுகளின் அமைப்பு முறைகள் சூழலுக்குப் பொருந்தாமலும், மாரி காலத்தில் வீட்டினுள் நீர் புகுவதற்கும், வெயிற் காலங்களில் அதி கூடிய வெப்பத்தை உணர வைப்பதற்கும் இலகுவில் தீப்பற்றக் கூடிய அல்லது எரிந்து போய்விடக்கூடிய தன்மைகளைக் கொண்டதாகவும், அதன் பெறுமதி சீமெந்தினால் அமைக்கக் கூடிய இரண்டு வீடுகளை அமைக்கத் தேவைப்படும் செலவை விட அதிகரித்தும் காணப்படுவதாலேயே இது பற்றி நாம் விமர்சிக்க நேரிட்டது. இன்னும் பல குறைபாடுகளை எங்கள் எந்திரிகள் எமக்கு உணர்த்தியிருந்தார்கள்.

தற்போது இவ்வீடுகளை அமைக்கின்ற நிறுவனம் அரசாங்க அதிபர், பிரதேச செயலர்கள் ஊடாக பயனாளிகளைப் பொறியில் விழுத்தக்கூடிய வகையில் ஒரு படிவத்தைத் தயாரித்து அதன் மூலமாக அவர்களின் விருப்பை வலிந்து பெற முயற்சிகள் மேற்கொண்டு வருகின்றனர். வடமாகாண சபையை எந்த விதத்திலும் கலந்தாலோசிக்காமல் எமது கருத்துக்களுக்கு மதிப்புக் கொடுக்காமல் எம் மக்களுக்கு தான்தோன்றித்தனமாக உதவிகள் அளிக்க முன்வருவதே எமக்கு அச்சத்தையும் அதிருப்தியையும் ஏற்படுத்துகின்றது.

இன்று வடபகுதியில் பல்லாயிரக் கணக்கானவர்கள் வீடுகளை இழந்து சிறிய தகரக் கொட்டில்களிலும் ஓலைக் கீற்றுகளுக்குக் கீழும் சொல்லொணாத் துயரங்களுடன் வாழ்கின்றனர். இவ்வாறான குடும்பங்களுக்கு தொலைக் காட்சிப் பெட்டிகள் தருகின்றோம், சூரிய சக்தி மின்சாரம் தருகின்றோம், சமையல் வாயு சிலிண்டர்களுடன் கூடிய அடுப்புக்களைத் தருகின்றோம், மேசை, கதிரை, கட்டில், மெத்தை அனைத்தும் தருகின்றோம் என குறிப்பிடும் போது எந்தவொரு குடும்பத்தவரும் அந்த வீட்டை ஏற்றுக் கொள்ளவே முன்வருவர்.

ஆனால் எமது நடவடிக்கைகள் ஒவ்வொன்றையும் தூர நோக்குடன் பார்க்க வேண்டும். முன்னர் இவ்வாறான கட்டடங்கள் இந்நாட்டில் கட்டப்பட்டு அவை வரவேற்கத்தக்க முறையில் ஏற்றுக் கொள்ளப்பட்டிருக்கின்றனவா? அவ்வாறான கட்டடங்களில் காணப்பட்ட நிறைகள், குறைபாடுகள் என்ன? என்று நாங்கள் ஆராய வேண்டும். அண்மையில் நடந்த கூட்டத்தின் போது ஜனாதிபதியிடம் மேடையில் வைத்தே நான் கேட்டேன் "இவ்வாறான பொருத்தப்படும் வீடுகள் இலங்கையில் வேறெங்காவது கட்டப்பட்டுள்ளதா?" என்று. அவர் சிரித்துக் கொண்டு "இல்லை" என்றார்.

ஆகவே எமது அவலங்களை, வறுமையை, தேவையை முன் வைத்து அரசாங்கம் வெளிநாட்டு நிறுவனங்களுடன் தமக்குச் சார்பான நடவடிக்கைகளில் இறங்குகின்றதோ என்று நாம் நினைக்க வேண்டியுள்ளது. எம் மக்கள் வீடுகளைத்தான் கேட்கின்றார்கள். சிங்கப்பூர் வீடுகளைக் கேட்கவில்லை. சொர்க்காபுரிக்கு வழி கேட்கவும் இல்லை. அதே செலவில் இரண்டு வீடுகள் அழகாக உள்ளூர் பாணியில் கட்டமுடியுமென்றால் சிங்கப்பூர் பாணி எதற்கு? ஒரு வீட்டுப் பணத்தில் இரு குடும்பங்களுக்கு வீடுகள் கிடைக்குமென்றால் ஒருவருக்கு ஏன் தொலைகாட்சிப் பெட்டி பொருத்தப்பட்ட வீடு மற்றவருக்குத் தொலை நோக்கி வீட்டிற்காகத் தவமிருக்கும் பாடு?

இவ்வீடுகளை அறிமுகப்படுத்த இன்னொரு காரணமும் கூறப்படுகின்றது. சமூகம் முன்னிலை அடைவதற்கு ஏற்ற வகையில் சமையல் வாயு அடுப்புக்களைப் பயன்படுத்துவதைத் தாம் அறிமுகம் செய்வதாகக் கூறப்பட்டுள்து. சிலிண்டர் முடிந்ததும் புதிய சிலிண்டர்களை எம்மக்களே வாங்க வேண்டியிருக்கும். விறகு அடுப்புக்கள் பாவித்தால் நெருப்புப் பற்றிக் கொள்வது உறுதி. இவை எல்லாம் வேண்டுமா? வீடற்ற மக்களுக்குத் தரமான உள்ளூர் பாணியிலான வீடுகள் கட்டிக் கொடுப்பது முக்கியமா இல்லையென்றால் அரசியல் ரீதியாகத் தேர்ந்தெடுக்கும் சிலருக்கு மட்டுமே சிங்கப்பூர் பாணியிலான வீடுகளைக் கொடுப்பது முக்கியமா?

அண்மையில் ஒரு பத்திரிகையில் குறிப்பிடப்பட்டிருந்தது பின்வருமாறு - வெளிநாடுகளில் கழிக்கப்பட்ட இரும்புக் குவியல்களை கொண்டுவந்து கொட்டுவதற்கு இலங்கையின் வட கிழக்குப் பகுதிகள் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கின்றது என்று. ஒரு காலத்தில் வளர்ச்சியுற்ற நாடுகளின் கழிவுகளைக் கப்பல்களில் கொண்டுவந்து வளர்ச்சியுறாத நாடுகளில் கொட்டிச் சென்றமை உங்களுக்கு நினைவிருக்கும். ஆகவே எம் கண்ணெதிரே எமது வாழ்க்கைமுறை மாற்றப்படுகின்றது. அதுவும் எமக்கு நன்மை தருவதாகக் கூறி மாற்றப்படுகின்றது. இவற்றை மக்களாகிய நாங்கள் கருத்துக்கு எடுக்க வேண்டும்.

எமது மக்களுக்கு வீடுகளைப் பெற்றுக் கொடுப்பதற்கு மத்திய அரசை விட மாகாண அரசு கடும் பிரயத்தனங்களில் ஈடுபட்டு வருகின்றது. 21 இலட்சம் ரூபா செலவில் அமைக்கப்படக் கூடிய இந்தப் புதிய ஏலவே தயாரிக்கப்பட்ட பொருத்து வீடுகளை அமைப்பதற்கு பதிலாக சீமெந்திலான உறுதியான, பொருத்தமான வீடுகளை அமைக்க இந்நிதி பயன்படுத்தப்பட்டால் 65 ஆயிரத்திற்குப் பதிலாக 150 ஆயிரம் பேருக்கு இவ் வீடுகளை வழங்க முடியும் என்ற கருத்தையே நாம் வலியுறுத்தி வருகின்றோம். (இ-5-9)

# 99 ஆம் நாள் நினைவஞ்சலி

பிறப்பு:- 2001-03-28

இறப்பு:-2015-12-21

## சுதாகர் லதுஷாஜினி



மண்ணில் மலர்ந்த நாள் வந்ததம்மா மகளே!
மடியில் மழலையாக ஏந்திய திருநாள் வந்ததம்மா
மனமெல்லாம் பூத்து மகிழ்ந்ததம்மா! மழலையாய் மங்கையாய்
பருவங்கள் பார்த்து வளர்த்தோமடா- கண்ணே!
பதினான்கு வயதினிலே எய்த முன்னே பாதி வழி போனதேனம்மா
பூவாக மலர்ந்தாயம்மா பூப்புனித நீராட்டும் செய்தோமடா
காயாக கனியாக மாறுமுன்னே- கண்மணியே
கல்லறை வாசலை அடைய நினைத்தது மேனடா?
மணமகளாய் அலங்காரம் செய்து மகிழ்வடையும் ஒரு காலம் வருமென்று
மனதிற்குள் களிப்படைந்து மனமுடைந்து போனோமடா லதுக் குட்டியே!

**விண்ணுலக வாழ்வில் நீயம்மா நீடூழி வாழ**
**வாழ்த்திடும் உன் அப்பா, அம்மா, அக்கா**

**K.K.S., றோட், கோண்டாவில் மேற்கு,**
**கோண்டாவில், இணுவில்.**

(4032)

# 2016 ஆம் ஆண்டுக்கான 1 ஆம் பருவகால கல்வி செயற்பாடுகள்

யாழ்ப்பாணம் உயர் தொழில்நுட்பவியல் நிறுவனத்தின் முழுநேர மற்றும் பகுதிநேர மாணவர்களுக்கான 2016-1 ஆம் பருவகால கல்விச் செயற்பாடுகள் அனைத்தும் பின்வரும் திகதிகளில் ஆரம்பிக்கப்படும்.

முழுநேர மாணவர்களுக்கு- 28.03.2016 (திங்கட்கிழமை) பகுதிநேர மாணவர்களுக்கு- 02.04.2016 (சனிக்கிழமை) என யாழ்ப்பாணம் உயர் தொழில்நுட்பவியல் நிறுவன உதவிப் பணிப்பாளர் யோ. ரிசாந்தன் அறிவித்துள்ளார். (இ

# மரண அறிவித்தல்

## திருமதி மகேஸ்வரி வைத்தியநாதர்



(இளைப்பாறிய ஆங்கில ஆசிரியை- தாவடி இந்து தமிழ் கலவன் பாடசாலை)

யாழ்.கொக்குவில் தாவடியை பிறப்பிடமாகவும் கொழும்பு, கனடா ஆகிய இடங்களை வதிவிடமாகவும் கொண்ட மகேஸ்வரி வைத்தியநாதர் அவர்கள் 25.03.2016 வெள்ளிக்கிழமை அன்று கனடாவில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான அப்பாப்பிள்ளை செல்லாச்சி தம்பதியினரின் இளைய மகளும் திரு.திருமதி கந்தையா தம்பதியினரின் மருமகளும் காலஞ்சென்ற வைத்தியநாதர் (ஆங்கில ஆசிரியர்-கொக்குவில் இந்துக் கல்லூரி) அன்பு மனைவியும்,

சிவபாலன் (கனடா), ஞானலிங்கம் (ஜேர்மனி), சிவசங்கரன் (இங்கிலாந்து), சிவகுமாரன் (இங்கிலாந்து), சிவநேசன் (முன்னாள் இலங்கை மத்திய வங்கி அதிகாரி- ஐக்கிய அமெரிக்கா), சிவசக்தி (கொக்குவில் இந்துக் கல்லூரி முன்னாள் ஆசிரியை) (கனடா) ஆகியோரின் பாசமிகு தாயாரும் காலஞ்சென்றவர்களான சிவகுருநாதர் சிதம்பரநாதர், ரத்தினம், நவரட்ணம் ஆகியோரின் இளைய சகோதரியும் லலிதகுமாரி, குமுதினி, தமிழ்செல்வி, துளசி, யசோதா, யுவிந்தீஸ்வரன் ஆகியோரின் அன்பு மாமியாரும் காயத்திரியின் சிறிய தாயாரும் ஆவார். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

**சேச் லேன், தாவடி,**
**கொக்குவில்.**
**077 435 7943**

**தகவல்:**
**ரி.சோமசுந்தரம்**
**திருமதி தமயந்தி சோமசுந்தரம்**

(4031)

# 45 ஆம் நாள் நினைவு



## அமரர் பரஞ்சோதி கண்ணன்

பிறப்பு:-1974.12.26 இறப்பு:-2016.02.14

**அன்பின் இருப்பிடமாய்**
**பாசத்தின் பிறப்பிடமாய்**
**பண்பின் இலக்கணமாய்**
**வாழ்ந்து வழிகாட்டிய**
**எமது அன்பின் குல விளக்கே**
**அவனிதனில் எமை விட்டுப்பிரிந்து**
**நாட்கள் 45 ஆகிவிட்டது.**
**ஆனால் நீர் எம் மனதைவிட்டு**
**என்றுமே நீங்கவில்லை**

மூங்கிலாறு தெற்கு,
தேராவில்.

குடும்பத்தினர்
மனைவி- சகுந்தலா,
பிள்ளைகள்- திவா, துவா, சூரியவதி.

(சி-4150)

# இராணுவ ஆக்கிரமிப்புக்குள்ளாகியுள்ள கேப்பாபிலவு பொதுமக்களின் பூர்வீக நிலங்கள் விடுவிக்கப்பட வேண்டும்

## சாந்தி எம்.பி. வலியுறுத்து

(பனிக்கன்குளம்)

பொதுமக்களின் காணிகளை ஆக்கிரமித்து அவர்களின் வாழ்வாதாரத்தை பறித்து உரிமைகளை மறுப்பதுதான் நல்லாட்சியா? இராணுவ ஆக்கிரமிப்பிற்குள்ளான கேப்பாபிலவு பொதுமக்களின் பூர்வீக நிலங்கள் விடுவிக்கப்பட வேண்டும் என பாராளுமன்ற உறுப்பினர் திருமதி சாந்தி சிறிஸ்கந்தராசா கோரிக்கை விடுத்துள்ளார்.

இராணுவத்தினரால் பல்வேறுபட்ட வகையிலும் ஆக்கிரமிக்கப்பட்டு கேப்பாபிலவு கிராமத்து மக்கள் எதிர்கொண்டுவரும் பிரச்சினைகள் தொடர்பில் அவர் ஊடகங்களுக்கு அறிக்கையொன்றை அனுப்பிவைத்துள்ளார். அவ்வறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது.

எமது மக்கள் மீதான அடக்குமுறைகளே இனப்பிரச்சினையின் ஆரம்பப் புள்ளியாக அமைந்திருந்தன என்பதனை இவ் அரசாங்கம் தெளிவாக புரிந்த கொள்ளல் வேண்டும். இந்நிலையில் கேப்பாபிலவு கிராமம் இராணுவத்தினரால் பல்வேறு வகையிலும் ஆக்கிரமிக்கப்பட்டு அப்பகுதியில் பூர்வீகமாக வாழ்ந்த மக்களை வெளியேற்றி அம்மக்களின் வீதிப்போக்குவரத்துக்களை முடக்கி இயல்பு வாழ்க்கை வாழ்வதற்கும் தமது தொழில்களை செய்து வாழ்வாதாரத்தை கட்டியெழுப்புவதற்கும் பாரிய தடையாக இராணுவம் இருந்து வருகின்றது.

கேப்பாபிலவு கிராமசேவகர் பிரிவின் சூரிபுரம்,கேப்பாபிலவு, கேப்பாபிலவு குடியிருப்பு ஆகிய மூன்று கிராமங்களிலுள்ள 520 ஏக்கர் காணி, இராணுவத்தினரின் கைவசம் உள்ள நிலையில், இக் கிராமங்களைச் சேர்ந்த 250இற்கும் மேற்பட்ட குடும்பங்கள் மாதிரிக் கிராமங்களில வாழ்ந்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

மேலும் மீள்குடியேற்றம் இடம்பெற்று ஏழு வருடங்கள் கடந்தும் மக்கள் பாவனைக்கு அனுமதிக்கப்படாது இராணுவத்தினர் பயன்படுத்திவருகின்ற புதுக்குடியிருப்பில் இருந்து கேப்பாபிலவினூடாக வற்றாப்பளை செல்கின்ற மூன்று கிலோ மீற்றர் வரையான இவ் வீதியானது மக்கள் போக்குவரத்துக்கு அனுமதிக்கப்படாத நிலையில் இப்பகுதி மக்கள் தமது போக்குவரத்துத் தேவைகளுக்காக தூரம் கூடிய செப்பனிடப்படாத பாதுகாப்பற்ற மாற்று வழியையே பயன்படுத்தி வருகின்றனர்.

இந்நிலையில் இவ்வீதியினை மக்கள் பயன்பாட்டுக்கு வழங்கமுடியாது என பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் தெரிவித்துள்ளமையின் மூலமாக தொடர்ந்தும் எமது மக்களின் உரிமைகள் மீதான கட்டுப்பாடுகளை இவ அரசாங்கம் மேற்கொள்கின்றது.எமது மக்களின் இயல்பு வாழ்வை பறிக்கும் இச்செயலானது கண்டனத்திற்குரியதாகும். அவ்வீதி மக்கள் போக்குவரததிற்காக அனுமதிக்கப்பட வேண்டும்.

கேப்பாபிலவில் ஆக்கிரமிக்கப்பட்டுள்ள பொதுமக்களின் காணிகள், பாடசாலை, பொதுமண்டபம், கோயில்கள், வீதிகள் என்பனவற்றை உள்ளடக்கியதாக காணப்படும் பெருமளவான நிலப்பரப்புக்களும் விடுவிக்கப்பட்டு எம் மக்கள் தமது சொந்த நிலங்களில் இயல்பு வாழ்க்கை வாழ வழியேற்படுத்தப்படவேண்டும்.

எமது மக்களின் காணிகளும் நிலங்களும் இராணுவத்தினரின் ஆக்கிரமிப்பிற்குள் தொடர்ச்சியாக இருந்து வரும் நிலையானது நல்லாட்சி அரசுக்கோட்பாட்டிற்கு எதிர்மறையான இயல்புகளையே வெளிப்படுத்துகின்றது.

எமது மக்கள் இன்றும் தமது சொந்த நிலங்களையே கோரி போராடுகின்றனர். இதனைக்கூட இவ்வரசாங்கத்தால் ஏன் புரிந்து கொள்ள முடியவில்லை. பொது மக்களின் காணிகளை ஆக்கிரமித்து அவர்களின் வாழ்வாதாரத்தை பறித்து அவர்களின் உரிமைகளை மறுப்பதுதான் நல்லாட்சியா?

ஆகவே இந்த அரசை நான் வேண்டுவது எமது மக்களது அடிப்படைத் தேவைகளை, அடிப்படைப் பிரச்சினையை இனம்கண்டு அவர்களது செந்த நிலங்களை அவர்களிடம் கையளித்து எமது மக்களின் இயல்பு வாழ்கைக்கு வழிசமைத்து கொடுக்க வேண்டும் என அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (2-281)




# 65 ஆயிரம் வீட்டுத்திட்ட பிரச்சினைக்கு மக்களின் கருத்துக்கள் கட்டாயம் அவசியம்

## வடக்கு புனர்வாழ்வு அமைச்சர் தெரிவிப்பு

(குருமன்காடு)

வடக்கு, கிழக்கு பகுதியில் அமைக்கப்படவுள்ள 65 ஆயிரம் வீட்டுத்திட்டம் தொடரபான சர்ச்சைகள் தீர்க்கப்பட்டு மக்கள் விரும்பும் வகையில் வீடுகள் அமைக்கப்பட வேண்டும் என வடக்கு மாகாண புனர்வாழ்வு அமைச்சர் ப.சத்தியலிங்கம் தெரிவித்துள்ளார்.

வவுனியாவில் இடம்பெற்ற நிகழ்வொன்றின் போது 65 ஆயிரம் வீட்டுத்திட்ட சர்ச்சை குறித்து அமைச்சரிடம் கேள்வி எழுப்பிய போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்தும் தெரிவிக்கையில்,

நான் அந்த வீட்டைச் சென்று பார்த்தேன். அதில் பலருக்கும் பலவிதமான சந்தேகங்கள் இருப்பது இயற்கையான விடயம். இது வரையில் வடக்கிலோ, கிழக்கிலோ இவ்வாறான வீடு வழங்கப்படவில்லை. இதனால் பல சந்தேகங்கள் எல்லா மட்டத்திலும் இருக்கின்றன. பிரயோசனமானதா? இயற்கைக்குப் பொருத்தமானதா? எவ்வளவு காலம் நிலைத்திருக்கும் என்ற மாதிரியான கருத்துக்கள் இருக்கின்றன. வடக்கு மாகாண முதலமைச்சர் இது தொடர்பில் தனது கருத்தை தெரிவித்திருந்தார். இதேபோல் வீடு வழங்கல் கூட்டத்தில் மீள்குடியேற்ற அமைச்சர் இந்த வீடு தொடர்பான தன்னுடைய கருத்துக்களை அங்கு தெரிவித்திருந்தார்.

ஆனால் எங்களுடைய ஜனாதிபதி கூறிய விடயத்தையே நானும் கூறுகின்றேன். என்னவென்றால் அமைச்சர்களோ, அதிகாரிகளோ அந்த வீட்டில் வாழப்போவதில்லை. அந்த வீட்டில் பாதிக்கப்பட்ட மக்கள் மற்றும் மீள்குடியேறும் மக்களே வாழப்போகிறார்கள். மக்கள் அந்த வீடு தமக்கு பொருத்தமானதா, இல்லையா என்பதை தீர்மானிக்க வேண்டும்.

மக்களுடைய கருத்தை அரசாங்கம் கடடாயம் அறிய வேண்டும். அதன் அடிப்படையில் தான் நடவடிக்கை எடுக்க வேண்டும். ஆனால் பொதுவாக இந்த வீடு பொருத்தமானதா? என்ற சந்தேகம் இருக்கின்றது. இந்த வீட்டை பின்னர் பெருப்பிக்க முடியாத நிலை வரும் என்று கூட மக்கள் என்னிடம் கூறினார்கள். எவ்வளவு காலம் இருக்கும் என குழப்பம் இருக்கிறது. இதனால் இந்த சந்தேகங்களை மத்திய மீள்குடியேற்ற அமைச்சு தீர்க்க வேண்டும்.

ஆகவே ஜனாதிபதி கூறுவது போன்று மக்கள் வாழும் வீடுகள் அவை. அவை தொடர்பில் அவர்களே தீர்மானிக்கட்டும். மக்களுடைய கருத்துக்கள் கட்டாயம் பெறப்பட்டே இறுதி முடிவு எடுக்கப்பட வேண்டும் என்றார்.(2-250)

# திடீரென ஏற்பட்ட தீயினால் கடையும் வீடும் எரிந்து நாசம்



(கிளிநொச்சி)

வீட்டில் இருந்தவர்கள் அனைவரும் கோவிலுக்குச் சென்றிருந்த வேளை ஸ்ரிக்கர் கடையொன்றும் அதனுடன் இணைந்த வீடும் முற்றாக எரிந்து நாசமானது.

இச் சம்பவம் நேற்று முன்தினமிரவு 11 மணியளவில் கிளிநொச்சி உதயநகர் கிழக்கு பகுதியில் நடைபெற்றது.

இது தொடர்பில் தெரியவருவதாவது,

மேற்படி பகுதியில் வீட்டுடன் கூடிய ஸ்ரிக்கர் கடையொன்றும் அமைக்கப் பட்டிருந்தது.

வீட்டிலிருந்த அனைவரும் கோவிலுக்கு சென்றிருந்த வேளை திடீரென ஸ்ரிக்கர் கடையினுள் தீப்பற்றியது.

இதனை அறிந்த அயலவர் கள் வீட்டார்களுக்கு தகவல் வழங் கினர்.

எனினும் தீயைக் கட்டுப்படுத்த முடியாமையால் கடையும் வீடும் முற்றாக எரிந்தது.

வீட்டினுள் வைக்கப்பட்டிருந்த தளபாடங்கள், 50 ஆயிரம் ரூபா பணம், உடுபுடைவைகள், ஆவணங்கள் என்பன் முற்றாக எரிந்து நாசமாகின.

சம்பவம் அறிந்த கிளிநொச்சி பொலிஸார் அவ்விடத்திற்கு விரைந்து விசாரணையை முன்னெடுத்தனர். (2-271)


# நூல்வெளியீடும் கலாசார விழாவும்

கிளிநொச்சி கரைச்சி பிரதேச செயலக கலாசார பேரவையின் கலாசார விழா நாளை செவ்வாய்க்கிழமை பி.ப. 2 மணிக்கு கிளிநொச்சி கூட்டுறவு மண்டபத்தில் கரைச்சி பிரதேச செயலர் கோ.நாகேஸ்வரன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந் நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர் சுந்தரம் அருமைநாயகம் கலந்து கொண்டு சிறப்பிக்கவுள்ளார்.

சிறப்பு விருந்தினர்களாக மேலதிக அரச அதிபர் சி.சத்தியசீலன், உதவி மாவட்டச் செயலர் த.பிருந்தாகரன், வடக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்கள உதவிப் பணிப்பாளர் செ.வனஜா, கௌரவ விருந்தினாகளாக கிளிநொச்சி மாவட்ட கலாசார உத்தியோகத்தர் மா.அருள்சந்திரன், சைவப்புலவர் எஸ்.சித்தாந்தரத்தினம், க.பத்மானந்தன் ஆகியோர் கலந்து சிறப் பிக்கவுள்ளனர்.

அன்றையதினம் கரைஎழில் 2015 நூல் வெளியீடும் கௌரவிப்பு நிகழ்வுகள், கலை நிகழ்வுகள் என்பன இடம்பெறும்.(2-254)








உலக காசநோய் தினம் மார்ச் 24 ஆம் திகதி அனுஷடிக்கப்பட்டது. இந்நிலையில் காசநோய் தொடர்பில் விழிப்புணர்வூட்டும் நிகழ்வு வவுனியா வைத்தியசாலை காசநோய் தடுப்பு பிரிவினரால் முன்னெடுக்கப்பட்டது. காசநோய் தொடர்பான விழிப்புணர்வை மக்களுக்கு ஏற்படுத்தும் வகையில் முச்சக்கர வண்டிகளில் காசநோய் தொடர்பான துண்டுப் பிரசுரங்கள் ஒட்டப்பட்டு நகரில் ஊர்வலம் ஒன்று இடம்பெற்றதுடன், மக்களுக்கு விழிப்பூட்டும் துண்டுப் பிரசுரமும் வழங்கப்பட்டது. இதில் காசநோய் தடுப்புப் பிரிவு வைத்திய அதிகாரிகள், தாதிய மாணவர்கள், பொலிஸார், முச்சக்கரவண்டி சாரதிகள் எனப் பலரும் கலந்து கொண்டு விழிப்புணர்வு நடவடிக்கையில் ஈடுபட்டதைப் படங்களில் காணலாம்.


(படங்கள்:- குருமன்காடு செய்தியாளர்)


# முல்லைத்தீவில் மூன்றாம் நாள் அமர்வு











காணாமற்போனோர் தொடர்பில் விசாரணைகளை நடத்துவதற்கு ஜனாதிபதி ஆணைக்குழுவின் அமர்வுகள் கடந்த 25 ஆம் திகதி ஆரம்பமாகி எதிர்வரும் 31 ஆம் திகதி வரை கிளிநொச்சி, முல்லைத்தீவு, மன் னார், வவுனியா ஆகிய மாவட்டங்களில் நடை பெறும். இதற்கமைய முல்லைத்தீவு மாவட்டத்திற் கான விசாரணைகள் கடந்த 25 ஆம் திகதி ஆரம்பமாகி நேற்று ஞாயிற் றுக்கிழமையுடன் நிறைவு பெற்றன. இதில் நேற்று நடைபெற்று முடிந்த 3 ஆவது நாள் அமர்வின் போது...

(படங்கள்:-பனிக்கன்குளம் செய்தியாளர்)





# வடகொரிய ஜனாதிபதிக்கெதிராக தென்கொரியா துண்டுப்பிரசுரம்

வட கொரிய ஜனாதிபதி கிம் ஜாங்-உன்னின் அரசுக்கு எதிரான துண்டுப் பிரசுரங்களை அந்த நாட்டுக்குள் தென்கொரிய தன்னார்வலர்கள் பலூன்கள் மூலம் விநியோகித்தனர்.

தென் கொரியப் போர்க் கப்பலான செயோனன், கடந்த 2010 ஆம் ஆண்டு கடலுக்குள் மூழ்கியதில் 46 மாலுமிகள் உயிரிழந்தனர்.

அந்தக் கப்பலை வட கொரிய நீர்மூழ்கிக் கப்பல்தான் குண்டு வீசி மூழ்கடித்ததாக தென் கொரியா குற்றம் சாட்டி வருகிறது.

இந்த நிலையில், அந்தக் கப்பல் மூழ்கியதன் 6 ஆவது ஆண்டு நினைவு தினத்தைக் குறிக்கும் வகையில், எல்லைப் புற நகரான பாஜூவிலிருந்து வட கொரியாவுக்குள் அந்த நாட்டு அரசுக்கு எதிரான துண்டுப் பிரசுரங்களை தன்னார்வலர்கள் அனுப்பினர். வட கொரியாவை விட்டு வெளியேறி, தென் கொரியாவில் தஞ்சமடைந்துள்ள பலரும் இதில் கலந்து கொண்டனர். மூன்று ராட்சத பலூன்கள் மூலம் 50 ஆயிரம் துண்டுப்பிரசுரங்களை அவர்கள் அனுப்பினர். இதுபோன்ற துண்டுப் பிரசுரங்கள் தங்கள் நாட்டுக்குள் விநியோகிக்கப்படுவதற்குப் பதிலடியாக, வட கொரியா கடுமையான எச்சரிக்கைகளை விடுப்பது வழக்கம்.

கடந்த 2014 ஆம் ஆண்டு இதுபோல் அனுப்பப்பட்ட பலூன்களை வட கொரிய வீரர்கள் சுட்டு வீழ்த்த முயன்றபோது, அவர்களுக்கும் தென் கொரிய வீரர்களுக்கும் இடையே சிறிய அளவிலான துப்பாக்கிச் சண்டை நடைபெற்றது நினைவுகூரத்தக்கது.

வட கொரியா கடந்த ஜனவரி மாதம் ஐதரசன் அணுகுண்டு பரிசோதனையில் ஈடுபட்டதைத் தொடர்ந்து கொரிய தீபகற்பத்தில் பதற்றம் அதிகரித்துள்ள நிலையில், தற்போது பலூன்கள் மூலம் துண்டுப் பிரசுரங்கள் விநியோகிப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-5)

# ஐ.எஸ்.தீவிரவாதிகள் தாக்குதல் நடத்தவிருக்கும் அடுத்த நாடு எது?

உலக நாடுகளுக்கு அச்சுறுத்தலாக இருந்துவரும் ஐ.எஸ். தீவிரவாதிகள் இங்கிலாந்து மற்றும் பிரான்சின் ஈபிள் கோபுரம் மீது தாக்குதல் நடத்தவிருக்கிறோம் என்பது குறித்த வீடியோ ஒன்றை வெளியிட்டுள்ளனர்.

தீவிரவாதிகள் வெளியிட்டுள்ள இந்த வீடியோவுக்கு அவநம்பிக்கை மேற்கத்தேய நாடுகள் என தலைப்பிட்டுள்ளனர்.

பிரான்ஸ் தலைநகர் பாரீஸில் உலக அதிசயங்களில் ஒன்றாக திகழும் 'ஈபிள் கோபுரம்' குண்டு வைத்து தகர்க்கப்பட்டு தரையில் சாய்வது போன்று சித்தரிக்கப் பட்டுள்ளது.

பின்னர் ரத்த ஆறு ஓடி அது அமெரிக்காவின் டொலர் நோட்டுகள், துப்பாக்கிகள், கத்திகள் மற்றும் துப்பாக்கி குண்டுகள் வைக்கப்பட்டுள்ள மர மேசையின் மீது துளிதுளியாக விழுவது போன்று காட்சிவடிவமைப்பு செய்யப்பட்டுள்ளது.

மேலும் இணையத்தளத்தில் அடுத்த படியாக எந்த நாட்டின் மீது தாக்கு தல் நடத்த வேண்டும் என்று ஐ.எஸ். தீவிரவாதிகளின் ஆதரவாளர்களிடம் வாக்கெடுப்பு நடத்தப்பட்டது.

அதில், இங்கிலாந்து மீது தாக்குதல் நடத்த அதிக ஆதரவு வாக்குகள் விழுந்தன. மேலும் அடுத்தபடியாக ஈபிள் கோபுரத்தில் எந்த கலரில் வெளிச்சம் வீச செய்ய வேண்டும் என்றும் வாக்கெடுப்பு நடத்தப்பட் டது.

ஏனெனில் சமீபத்தில் பிரஸல்ஸ் நகரில் ஐ.எஸ்.தீவிரவாதிகள் நடத்திய தாக்குதலை தொடர்ந்து ஈபிள் கோபுரத்தில் பெல்ஜியம் தேசிய கொடியின் நிறம் விளக்குகள் மூலம் ஒளிரூட்டப்பட்டிருந்தது குறிப்பிடத்தக்கது. (இ-5)

# தற்கொலைத் தாக்குதல்கள்; ஏமனில் 22 பேர் உயிரிழப்பு

யேமனின் இரண்டாவது பெரிய நகரமான ஏமனில் அரசுப் படையினர் மீது இஸ்லாமிய தேச (ஐ.எஸ.) பயங்கரவாதிகள் நிகழ்த்திய தற்கொலைத் தாக்குதல்களில் 10 பொதுமக்கள் உட்பட 22 பேர் உயிரிழந்தனர்.

ஏமன் நகரின் ஷாப் புறநகர்ப் பகுதியில் அமைந்துள்ள இரு இராணுவச் சாவடிகளில், தற்கொலை குண்டுத் தாக்குதல்கள் நிகழ்த்தப் பட்டன. அதன் தொடர்ச்சியாக, இராணுவச் சாவடிகளையொட்டியுள்ள இராணுவ முகாமைக் கைப்பற்றும் நோக்கில், பயங்கரவாதிகள் தாக்குதல் தொடுத்தனர். இதையடுத்து, அரசுக்கு ஆதரவான கூட்டுப் படையைச் சேர்ந்த ஹெலிகொப்டர் மூலம் பயங்கரவா திகள் மீது தாக்குதல் நிகழ்த்தப்பட்டது. மற்றொரு சம்பவத்தில், ஏமனின் மையப் பகுதியில் அமைந்துள்ள மன்ஸூரா இராணுவச் சாவடியில், அம்புலன்ஸில் மறைத்து வைக்கப்பட்டிருந்த வெடிகுண்டை தற்கொலைப் படை பயங்கரவாதி வெடிக்கச் செய்தார்.

இந்த மூன்று தாக்குதல்களிலும் 10 பொதுமக்கள் உட்பட 22 பேர் உயிரிழந்தனர் என்று தகவல்கள் தெரிவிக்கின்றன. ஏமன் தலைநகர் சனா உள்ளிட்ட கணிசமான பகுதிகளை ஷியா பிரிவைச் சேர்ந்த ஹூதி கிளர்ச்சியாளர்கள் கட்டுப்பாட்டுக்குள் வைத்துள்ளனர். அவர்களுக்கு எதிராகப் போரிட்டு வரும் அரசுப் படையினரும், சவுதி கூட்டுப் படைகளும் கடந்த வாரம் முதல் ஐ.எஸ். பயங்கரவாதிகளுக்கு எதிரான தாக்குதல் நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றன.

இந்த நிலையில், அரசுப் படையினரைக் குறி வைத்து ஐ.எஸ். பயங்கரவாதிகள் தற்கொலைத் தாக்குதல்களை நிகழ்த்தியுள்ளனர். (இ-5)

# போதையற்ற சமூகத்தை நாம் உருவாக்க முடியும்

எங்களது இனத்தவர் முன்னைய காலங்களில் எவ்வாறு வாழ்ந்தார்கள், நாங்கள் யார் என்பதை ஒவ்வொருவரும் உணர்ந்தால் மட்டுமே போதையற்ற சமூகத்தை உருவாக்க முடியும் என பளை வைத்தியசாலையின் அத்தியட்சகர் வைத்திய கலாநிதி சி.சிவரூபன் தெரிவித்துள்ளார்.

போதைப்பொருள் விழிப்புணர்வு மற்றும் சிறுவர் பாதுகாப்பு அமையத்தினரால் கடந்த செவ்வாய்க்கிழமை கைதடியில் நடத்தப்பட்ட இளைஞர் யுவதிகளை வலுப்படுத்தும் செயற்றிட்டம் எனும் செயலமர்வில் கலந்துகொண்டு விரிவுரை ஆற்றும் போதே இவ்வாறு தெரிவித்தார்.

இன்று எமது சமுதாயத்தில் போதைப் பாவனை மிகவும் பாரிய பிரச்சினையாக உருவெடுத்துள்ளது. கட்டுப்படுத்த முடியாத போதைப பாவனையால் பல்வேறு சமூகப்பிறழ்வுகள், துஷ்பிரயோகங்கள் இடம் பெறுகின்றன.


இவற்றை கட்டுப்படுத்துவதற்கு பல தரப்பினரும் பல்வேறுபட்ட விழிப்புணர்வு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றனர். ஆனால் இவற்றுக்கெல்லாம் மேலாக ஒவ் வொருவரும் நாம் யார் எமது இனம் எவ்வகையான சாதனைகளை புரிந்து உலகமே திரும்பி பார்க்கும் வகையில் வாழ்ந்தார்கள் என் பதை உணர்ந்து கொண்டால் மட்டுமே போதைப்பாவனையில் இருந்து விடுபட முடியும்.

உதாரணமாக ஒரு பகுதியில் மதிவெடி உள்ளதென்றால் உள்ளே செல்ல வேண்டாம் என எச்சரிக்கை பதாகை வைக்கலாம் அல்லது குறித்த பகுதியைச் சுற்றி முள்வேலிகள் அமைக்கலாம் அல்லது மிதிவெடி வெடித்தால் கால், கை போன்ற உடல் உறுப்புக்களை மட்டுமன்றி உயிரையும் இழக்க நேரிடும் என விழிப்புணர்வு செய்யலாம். அதனையும் மீறி உள்ளே சென்று பாதிக்கப்படுபவர்களை ஒன்றும் செய்ய முடியாது.


அதேபோல்தான் போதைப் பாவனையால் வரும் பாதிப்புக்கள் குறித்து நாம் விழிப்புணர்வூட்டலாம். அதனையும் மீறி பயன்படுத்துபவர்கள் குறித்து என்ன செய்ய முடியும். எனவே நாங்கள் எங்களை நாம் யார் என உணர்ந்து போதையில் இருந்து விடுபட்டு புதியதொரு ஒழுக்கமிகு சமுதாயத்தை உருவாக்க வேண்டும் என தெரிவித்தார். (இ-89)





பருத்தித்துறை தும்பளை தெற்கு ஸ்ரீமனோன்மணி அம்மன் தேவஸ்தானத்திற்கு அருகில் அமைக்கப்பட்ட நினைவு மண்டபம் ஒன்று அண்மையில் திறந்து வைக்கப்பட்டது. இந்நிகழ்வில் பூநகரி பிரதேச செயலர் சி.ச.கிருஷ்ணேந்திரன் பிரதம விருந்தினராக கலந்து கொண்டிருந்தார்.




தென்மராட்சி மந்துவில் மேற்கு கேலத்து அம்மன் ஆலயத்திற்கு மந்துவில் மேற்கைச் சேர்ந்த லண்டனில் வசித்து வருபவர்களான ஹரிராம் சங்கீதா தம்பதியினர் இடப வாகனம் ஒன்றை அண்மையில் அன்பளிப்பு செய்தனர்.




இலங்கை பொலிஸ் திணைக்களத்தின் 152 ஆவது ஆண்டு நிறைவினை முன்னிட்டு பருத்தித்துறைப் பொலிஸாரினால் நடத்தப்பட்ட இரத்ததான முகாம் ஒன்று அண்மையில் நடைபெற்றது. பருத்தித்துறை பொலிஸ் நிலைய தலைமைப் பொலிஸ் பொறுப்பதிகாரி நுவான் பி.டந்தனா ராயண தலைமையில் நடைபெற்ற இவ் இரத்ததான முகாமில் காங்கேசன்துறைப் பொலிஸ் பொறுப்பதிகாரி, பருத்தித்துறை பொலிஸ் உத்தியோகத்தர்கள், இராணுவத்தினர், கடற்படையினர்,பொதுமக்கள் எனப் பலர் கலந்து கொண்டனர்.


வடமராட்சி புற்றளை மகா வித்தியாலயத்தின் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு நடத்தப்பட்ட விழிப்புணர்வு நடைபவனி ஒன்று கடந்த 25ஆம் திகதி நடைபெற்றது. இந்நடைபவனியில் பாடசாலை மாணவர்கள், பழைய மாணவர்கள், அதிபர்கள், ஆசிரியர்கள் எனப் பலர் கலந்து கொண்டனர்.




வல்வெட்டித்துறைப் பொலிஸ் நிலையத்தின் பொலிஸ் அணி வகுப்பு மரியாதை நேற்று முன்தினம் நடைபெற்றது. இவ் அணி வகுப்பு மரியாதையை யாழ். மாவட்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் டி.கே. பெரேரா ஏற்றுக்கொண்டார்.

(படங்கள்: கரணவாய் செய்தியாளர்)





யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியின் முதலாவது சாரணிய அணியின் நூற்றாண்டு விழாவினை முன்னிட்டு மானிப்பாய் ஏஞ்சல் சர்வதேச பாடசாலையில் புதிதாக சாரணிய அணி ஒன்று அண்மையில் உத்தியோகபூர்வமாக ஆரம்பித்து வைக்கப்பட்டது. மத்திய கல்லூரி அதிபர் எஸ்.கே.எழில்வேந்தன் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் யாழ்.மாவட்ட சாரணிய உதவி ஆணையாளர் எஸ்.தில்லைவாசன், சாரணிய உதவி ஆணையாளர் எஸ்.துஷ்யந்தன்.காங்கேசன்துறை மாவட்ட ஆணையாளர் எஸ்.சற்குணராசா,யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியின் பழைய மாணவனும் ஜனாதிபதி சாரணியனுமாகிய கே.கலாறெஜி. யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியின் பழைய மாணவனும் ஜனாதிபதி சாரணியனுமாகிய ஆர் .சிறிதரன். யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியின் பழைய மாணவனும் ஜனாதிபதி சாரணியனுமாகிய கே. கலாவண்ணன், மானிப்பாய் ஏஞ்சல் சர்வதேச பாடசாலை அதிபர் கலாநிதி நோயல் விமலேந்திரன்.உப அதிபர் எஸ்.நிமல்ராஜ். யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியின் சாரணிய பொறுப்பாசிரியர் எஸ்.ஜெயகாந்தன். மானிப்பாய் ஏஞ்சல் சர்வதேச பாடசாலை சாரணிய பொறுப்பாசிரியர் பி.துசாந்தன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

# 6 அமைச்சர்களின் வெளிநாட்டு விஜயங்கள் குறித்து விசாரணை

## ஜனாதிபதி உத்தரவு

(கொழும்பு)

அமைச்சர்கள் ஆறு பேர் மேற்கொண்ட வெளிநாட்டு விஜயங்கள் குறித்து விசாரணை நடத்த ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன உத்தரவிட்டுள்ளார். குறித்த அமைச்சர்கள், தமது விஜயங்களின் போது அரசாங்க நிதியை பயன்படுத்தியமை தொடர்பிலேயே இந்த விசாரணைக்கு உத்தர விடப்பட்டுள்ளது.



கிடைத்துள்ள தகவல்களின்படி குறித்த அமைச்சர்கள், தமது விஜய நோக்கத்துக்கு அப்பால் கேளிக்கைகளில் ஈடுபட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த அரசாங்கத்தின் அமைச்சர்கள் வெளிநாட்டு பயணங்களுக்கு அரசாங்கத்தின் நிதிகளை வீணாக செலவிட்டமை தொடர்பில் குற்றச்சாட்டுக்கள் முன் வைக்கப்பட்டுள்ள நிலையில் ஜனாதிபதியால் ஒழுக்க விதிகள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.(இ-5)

# மகிந்தவைப் போன்று நடந்து கொள்ள வேண்டாம் அமைச்சர் அர்ஜூனவிற்கு ஜனாதிபதி அறிவுரை

(கொழும்பு)

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவைப் போன்று நடந்து கொள்ள வேண்டாம் என துறைமுக அபிவிருத்தி அமைச்சர் அர்ஜுன ரணதுங்கவிற்கு, ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன அறிவுரை வழங்கியுள்ளார்.

அண்மையில் அமைச்சரவைக் கூட்டமொன்றின் நிறைவில் ஜனாதிபதியை சந்தித்த அர்ஜுன, திலங்க சுமதிபால தொடர்பில் முறைபாடு செய்துள்ளார்.

இதனைத் தொடர்ந்து ஜனாதிபதி, அர்ஜுனவிற்கு ஆலோசனை வழங்கியதாக கொழும்பு ஞாயிறு பத்திரிகையொன்று செய்தி வெளியிட்டுள்ளது.

திலங்க சுமதிபால தொடர்பில் அர்ஜுன பல தடவைகள் ஜனாதிபதியிடம் முறைப்பாடு செய்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

நீங்களும் ஸ்ரீலங்கா கிரிக்கெட் தலைவர் பதவிக்காக போட்டியிட்டவரல்லவா? எனினும் மக்கள் அவருக்கே வாக்களித்தனர்.

நீங்களும் முன்னாள் ஆட்சியாளரைப் போன்றல்லவா நியமிக்கப்பட்டவரின் பதவியை மீளக் கேட்க வேண்டாம். அவர் தமது பணிகளை முன்னெடுக்க இடமளியுங்கள்.

மீளவும் சந்தர்ப்பம் ஏற்பட்டால் போட்டியிட்டு வெற்றியீட்டவும் என ஜனாதிபதி, அர்ஜுனவிற்கு ஆலோசனை வழங்கியுள்ளார் என ஞாயிறு பத்திரிகையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-5)

# மகிந்த அரசாங்கம் வங்கிகளின் பெயரிலேயே கடன்களைப் பெற்றது

## பிரதியமைச்சர் அஜித் விளக்கம்



வங்கிகள் மற்றும் ஏனைய அரச நிறுவனங்களின் பெயரில் கடந்த மகிந்த ராஜபக்ஷ அரசாங்கம் வெளிநாட்டுக் கடன்கலைப் பெற்றுக் கொண்டுள்ளது என பிரதி அமைச்சர் அஜித் பெரேரா தெரிவித்துள்ளார்.

சிங்கள வார இறுதி பத்திரிகையொன்றுக்கு அளித்த நேர்காணலில் அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

கடந்த அரசாங்கம் வெளிநாட்டு கடன்களைப் பெறுக்கொண்ட போது அவை அரசாங்கத்தின் கடனாக வெளிக்காட்டாதவகையில்கடன பெற்றுக்கொண்டுள்ளது.

இதன் கீழ் தேசிய சேமிப்பு வங்கியின் கீழ் 500 மில்லியன் அமெரிக்க டொலர்கள் கடனாக பெற்றுக்கொள்ளப்பட்டுள்ளது.

வீதி அபிவிருத்தி அதிகார சபை உள்ளிட்ட நிறுவனங்களின் பெயரிலும் கடன் பெற்றுக்கொள்ளப்பட்டுள்ளது.

இந்த கடன் தொகைகளுக்கான தவணைக் கட்டணங்கள் வங்கிகளின் ஊடாக மேற்கொள்ளப்படுகின்றது.

இந்தக் கடன்கள் அரசாங்கத்தினால் பெற்றுக் கொள்ளப்பட்டதாக வெளிக்காட்டாமல் அவை வங்கிகள் உள்ளிட்ட நிறுவனங்கள் பெற்றுக்கொள்ளப்பட்டதாகவே மகிந்த அரசாங்கம் காட்டியுள்ளது என பிரதி அமைச்சர் அஜித் பெரேரா மேலும் தெரிவித்துள்ளார். (இ-5)

# மலேசியாவில் 3 தமிழர்களுக்கு மரண தண்டனை நிறைவேற்றம்

சர்வதேச மன்னிப்புச் சபையின் கடும் எதிர்ப்புகளையும் மீறி மூன்று தமிழர்களின் மரண தண்டனையை மலேசிய அரசாங்கம் நிறைவேற்றியுள்ளது.

மலேசியாவைச் சேர்ந்த குணசேகர் பிச்சைமுத்து (வயது-35), ரமேஷ் ஜெயகுமார் (வயது-34) மற்றும் அவருடைய சகோதரரான சசிவரணம் ஜெயகுமார் (வயது-37) ஆகிய மூவருக்குமே மரண தண்டனை நிறைவேற்றப்பட்டுள்ளது.

2005 ஆம் ஆண்டு ஒருவரைக் கொன்றதாக குற்றம் சாட்டப்பட்டு இம் மூவரும் சிறையில் அடைக்கப்பட்டிருந்தனர்.

நீதிமன்றில் இடம்பெற்ற விசாரணையின் போது குறித்த மூவரும் தம்முடைய தற்காப்புக்காகவே மேற்படி நபரைக் கொன்றதாக வாக்குமூலம் அளித்தனர்.

ஆனால் மூவரின் மீதுள்ள குற்றம் நிரூபிக்கப்பட்டதைத் தொடர்ந்து மூவருக்கும் மலேசிய நீதிமன்றம் மரண தண்டனை விதித்து தீர்ப்பளித்தது.

சில தினங்களுக்கு முன்னதாக குணசேகரனின் தாயாருக்கு சிறை அதிகாரிகள் கடிதமொன்றை அனுப்பியுள்ளனர்.

அதில் அவருடைய மகனுக்கு மரண தண்டனை நிறைவேற்றப்படவுள்ளதால், அவரை அடக்கம் செய்ய வேண்டிய ஏற்பாடுகளை மேற்கொள்ளுமாறு கூறியிருந்தனர்.

இந்த மரண தண்டனைக்கு எதிராக சர்வதேச மன்னிப்புச் சபை கண்டனங்களை வெளியிட்டு மரண தண்டனையை இரத்துச் செய்யுமாறு மலேசிய அரசுக்கு கோரிக்கை விடுத்திருந்தது.

ஆனால் பல்வேறு எதிர்ப்புகளை மீறி மலேசிய அரசாங்கம் மூவரின் மரண தண்டனையையும் நிறைவேற்றியுள்ளதாக தற்போது அதிகாரபூர்வ தகவல்கள் வெளியாகியுள்ளன.

இது குறித்து மூவரின் சட்டத்தரணி கருத்து தெரிவித்த போது, கடந்த வெள்ளிக்கிழமை அதிகாலை 4.30 மணியிலிருந்து 5.30 மணிக்கு இடைப்பட்ட நேரத்தில் இந்த மரண தண்டனை நிறைவேற்றப்பட்டுள்ளதாக தெரிவித்துள்ளார். (இ-5)

# திடீர் சோதனை

யாழ். மாவட்ட சிகை ஒப்பனையாளர் கூட்டுறவுச் சங்கங்களின் ஒன்றிய கண்காணிப்பு குழுவினர் அதிரடி நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளனர்.

யாழ்ப்பாணம் சுன்னாகம், சங்கானை, தீவகம், அச்சுவேலி, தென்மராட்சி, வடமராட்சி கிழக்கு ஆகிய பகுதிகளுக்கு திடீர் சோதனை நடவடிக்கை மேற்கொண்டு 22.03.2016 அன்று நேரக்கட்டுப்பாட்டை மீறி செயற்பட்டோர் மீது ஒழுக்காற்று அறவீட்டுப்பணம் அறவிடப்பட்டது.

அத்தோடு யாழ்.மாவட்டத்திலுள்ள அனைத்து அங்கத்தவர்களும் நேரக்கட்டுப்பாட்டை மதித்து நடக்க வேண்டும் எனவும் அதை மீறும் சந்தர்ப்பத்தில் ஒன்றிய கண்காணிப்புக் குழுவினர் ஊடாக ஒன்றியம் கடும் நடவடிக்கை எடுக்கும் எனவும் தெரிவித்தனர். (இ-78)

# பெண் சிசுவின் சடலம் மீட்பு

கண்டி, ஸ்ரீதலதா மாளிகைக்கு அருகில் செல்லும் வாவியிலிருந்து பெண் சிசுவின் சடலத்தை பொலிஸார் நேற்றுக் காலை மீட்டுள்ளனர்.

அவ்வீதி வழியாக சென்ற ஆட்டோ சாரதியொருவர் சடலத்தை கண்டு பொலிஸாருக்கு வழங்கிய தகவலை தொடர்ந்து பொலிஸார் சடலத்தை மீட்டுள்ளனர்.

சிசுவானது, துணி ஒன்றில் சுத்தப்பட்ட நிலையில் வாவியில் வீசப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். (இ-5)

# மேற்கத்தேய நாடுகள் மீதான தாக்குதலைத் தொடர்வோம்



பெல்ஜியத் தலைநகரான பிரஸல்ஸில் இடம்பெற்ற தொடர் குண்டுத் தாக்குதல்களுக்கு பொறுப்பேற்றுள்ள ஐ. எஸ். தீவிரவாதிகள், தமது தளங்கள் மீது தாக்குதல் நடத்திவரும் மேற்கத்தேய நாடுகள் தமது படைகளை வாபஸ் பெறவில்லை என்றால இதுபோன்று இன்னும் பல மேற்கத்தேய நாடுகள் மீது தாக்குதல் தொடரும் என எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

ஈராக்கின் நினிவா மாநிலத்தில் இருந்து இயங்கும் தமது உத்தியோகபூர்வ வலைத்தளம் ஊடாக அவ்வமைப்பு வெளியிட்டுள்ள வீடியோ காட்சியிலேயே மேற்படி எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

அதேவேளை, இந்த தாக்குதலில் முஸ்லிம்கள் பலியாகி உள்ள நிலையிலும், இதனை அடுத்து பெல்ஜியத்தில் இனவாத தாக்குதல்கள் அதிகரித்துள்ளமையினால் முஸ்லிம்கள் அச்சத்துடன் வாழ்ந்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (இ-5)



வடமராட்சி தொண்டைமானாறு முருகுப்பிள்ளை நவரத்தினசாமீ பாக்கு நீரிணையை நீந்திக் கடந்த நீச்சல் அகவையின் 62 ஆவது வருட நிறைவு அண்மையில் நினைவு கூரப்பட்டது.

# மதுபானசாலையில் கைகலப்பு ஒருவர் பலி; ஒருவர் காயம்!

ஹப்புத்தளை, கொஸ்லாந்தை நகரிலுள்ள மதுபான சாலையில் இருவருக்கு இடையில் ஏற்பட்ட கைகலப்பில் ஒருவர் கத்திக்குத்துக்கு இலக்காகி உயிரிழந்துள்ளதுடன் மற்றுமொருவர் படுகாயமடைந்த நிலையில் வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

நேற்று முன்தினம் சனிக்கிழமை மாலை இடம்பெற்ற இச்சம்பவத்தில், ஹல்துமுல்லை பிரதேச சபையின் முன்னாள் உறுப்பினரான சிறிகொத்துலாகே அமர சேன (வயது -52) என்பவரே உயிரிழந்துள்ளார்.

இச்சம்பவத்துடன் தொடர்புடையதாக கருதப்படும் கொஸ்லாந்தை, கெலபாவெலவைச் சேர்ந்த (வயது-45) நபரை பொலிஸார் கைதுசெய்துள்ளனர்.

சம்பவத்தில் படுகாயமடைந்தவரை, வைத்தியசாலைகது கொண்டு செல்ல முற்பட்டபோதிலும் அவர் வழியில் உயிரிழந்துள்ளதாக தெரியவருகிறது.இருவரது முரண்பாட்டை தடுக்கச் சென்ற நபர், காயமடைந்த நிலையில் தியத்தலாவை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.இச்சம்பவம் தொடர்பிலான விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (இ-5)

# ஜனாதிபதி மாளிகையை குண்டு வீசி தகர்ப்போம்

## தென்கொரியாவுக்கு வடகொரியா கடும் எச்சரிக்கை



(பியாங்யாங்)

அமெரிக்காவுடன் கூட்டு போர் ஒத்திகை நடத்துவதை கண்டித்து தென்கொரிய ஜனாதிபதி மாளிகையை குண்டு வீசி தகர்ப்போம் என வடகொரியா எச்சரிக்கை விடுத்துள்ளது.

வடகொரியாவின் அணு ஆயுத அச்சுறுத்தலை தொடர்ந்து தென் கொரியாவும், அமெரிக்காவும் இணைந்து கொரிய எல்லைப் பகுதியில் கடந்த 7 ஆம் திகதி முதல் போர் ஒத்திகையில் ஈடுபட்டு வருகின்றன. இதற்கு வட கொரியா கடும் எதிர்ப்பு தெரிவித்து வருகிறது.

அதை தென்கொரியா கண்டு கொள்ளவில்லை. இதனால் ஆத்திரம் அடைந்த வடகொரிய இராணுவம் தனது அதிகாரபூர்வ ஊடகமான கே.சி.என்.ஏ.வில் நேற்று முன்தினம் ஒரு அறிக்கை வெளியிட்டது.

அதில் தென்கொரிய ஜனாதிபதி பார்க் ஜியுன் ஹை நம்பிக்கை துரோகத்தில் ஈடுபட்டுள்ளார். வட கொரிய தலைவர் மீது தாக்குதல் நடத்த திட்டமிட்டுள்ளார். அதற்கு நாங்கள் அஞ்சமாட்டோம்.

போர் மூண்டால் சியோலில் உள்ள ஜனாதிபதி மாளிகையை குண்டு வீசி தகர்ப்போம். தலைநகர் சியோல் உட்பட நாடு முழுவதும் குண்டு வீசி எரித்து சாம்பலாக்குவோம் என எச்சரிக்கை விடுத்துள்ளது. அதேபோன்று அமெரிக்காவையும் எச்சரித்துள்ளது.

தென் கொரியா தனது பகுதியில் ஆண்டு தோறும் அமெரிக்காவுடன் இணைந்து போர் ஒத்திகை நடத்தி வருகிறது. ஆனால் இந்த ஆண்டு வடகொரியா நடத்திய அணு ஆயுத சோதனை மற்றும் ஏவுகணை பரிசோதனை போன்றவற்றால் போர் பயிற்சி ஒத்திகை மிக கடுமையாக நடத்தப்படுகிறது.

இதனால் ஆத்திரம் அடைந்த வடகொரியா, அமெரிக்கா மற்றும் தென் கொரியாவுக்கு கடும் எச்சரிக்கை விடுத்துள்ளது. (இ-5)

**முஸ்லிம்களைத் திட்டாதீர்**

## ஹிலாரி கிளின்டன் கடும் எச்சரிக்கை

முஸ்லிம்களை மோசமானவர்களாக சித்திரிப்பது அநாகரிகமான செயலாகும் என அமெரிக்க ஜனாதிபதி வேட்பாளர் ஹிலாரி கிளின்டன் தெரிவித்துள்ளார்.

குடியரசுக் கட்சி ஜனாதிபதி வேட்பாளர் டொனால்ட் டிரம்ப் மற்றும் டெட் குரூஸ் ஆகியோரின் கருத்துக்கு மறுப்புத் தெரிவித்து உரையாற்றும் போதே இவ்வாறு தெரிவித்தார்.

இருவரின் கருத்துக்களுக்கும் ஜனநாயகக் கட்சி ஜனாதிபதி வேட்பாளர் ஹிலாரி கிளின்டன் கடும் கண்டனம் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக ஸ்டான்பேர்ட் பல்கலைக்கழகத்தில் நேற்று முன்தினம் உரையாற்றிய போது அவர் மேலும் கூறியுள்ளதாவது,

முஸ்லிம்களை குற்றவாளிகள் போன்று சித்திரிப்பது அநாகரிகமாகும். நியூயோர்க் பொலிஸ் துறையில் 1000 முஸ்லிம் அதிகாரிகள் பணியாற்றுகின்றனர்.

அவர்கள் குற்றவாளிகளா? அமெரிக்க சமுதாயத்தில் முஸ்லிம்களை புறக்கணிக்கக் கூடாது. ஐ.எஸ். தீவிரவாதிகளுக்கு எதிரான போரில் அமெரிக்கர்கள் அனைவரும் ஒன்றிணைந்து செயற்பட வேண்டும் எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (இ-5)

## அமெரிக்க முஸ்லிம்களைத் தூற்றாதீர் ஜனாதிபதி ஒபாமா வேண்டுகோள்



(வோஷிங்டன்)

அமெரிக்க ஜனநாயகக் கட்சியின் வேட்பாளர் டொனால்ட் டிரம்ப் அமெரிக்க முஸ்லிம்கள் பற்றிக் கூறிவரும் கருத்து, அமெரிக்காவின பாரம்பரியம், வரலாற்றுக்கு எதிரானது என அமெரிக்க ஜனாதிபதிபராக் ஒபாமா பகிரங்கமாக அறிவிப்புச் செய்துள்ளார்.

அமெரிக்க ஜனாதிபதி வேட்பாளராக குடியரசுக் கட்சி சார்பில் முன்னிலையில் இருக்கும் டொனால்ட் டிரம்ப் முஸ்லிம்களுக்கு எதிரான கருத்துக்களை சர்ச்சைக்குரிய வகையில முன்வைத்து வருகின்றார். இதற்கு அமெரிக்க ஜனாதிபதி ஒபாமா வாராந்த வானொலிசேவையில் ஆற்றிய விசேட உரையிலேயே இவ்வாறு கூறியுள்ளார்.

ஐ.எஸ். தீவிரவாதிகளுக்கு எதிரான எங்களது போராட்டத்தில் எங்களுக்கு ஆதரவாக இருக்கப்போகிறவர்கள் அமெரிக்க முஸ்லிம்கள்தான. அமெரிக்காவின் வளர்ச்சிக்கு முஸ்லிம்கள் அதிகளவில் பங்காற்றியிருக்கிறார்கள.

முஸ்லிம்களை அமெரிக்காவுக்குள் நுழையவிடாமல் தற்காலிக தடை விதிக்க வேண்டும் என டொனால்ட் டிரம்ப் பேசி வருகிறார். அமெரிக்காவில் மத சுதந்திரம் உள்ளதா? என்ற சந்தேகத்தை எழுப்பும் பேச்சே இதுவாகும்.

ஐ.எஸ். தீவிரவாதிகளை வீழ்த்துவதே அமெரிக்க இராணுவத்தின் முதலாவது பணி. நாங்கள் அதில் வெல்வோம். தீவிரவாதிகள் தோல்வியை தழுவுவார்கள். எங்களது பாரம்பரியத்தையும், வாழ்க்கை முறையையும் கைவிட வேண்டும் என தீவிரவாதிகள் நினைக்கிறார்கள். ஆனால், நாங்கள் கைவிட மாட்டோம் எனவும் ஜனாதிபதி ஒபாமா மேலும் உரையாற்றியுள்ளார். (இ-5)




## வடகொரியாவில் உளவு பார்த்தேன்

### அமெரிக்க உளவாளி ஒப்புதல்

(பியாங்யாங்)

வடகொரியாவின் இராணுவ இரகசியங்களைத் திருட முயன்றதாகவும் உளவு பார்த்ததாகவும் கைது செய்யப்பட்ட அமெரிக்க இளைஞர் தனது குற்றத்தை ஒப்புக் கொண்டுள்ளார். தங்கள் நாட்டை உளவு பார்க்கும் அமெரிக்காவில் ஏவலர்களை வட கொரியா அடிக்கடி கைது செய்து வருகிறது. தங்கள் நாட்டு இராணுவ இரகசியங்களை உளவு பார்த்ததாக அமெரிக்க இளைஞர் ஒருவரை ஆதாரங்களுடன் வடகொரியா அண்மையில் கைது செய்தது. குற்றச்சாட்டுகள் நிரூபிக்கப்பட்டதைத் தொடர்ந்து அவருக்கு 15 ஆண்டுகள் கடுங்காவல் தண்டனை விதித்தது. இதைப் போல மற்றொரு இளைஞர் கைது செய்யப்பட்டார். அவர் கைது செய்யப்பட்டது தொடர்பாக வடகொரியா மீது மனித உரிமை ஆர்வலர்கள் குற்றம் சாட்டியிருந்தனர்.

இந்நிலையில், அந்த இளைஞர் தனது குற்றத்தை ஒப்புக்கொண்டுள்ளார். தென்கொரியாவுடன் இணைந்து வடகொரியாவின் இராணுவம் மற்றும் அரசின் இரகசியங்களை திருடியதாக அவர் கூறினார். மேலும், இதறகாக தனக்கு பணம் வழங்கப்பட்டதாகவும் அவர் ஒப்புதல் வாக்கு மூலம் அளித்தார். வடகொரியாவின் பொதுவுடைமை அரசை கவிழ்ப்பதறகாகவே இந்த சதிச் செயலில் ஈடுபட்டதாகவும் கூறி, தனது செயலுக்காக அவர் மன்னிப்பும் கேட்டுக் கொண்டுள்ளார். அமெரிக்காவின் சார்பில் உளவு பார்த்த இவர், தனது குற்றத்தை கண்ணீருடன் ஒப்புக் கொள்ளும் புகைப்படங்களை வட கொரிய செய்தி நிறுவனம் வெளியிட்டுள்ளது. இதன் மூலம் அமெரிக்கா தொடர்ந்து வடகொரியாவின் இரகசியங்களை திருடவும், உளவு பார்த்தும் வருகின்றது என்பது வெளிப்படையாக அம்பலமாகியுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. (இ-5)

## உணவுக்காக வாயைத் தைத்து போராட்டம் நடத்திய அகதிகள்



பிரான்ஸின் கலிஸ் முகாமில் தங்க வைக்கப்பட்டுள்ள அகதிகள் தங்களுக்கு சரியான உணவு கிடைககவில்லை என வாயைத் தைத்து போராட்டத்தில் ஈடுபட்டனர்.

சிரியா, ஆப்கானிஸ்தான், ஈரானிய மக்கள் புகலிடம் தேடி ஐரோப்பிய நாடுகளை நோக்கி படையெடுத்துக்கொண்டிருக்கிறார்கள்.

அவ்வாறு வரும் மக்களை பிரான்ஸ் நாடு சிறிய முகாம்களை அமைத்து அதில் தங்க வைத்துள்ளது, குறிப்பாக பிரான்ஸின் காலிஸ் பகுதியில் உள்ள முகாமில்தான் அதிக அளவில் அகதிகள் உள்ளனர்.

இவர்களுக்கு போதிய உணவு சரியாக கிடைக்காததால் அந்த முகாமில் உள்ள 9 ஈரானிய அகதிகள் தங்களது வாயைத் தைத்து போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இந்நிலையில், இவர்களது தேவைகளைப் பூர்த்தி செய்து தருகிறோம் என்றும் போராட்டத்தை முடித்துக்கொள்ளும் படியும் சட்டத்தரணி Orsane Broissin தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் கூறியதாவது, பசியால் போராடி வரும் அகதிளுக்கு அவர்களது தேவைகள் பூர்த்தி செய்யப்படும், எனவே அவர்கள் போராட்டத்தை கைவிட்டு, தங்களுக்கான சிகிச்சைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

இந்த மாதம் NGOs எடுக்கும் சிறப்பு முயற்சியின் காரணமாக முகாம்களில் உள்ள அகதிகள் தங்குவதற்கான இடங்களில் மாற்றம் செய்யப்படும்.

800 குடியேறிகள் மற்றும் 3 ஆயிரத்து 50 அகதிகள் பல்வேறு ஆதாயங்களைத் தேடி சிரமத்துக்குள்ளாகியுள்ளனர், இதுகுறித்து போராட்டத்தில் ஈடுபட்ட ஈரானிய நபர் ஒருவர் கூறியதாவது, எங்கள் போராட்டத்தின் மூலம் நல்ல முடிவு கிடைத்துள்ளது.

சிறந்த பாதுகாப்பு, மருத்துவ வசதி, சட்ட அணுகல், நீர் மற்றும் அவசர சேவைகள், அத்துடன் சிறார்களுக்கு உதவி போன்றவற்றில் நல்ல முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது என்றார். (இ-5)

# ஐ.எஸ். தீவிரவாதிகளை விரட்டியடித்து பல்மைரா நகரை மீட்ட சிரிய இராணுவம்

உலகின் மிக பழைமையான பாரம்பரிய கட்டடங்களை கொண்ட சிரியா நகரான பல்மைரா நகரை கடந்த ஆண்டு ஐ.எஸ். தீவிரவாதிகள் கைப்பற்றினர். கடந்த ஆண்டு மே மாதம் 25 ஆம் திகதி, சிரிய இராணுவத்தினருடன்போராடி, ஐ.எஸ தீவிரவாதிகள் இந்நகரை தங்கள் கட்டுக்குள் கொண்டுவந்தனர்.

ஐ.எஸ். பயங்கரவாதிகளின் முன்னேற்றத்தை அடுத்து அங்கு போரிட்டுக்கொண்டிருந்த சிரிய இராணுவமும் பின்வாங்கியது.

யுனஸ்கோவால், மிக பழைமை யான பாரம்பரிய சின்னங்கள் என்று வரிசைப்படுத்தியிருக்கும் ஏராளமான இடிபாடுடன் கூடிய கட்டடங்கள் பல்மைரா நகரில் இருப்பதால், அவைகளை ஐ.எஸ். பயங்கரவாதிகள் வெடி வைத்து தகர்த்து விடுவார்களோ என்ற அச்சம் கொண்டது.

இந்நிலையில், அந்நகரை கைப பற்ற சிரிய இராணுவத்தினர் போரா டிய முயற்சி வெற்றியில் முடிந்துள் ளது, தீவிரவாதிகளை விரட்டிய டித்து அந்நகரை தங்கள் கட்டுப்பாட் டிற்குள் மீண்டும் கொண்டுவந்து விட்டதாக சிரிய இராணுவம் நேற்று அறிவித்துள்ளது. (இ-5)

# காணாமற்போன தமிழரை மீட்கவும்




பிரஸல்ஸ் குண்டுவெடிப்பில் காணாமற்போன தமிழரை மீட்க நடவடிக்கை எடுக்க கோரி முதல்வர் ஜெயலலிதா பிரதமருக்கு கடிதம் எழுதியுள்ளார்.

முதல்வர் ஜெயலலிதா இது தொடர்பாக எழுதியுள்ள கடிதத்தில், பிர்ஸல்ஸ் குண்டுவெடிப்பு நிகழ்ந் ததிலிருந்து ராகவேந்திர கணேசன் என்ற தமிழர் மாயமாகியுள்ளார்.

எனவே, வெளியுறவுத்துறை மூல மாக நடவடிக்கை எடுத்து ராகவேந் திர கணேசனை மீட்க வேணடும்.

ராகவேந்திர கணேசனை காணா மல் அவரது குடும்பத்தினர் மிகுந்த மனஉளைச்சலில் உள்ளனர்.

மேலும், கணேசனின் நலன் குறித்து நற்செய்தியை கேட்க குடும் பத்தினர் காத்துக் கொண்டிருக்கின் றனர் என தெரிவித்துள்ளார். (இ-5)

# உள் விவகாரங்களில் 'றோ'தலையிடுகின்றது

## ஈரானிடம் பாகிஸ்தான் முறைப்பாடு

எங்களது நாட்டின் உள் விவ காரங்களில் இந்தியாவின் உளவு பிரிவான றோ தலையிடுகிறது என பாகிஸ்தான் இராணுவ தளபதி ரஹீல் ஷெரீப் ஈரான் நாட்டு ஜனா திபதி ஹசன் ரவுகானியிடம் முறை யிட்டுள்ளார்.



ஈரான் ஜனாதிபதி ஹசன் பாகி ஸ்தானில் 2 நாள் சுற்று பயணம் மேற்கொண்டுள்ளார். இந் நிலை யில், பாகிஸ்தான் இராணுவ தள பதி ரஹீல், ஈரான் ஜனாதிபதி ஹசனை அழைத்து இரு நாடுக ளின் மண்டல பாதுகாப்பு மற்றும் இரு தரப்பு உறவுகள் குறித்து ஆலோசனை செய்துள்ளார்.

கடந்த வியாழக்கிழமை பலு சிஸ்தான் நகரில் இந்தியர் ஒரு வரை பாகிஸ்தான் அரசு கைது செய்தது. அவர் சட்டவிரோத முறை யில் அந்த பகுதிக்குள் நுழைய முயற்சித்துள்ளார் என்று கூறிய துடன் சட்டவிரோத செயல்களில் ஈடுபட்டுள்ளார் என்றும் அவர் மீது குற்றம் சாட்டியது.

இந்நிலையில், பாகிஸ்தானின் உள்ளூர் ஊடகத்தில், குல்பூஷண் ஜாதவ் என்ற அந்த குற்றவாளி இந் திய கப்பற்படையில் தளபதி அந் தஸ்திலான அதிகாரி மற்றும் இந்தி யாவின் றோ உளவு பிரிவின் அதிகாரி என தெரிவிக்கப்பட்டுள் ளது.

இந்த குற்றச்சாட்டை இந்திய வெளிவிவகாரத் துறை அமை ச்சகம் நேற்று முன்தினம் மறுத் துள்ளது.

குல்பூஷண் ஓய்வு பெற்ற கப்பற் படை அதிகாரி. அவருக்கு அரசாங் கத்திடம் எந்த தொடர்பும் இல்லை என்றும் தெரிவித்துள்ளது. (இ-5)

# பிரஸல்ஸ் குண்டு வெடிப்பு குறித்து மூன்று பேர் மீது குற்றச்சாட்டு பதிவு

பெல்ஜியம் நாட்டின் தலை நகரான பிரஸல்ஸ் நகரில் 22 ஆம் திகதி ஜாவெண்டம் சர்வதேச விமான நிலையத்திலும், மேல்பீக் சுரங்க ரயில் நிலையத்திலும் தீவிர வாதிகள் தொடர் குண்டு வெடிப்பு களை நடத்தி உலகம் முழுவதும் பரபரப்பை ஏற்படுத்தினர்.




இந்த தாக்குதல்களில் பலியா னவர்கள் எண்ணிக்கை 35 என வும், காயம் அடைந்தோர் எண் ணிக்கை சுமார் 300 எனவும், அவர்களில் 61 பேர் நிலைமை கவ லைக்கிடமாக உள்ளதாகவும் கூறப் படுகிறது.

இந்த நிலையில், பிரஸல்ஸ் தாக்குதல் தொடர்பாக நாடு முழு வதும் தீவிர தேடுதல் வேட்டை நடைபெற்று வருகிறது. இதில் சந்தேக நபர்கள் 6 பேர் கைது செய் யப்பட்டுள்ளதாக அங்கிருந்து வரும் தகவல்கள் கூறுகின்றன.

இந்நிலையில் தீவிரவாத நட வடிக்கைகளில் தொடர்புடையதாக பெல்ஜியம் நாட்டை சேர்ந்த 3 பேர் மீது குற்றச்சாட்டு பதிவு செய்யப் பட்டுள்ளது.

மூன்றாவது நபரின் பெயர் பாய்கல் என்று பெல்ஜியம் நாட்டின் அரசு தரப்பு வழக்கறிஞர்கள் தெரி வித்துள்ளனர். இவரது உருவம் வெடிகுண்டு தாக்குதல் சம்பவத் தின் போது எடுக்கப்பட்ட வீடியோ ஒன்றில் பதிவாகியுள்ளது. ஏற்க னவே அபூபக்கர் மற்றும் ராபாஹ் என்ற இருவர் மீதும் குற்றச்சாட்டு படிவாகியுள்ளது. (இ-5)

# 10 ஆயிரம் முயல்களை வேட்டையாடி ஈஸ்டர் கொண்டாடிய நியூசிலாந்து மக்கள்

சிலுவையில் அறைந்து கொல் லப்பட்ட இயேசு கிறிஸ்து உயிர்த் தெழுந்ததாக நம்பப்படும் ஈஸ்டர் திருநாள் உலகம் முழுவதும் கோலா கலமாக கொண்டாடப்படும் நிலை யில் நியூசிலாந்து நாட்டு மக்கள் பத்தாயிரம் முயல்களை கொன்று விருந்து படைத்து ஈஸ்டரை கொண டாடி மகிழ்ந்துள்ளனர்.

நியூசிலாந்தில் உள்ள ஒட் டாகோ மாவட்டத்தில் வயல்களில் விளையும் பயிர்களை நாசப்படுத் தும் முயல்களை அழித்து விவ சாயத்தை காக்கும் வகையில் காட்டு முயல்களை கொன்று குவிக் கும் போட்டியை அலெக்ஸான்டிரா லயன்ஸ் கிளப் என்ற அமைப்பு நடத்தி வருகிறது.

ஈஸ்டரின்போது கடந்த 25 ஆண்டுகளாக நடத்தப்படும் இந்த வேட்டை போட்டியில் உள்ளூர் மக்கள் பல குழுக்களாக பிரிந்து சென்று, முயல்களை துப்பாக்கி களால் சுட்டு வேட்டையாடுவது வழக்கம். அதிகமான முயல்களை வேட்டையாடும் அணிக்கு பரிசும் உண்டு.

அவ்வகையில், 27 குழுக்களாக சுமார் 300 பேர் தலைகளில் டோர்ச் லைட்களை கட்டியபடி நேற்று முன் தினம் முயல் வேட்டைக்கு புறப்பட் டனர். அவர்கள் அனைவரும் மொத்தமாக சுமார் பத்தாயிரம் முயல்களை கொன்று குவித்தனர். 889 முயல்களை கொன்ற டவுன் சவுத் அணியினர் முதல் பரிசை யும், 755 முயல்களை வீழ்த்திய ஹாப்பர் ஸ்டாப்பர்ஸ் அணியினர் இரண்டாவது பரிசையும் பெற்ற னர்.

கொன்ற முயல்களுடன் வீடு திரும்பிய பலர் முயல் கறி விருந்து சமைத்து ஈஸ்டரை குதூகலமாக கொண்டாடி மகிழ்ந்தனர். (இ-5)



# உ.பியில் ஐ.எஸ்ஸில் சேர மறுத்த சிறுவன் கத்தியால் குத்தி கொலை

(லக்னோ)

உத்தர பிரதேச மாநிலம் அல காபாத் மாவட்டத்தில் உள்ள கேசரு கிராமத்தை சேர்ந்தவன் ரசி. மூன்றாம் வகுப்பு படித்து வந்த இவன் இர்பான் என்பவரிடம் கல்வி கற்று வந்தான்.

அவனிடம் ஐ.எஸ். தீவிரவாத இயக்கத்தில் சேரும்படி இர்பான் கூறி வந்தாராம். இதை சிறுவன் ரசி ஏற்கவில்லை. இதனால் ஆத்திரம் அடைந்த இர்பான் கத்தியால் குத்தி ரசியை கொன்றுவிட்டார் என குற்றஞ்சாட்டி பொலிஸார் இர் பானை தேடி வருகிறார்கள். (இ-5)

# நடைபாதை வியாபாரத்துக்கு வலி.தெற்கில் முற்றாகத் தடை

வலி.தெற்கு வணிகர் கழகக் கூட்டம் கடந்த வெள்ளிக்கிழமை வணிகர் கழகத் தலைவர் லயன் சி.ஹரிகரன் தலைமையில் நடைபெற்றது. இதில் உரையாற்றிய வணிகர் கழகத் தலைவர் தெரிவிக்கையில்,

எமது பிரதேசத்தில் தென்னிலங்கை நடைபாதை வியாபாரத்தால் பல்வேறுபட்ட பிரச்சினைகளை சமூகம் எதிர்கொள்கின்றது.

இந்த வியாபாரிகள் வீதியோரங்களில் தங்கி நிற்பதால் சுகாதார ரீதியான பல்வேறுபட்ட பிரச்சினையை எமது பிரதேசம் எதிர்கொள்கின்றது.

அதேநேரத்தில் பல மில்லியன் ரூபாய்களை முதலீடாக கொண்டு வியாபார நிலையத்தை ஆரம்பித்து, பிரதேச சபைக்கு வருடாவருடம் வரிசெலுத்துகின்ற எமது பிரதேச வியாபாரிகள் இவர்களால் பெரிதும் பாதிக்கப்படுகின்றார்கள்.

நாம் இன, மத, மொழி வேறுபாடுகள் காரணமாக இவர்களைத தடைசெய்யவில்லை. ஆனால், இவர்கள் வேண்டுமானால் நிரந்தரமாகக் கடைகளை வாடகைக்குப் பெற்று, முறைப்படி பிரதேச சபையிடம் வியாபார உரிமம் பெற்று தமது வியாபாரங்களை மேற்கொள்ளலாம்.

இந்த நடவடிக்கையை மேற்கொள்வதற்கு வணிகர் கழகத் தலைவர் என்ற ரீதியில் எந்தக் கட்ட நடவடிக்கைகளையும் மேற்கொள்ள நான் தயாராக உள்ளேன். தனித்து தலைவர், செயலாளர் மட்டும் வணிகர் கழகம் அன்று. நீங்கள் அனைவரும் இணைந்ததே வணிகர் கழகம். உங்கள் அனைவரதும் பூரண ஒத்துழைப்பு எமக்குத் தேவை.

நான் இந்தக் கூட்டத்துக்கு பிரதேச சபையின் முன்னாள் தவிசாளர் தி.பிரகாஷ, பிரதேச சபையின் செயலாளர் மற்றும் பொலிஸ்நிலைய பொறுப்பதிகாரி ஆகியோரை அழைத்தமைக்குக் காரணம் அனைவரதும் ஒத்துழைப்புடன்தான் நாம் இந்த நடவடிக்கையை சிறப்பாக மேற்கொள்ள முடியும். எம்மால் இங்கு மேற்கொள்ளப்படுகின்ற அனைத்து முடிவுகளுக்கும் இவர்கள் பூரண ஒத்துழைப்பு வழங்குவார்கள என்று நம்புகின்றேன். - என்றார்.

இங்கு கருத்துத் தெரிவித்த முன்னாள் வலி.தெற்கு பிரதேச சபை தவிசாளர் தி.பிரகாஷ் -

நடைபாதை வியாாரம் அகற்றப்படவேண்டும் என்று இங்கு மேற்கொள்ளப்படும் முடிவுக்கு எமக்கு எந்தவித மாற்றுக் கருத்தும் கிடையாது. பொலிஸார் இதற்கு பூரண ஒத்துழைப்பு வழங்குவர் என்று நம்புகின்றேன் - என்றார்.

இதற்குக் கருத்துத் தெரிவித்த சுன்னாகம் உப பொலிஸ் பரிசோதகர் -

சட்டத்தில் நடைபாதை வியாபாரத்தை அகற்றுவது தொடர்பில் தமக்கு எந்த அதிகாரமும் கிடையாது. ஆயினும், பிரதேச சபை வியாபார உரிமம் பெறாத முறையற்ற கடைகளை அகற்றும்படி உத்தரவிட்டால் நிச்சயமாக நாம் அதற்கு பூரண ஒத்துழைப்பு வழங்கி அகற்றுவோம் - என்றார்.

இறுதியாகக் கருத்துத் தெரிவித்த வலி.தெற்கு பிரதேச செயலாளர் -

தாம் நடைபாதை வியாபாரத்தை அகற்றுவது தொடர்பாக உடனடியாக பொலீஸாருக்கு எழுத்து மூலம் அறிவுறுத்தல்களை வழங்குகின்றோம். நடைபாதை வியாபாரிகளுக்கு வியாபார உரிமம் எம்மால் ஒருபோதும் வழங்கப்படமாட்டாது. எமது வியாபாரிகள் பண்டிகைக் கால வியாபாரத்தில் மக்களுக்கு ஏற்றவகையில் பொருள்களைக் குறைந்த விலையில் வழங்க முன்வரவேண்டும். அடுத்த வருடத்திலருந்து வியாபார உரிமம் வழங்கப்படும்போது வர்த்தக சங்கத்தின் சிபாரிசு இருந்தால் மட்டுமே உரிமம் எம்மால் வழங்கப்படும்.

அத் துடன், வர்த்தக சங்கத்தின் அலுவலகத்துக்கு சுன்னாகம் சந்தைக் கட்டடத் தொகுதியில் மேல் மாடியில் உள்ள ஒரு கட்டடத்தை வழங்கு கின்றோம்.

நடைபாதை வியாபாரம் அகற்றுவது தொடர்பில் எம் முடன் சேர்ந்து செயற்பட ஐவர் கொண்ட குழு ஒன்றையும் நியமியுங்கள். உங்களுக்குத் தன்னாலான பூரண ஒத்துழைப்பைத்தான் வழங்குவேன் என மேலும் தெரிவித்தார். (இ)

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | நெல்லியடி | கொடிகாமம் | சுன்னாகம் | சாவகச்சேரி | கிளிநொச்சி | மருதனார் மடம் |
|---|---|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 70 | 80 | 70 | 70 | 70 | 100 | 80 |
| உருளைக்கிழங்கு | 80 | 80 | 65 | 70 | 70 | 80 | 80 |
| பச்சைமிளகாய் | 100 | 100 | 100 | 90 | 140 | 160 | 100 |
| தக்காளி | 40 | 40 | 25 | 30 | 40 | 80 | 30 |
| மரவள்ளிக்கிழங்கு | 50 | 40 | 40 | 40 | 50 | 70 | 40 |
| கோவா | 50 | 40 | 35 | 50 | 50 | 80 | 40 |
| கரட் | 120 | 100 | 70 | 80-160 | 100 | 120 | 80 |
| பூசணி | 40 | 30 | 30 | 25 | 40 | 60 | 50 |
| புடோல் | 60 | 30 | 30 | 50 | 60 | 60 | 50 |
| வாழைக்காய் | 50 | 30 | 40 | 50 | 50 | 40 | 40 |
| சின்ன வெங்காயம் | 80 | 60 | 65 | 50 | 70 | 80 | 50 |
| பெரிய வெங்காயம் | 80 | 80 | 65 | 70 | 70 | 80 | 80 |
| பாகற்காய் | 140 | 140 | 100 | 100 | 100 | 120 | 100 |
| வெண்டிக்காய் | 120 | 100 | 60 | 70 | 70 | 100 | 80 |
| கருணைக்கிழங்கு | 80 | 100 | 50 | 80 | 70 | 120 | 100 |
| பயற்றங்காய் | 140 | 100 | 70 | 80 | 80 | 80 | 80 |
| லீக்ஸ் | 140 | 100 | 100 | 100 | 140 | 160 | 100 |
| பீற்றூட் | 60 | 100 | 60 | 80 | 70 | 100 | 80 |
| கறிமிளகாய் | 120 | 100 | 80 | 100-160 | 80 | 120 | 100 |
| முருங்கைக்காய் | 600 | 400 | 350 | 500 | 400 | 500 | 600 |
| போஞ்சி | 180 | 200 | 70 | 120 | 140 | 160 | 150 |
| கத்தரிதம்புள்ள | 60 | 50 | 60 | 50 | — | 100 | 70 |
| கீரை - 1பிடி | 40 | 40 | 20 | 30 | 50 | 30 | 30 |
| தேசிக்காய் | 160 | 110 | 110 | 120 | 160 | 250 | 100 |
| தேங்காய் (ஒன்று) | 50 | 30-50 | 30-40 | 50 | 40 | 35-40 | 40 |
| இராசவள்ளி | 150 | 200 | 110 | 130 | 150 | 120 | 150 |
| வெங்காயப்பூ | 120 | 100 | — | 140 | 70 | — | 80 |
| முள்ளங்கி | 40 | 40 | — | 50 | — | 60 | 30 |
| பொன்னாங்காணி | 40 | 40 | 20 | 30 | 40 | 30 | 30 |
| வல்லாரை | 20 | 10 | 10 | 10 | 20 | 20 | 20 |
| ஈரப்பலா | 80 | — | 50 | — | — | — | — |

# இலங்கைத் தமிழர் வரலாறு

## விடுதலைப்புலிகள் ஆயுதங்களை ஒப்படைத்தனர் 140

...அனைத்து ஆயுதங்களையும் ஒப்படைக்க முன்வந்துள்ள இந்த நிகழ்ச்சி எங்களின் ஜனநாயக சமுதாயத்தை உலுக்கிய வன்முறையையும் ரத்தக்களரியையும் முடிவு கட்ட வழிகாட்டும் என நம்புகிறோம்.

இப்பொழுது முதல் இலங்கையர்களாக நாம் யாவரும் சமாதானத்துடனும் நெருங்கிய உறவுடனும் அமைதியாக வாழவேண்டும் என்பதே எங்களின் முழுமனதான பிரார்த்தனை.

ஆயுதங்களை ஒப்படைத்த விடுதலைப் போராட்ட விரர்களுக்குப் பொது மன்னிப்பு வழங்க அதிபர் ஜெயவர்த்தன உத்தரவு பிறப்பித்துள்ளார் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு அவர் பேசினார்.

**கடிதம்**

பொது மன்னிப்பு அளிப்பதற்கான கடிதத்தை விடுதலைப்புலி தளபதி யோகியிடம் கொடுத்தார்.

காவலில் இருக்கும் விடுதலைப்புலிகளுக்கும் வெளியே இருக்கும் விடுதலைப்புலிகளுக்கும் இலங்கை அரசு பொது மன்னிப்பு அளிக்கிறது என்று, அந்தக் கடிதத்தில் குறிப்பிடப்பட்டு இருந்தது.

ஆயுத ஒப்படைப்பு நிகழ்ச்சி நடைபெற்ற இடத்தில் இந்திய கொடிகளும் இலங்கை கொடிகளும் விடுதலைப் புலி கொடிகளும் பறந்தன.

**பாலசிங்கம் பேட்டி**

சென்னையில் விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகர் பாலசிங்கம் அளித்த பேட்டியில் கூறியதாவது:-

இந்திய சமாதானப் படையிடம் விடுதலைப்புலிகளின் தங்களுடைய எல்லா ஆயுதங்களையும் முழு மனதுடன் ஒப்படைப்பார்கள். ஆயுதங்களை நாங்கள் ஒளித்து வைக்கப் போவதில்லை.

எங்களுடைய எல்லா ஆயுதங்களையும் இந்திய இராணுவத்திடம் ஒப்படைப்போம் என்று இந்திய அரசுக்கு வாக்குறுதி கொடுத்துள்ளோம். அந்த வாக்குறுதியைக் காப்பாற்றுவோம்.

இவ்வாறு பாலசிங்கம் கூறினார்.

**பிரபாகரன்**

இந்த நிலையில் கொழும்பில் நிருபர்களுக்குப் பிரபாகரன் பேட்டி அளித்தார்.

அவர் கூறியதாவது:-

**லட்சியம்**

இந்திய அரசாங்கத்தின் முயற்சிகளுக்கு மதிப்பு அளிக்கும் விதத்தில் தமிழீழ விடுதலைப்புலி இயக்கம் தனது ஆயுதங்களைச் சமாதானப் படை வசம் ஒப்படைத்துள்ளது. அதே சமயம் எங்கள் இயக்கத்தின் லட்சியத்தை நாங்கள் விட்டுவிடமாட்டோம்.

இலங்கைத் தமிழர்கள் மீது மறுபடியும் சிங்களர்கள் தாக்குதல் நடத்தினால் அதைப் பார்த்துக் கொண்டு எங்கள் இயக்கம் (தமிழீழ விடுதலைப்புலிகள்) சும்மா இருக்காது.

தமிழர்களைக் காப்பாற்றுவதற்காக மீண்டும் ஆயுதம் ஏந்திப் போராடத் தயங்க மாட்டோம்.

**பலவீனம் அல்ல**

நாங்கள் ஆயுதத்தை ஒப்படைத்தது பலவீனத்தால் அல்ல. யாருக்கும் பயந்து நாங்கள் ஆயுதங்களை ஒப்படைக்கவில்லை.

இந்தியா எங்களுக்காகப் பாடுபட்டது. எங்களுடைய போராட்டத்தின்போது அகதிகளாகச் சென்ற தமிழர்களுக்கு ஆதரவு அளித்து பாதுகாத்தது.

எங்கள் போராட்டத்துக்கு இந்தியா தார்மீக ஆதரவு அளித்தது. எனவே எங்களுக்குப் பாதுகாப்பு அளித்த இந்தியாவின் முயற்சிகளுக்கு மதிப்பு அளிக்கும் விதத்தில் ஆயுதங்களை ஒப்படைத்தோம்.

எங்களைப் பாதுகாத்துக் கொள்ளும் தெம்பும் திராணியும் நிச்சயம் எங்களுக்கு உண்டு.

**எதிரி**

புதிய ஒப்பந்தத்தில் எனக்கு உடன்பாடு இல்லை. அதற்கு எதிரான கருத்து உடையவன் நான். இந்த ஒப்பந்தம் இந்தியாவுக்கும் இலங்கைக்கும் இடையே ஏற்பட்ட ஒப்பந்தம். நாங்கள் அதில் கையெழுத்து போடவில்லை.

ஆனாலும் ஆயுதங்களை ஒப்படைத்தோம். அதற்குக் காரணம் பிரதமர் ராஜீவ் காந்திதான்.

சிங்கள இனவெளித் தாக்குதலில் இருந்து தமிழர்களுக்கு முழு பாதுகாப்பு அளிக்கப்படும் என்று ராஜீவ் காந்தி உறுதி அளித்துள்ளார். அதனால்தான் ஆயுதங்களை ஒப்படைத்தோம்.

இந்த ஒப்பந்தம் வெற்றி பெறுமா? அல்லது தோல்வி அடையுமா? என்று கருத்து சொல்ல முடியாது. அது பற்றி பொறுத்து இருந்து தான் பார்க்க வேண்டும். ஆனால் இந்த ஒப்பந்தம் தானாகவே அழிந்துவிடும்.

**இணைப்பு**

வடக்கு மற்றும் கிழக்குப் பகுதியை ஒன்றாக இணைப்பது பற்றி மக்கள் மத்தியில் பொது வாக்கெடுப்பு நடத்தப்போவதாக அறிவிக்கப்பட்டுள்ளது. அது வரட்டும்.

இலங்கையில் கிழக்கு மற்றும் வடக்குப் பகுதிகளை நிபந்தனை எதுவும் இல்லாமல் இணைக்க வேண்டும் என்பதுதான் எங்கள் குறிக்கோள்.

இவ்வாறு பிரபாகரன் கூறினார்.

**என்ன நடக்கும்**

புதிதாக அமைக்கும் பகுதிக்குத் தமிழீழ விடுதலைப் புலி இயக்கத்தைச் சேர்ந்தவர் முதல் மந்திரியாக வருவாரா? என்று ஒரு நிருபர் கேட்டார்.



(தொடரும்)

# அரசாங்கத்திற்கு எதிராக போராட்டம் நடத்த வெளிநாட்டு நிதி கேட்கும் கூட்டு எதிர்க்கட்சி

(கொழும்பு)

அரசாங்கத்துக்கு எதிராக நாடளாவிய ரீதியில் போராட்டங்களை முன்னெடுக்க வெளிநாட்டு நிதியுதவிகளை கோருவதற்கு கூட்டு எதிர்க்கட்சி தீர்மானம் எடுத்துள்ளது.

இதன் ஒருகட்டமாக நாடாளுமன்ற உறுப்பினர்கள் விமல் வீரவன்ஷ மற்றும் ரோஹித அபேகுணவர்த்தன ஆகியோர் கடந்த 20 ஆம் திகதி ஜப்பானுக்கு சென்று நிதியுதவிகளை பெற்றனர் என்று தகவல்கள் வெளியாகயுள்ளன. எனினும் அவர்கள் எதிர்பார்த்த நிதியுதவிகள் கிடைக்கவில்லை என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஜப்பானில் குறித்த இருவரும் சுமார் ஆயிரம் இலங்கையர்களை அழைத்து கூட்டம் ஒன்றை ஏற்பாடு செய்ய திட்டமிட்டனர். எனினும் 100 பேரே இந்தக் கூட்டத்துக்கு வந்திருந்தனர்.

ஜப்பானில் உள்ள பௌத்த பிக்குவை இந்தக் கூட்டத்துக்கு அழைத்த போதும் அவர் இலங்கையின் அரசியலில் தாம் தொடர்பு பட முடியாது என்று கூறிவிட்டதாகவும் தகவல்கள் வெளியாகியுள்ளன.

முன்னாள் பாதுகாப்பு செயலாளர் கோத்தபாய இந்தக்கூட்டத்தில் பங்கேற்கவிருந்த போதும் இறுதி நேரத்தில் அவர் ஸ்கைப் மூலம் கூட்டத்தினர் மத்தியில் உரையாற்றும் தீர்மானத்தை மேற்கொண்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-5)

# நல்லாட்சி கொள்கைகளுக்கு புறம்பாக அரசு செயற்படாது

## ஊடக அமைச்சர் கயந்த வாக்குறுதி



(கொழும்பு)

**நல்லாட்சி கொள்கைகளுக்கு புறம்பாக அரசாங்கம் செயற்படாது என ஊடக அமைச்சர் கயந்த கருணாதிலக்க தெரிவித்துள்ளார்.**

கொழும்பு வார இறுதி பத்திரிகையொன்றுக்கு அளித்த நேர்காணலில் அவர் இதனை சுட்டிக்காட்டியுள்ளார். அவர் நேர்காணலில் மேலும் கூறியதாவது,

ஊடகங்களுக்கு பூரண சுதந்திரம் வழங்கப்பட்டுள்ளது. விரைவில் தகவல் அறிந்து கொள்ளும் சட்டம் சட்ட மூலமாக்கப்படும்.

எட்கா ஒப்பந்தம் ஊடாக நாட்டுக்கு எவ்வித பாதிப்பும் ஏறடப்போவதில்லை.

இதனை மககள் சரியாக புரிந்து கொண்டால், எதிர்ப்பவர்களுக்கு எதிராக மக்கள் வீதியில் இறங்கி போராடுவார்கள்.

சில தரப்பினர் தங்களது நோக்கங்களை அடைந்து கொள்ள குறுக்கு வழியில் போலிப் பிரசாரங்களை மேற்கொண்டு வருகின்றனர்.

நிறைவேற்று அதிகாரம், ஜனாதிபதி அதிகாரம் ஆகியனவற்றை பயன்படுத்தி தலைமுறைகளாக ஆட்சி நடத்த எத்தனித்த நபர்களை தோற்கடித்த நாம் எதற்காக உள்ளூராட்சி மன்றத் தேர்தலை நடத்த அஞ்சப் போகின்றோம்.

தேர்தல் முறைமையை மாற்ற வேண்டுமென கோரிய தரப்பினர் இன்று வேறு விமர்சனங்களை முன் வைக்கின்றார்கள்.

துண்டு துண்டாக எதிர்க்கட்சிகள் சிதறியுள்ள நிலையில் அரசாங்கம் தேர்தலுக்கு அஞ்சுமா?

கடந்த அரசாங்கத்தின் பாவச் செயல்களுக்கான தண்டனைகளை அனுபவிக்க நேரிட்டுள்ளது என கயந்த கருணாதிலக்க தெரிவித்துள்ளார். (இ-5)

**இணைய நிதி மோசடி**

# குற்றம் சுமத்தப்பட்டவர்கள் இன்னும் கைதாகவில்லை

பங்களாதேஷின் மத்திய வங்கி ஊடாக மேற்கொள்ளப்பட்ட பாரிய இணைய நிதி மோசடி தொடர்பில் ஆராய பங்களாதேஷின் முதலீட்டாளர்கள் இலங்கைக்கு வரவுள்ளனர்.

இந்தநிலையில் குறித்த பண மோசடியில் ஈடுபட்டதாக சந்தேகிக்கப்படும் சாலிகா நிதியம் என்ற இலங்கை அமைப்பின் பணியாளர்கள் இன்னும் கைது செய்யப்படவில்லை.

இவர்களை நாட்டில் இருந்து தப்பிச் செல்வதற்கு கொழும்பு நீதிமன்றம் கடந்த வாரத்தில் தடையுத்தரவை பிறப்பித்திருந்தது.

எனினும் தெஹிவளையில் தளத்தைக் கொண்டுள்ளதாக நம்பப்படும் குறித்த நிறுவனத்தின் பணிப்பாளர்களை இன்னும் கைது செய்ய முடியவில்லை என்று சீஐடி தெரிவித்துள்ளது.

பங்களாதேஷ் மத்திய வங்கியின் ஊடாக சாலிகா நிதியத்துக்கு 81 மில்லியன் டொலர்கள் பரிமாற்றம் செய்யப்பட்டிருந்தன. எனினும் 20 மில்லியன் டொலர்களை பரிமாற்றம் செய்யும் போது அது அதிகாரிகளால் தடுக்கப்பட்டதுடன் நிதி மோசடியும் தெரியவந்தது. (இ-5)

# நாளொன்றுக்கு ஒரு மணித்தியால மின்தடை மேற்கொள்ளப்படலாம்

(கொழும்பு)

நாளொன்றுக்கு ஒரு மணித்தியால மின்சாரத் தடையை அமுல்செய்வது தொடர்பில் மக்களுக்கு உண்மையை கூறுமாறு இலங்கை மின்சார சபையின் பொறியியலாளர்கள் அரசாங்கத்திடம் கோரியுள்ளனர்.

நாட்டின்மின்சாரதேவையை பூர்த்தி செய்ய 100 மெகா வோட்ஸ் மின்சார அலகை கொள்வனவு செய்ய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. எனினும் அதற்கு இன்னும் நான்கு வாரங்கள் தேவைப்படும்.

இந்தநிலையில் மின்சார உற்பத்திக்கான நீர்நிலைகளில் கிரமமாக நீர் மட்டம் குறைந்து வருவதன் காரணமாக மின்சார உற்பத்தியில் பாதிப்பு ஏற்படக்கூடும் என்று பொறியியலாளர் சங்கத் தலைவர் அதுல வன்னியாராச்சி தெரிவித்துள்ளார்.

இதன் காரணமாக நாட்டில் ஒரு மணித்தியால மின்சார விநியோகத்தடையை அமுல் செய்யவேண்டும்.

இந்த தீர்மானத்தை எடுக்காதுபோனால், நிலைமையை சமாளிக்க 500 மெகாவோட்ஸ் அலகை கொள்வனவு செய்யவேண்டிய நிலை ஏற்படும்.

இதனால் இலங்கையின் பொருளாதாரத்திலும் பாதிப்பு ஏற்படும் என்றும் வன்னியாராச்சி தெரிவித்தார். (இ-5)

## இன்று ஒரு தகவல்

### எதையும் சமாளிக்கும் ஆற்றலை எப்படிப் பெறுவது?

உடல்மட்டும்உறுதியாக இருந்தால்போதாது. உள்ளமும் உறுதியுடன் இருக்க வேண்டும். அப்போது தான் இந்த உலகத்தில் எதையும் சமாளித்து நம்மால் வாழ முடியும்.

வாழ்க்கையில் திடீர் என்று சில எதிர்பாராத தாக்குதல்கள் ஏற்படலாம். விபத்து ஏற்படலாம். உடலில் தாங்கமுடியாத வலி ஏற்படலாம். நோய் ஏதாவது ஏற்படலாம். தோல்வி ஏற்படலாம். எது வந்தா லும் அதைச் சமாளிக்கும் ஆற்றல் வேண் டும். இல்லாவிட்டால் வாழ்க்கை மாபெரும் தோல்வி ஆகிவிடும்.

உலகத்தில் பிரச்சினைகள் எப்போதும் நிறைந்திருக்கின்றன .பிரச்சினைகள் இருந்தால்தான் மனிதன் அவற்றை எதிர்த்துச் சமாளித்து ஆற்றல் பெற முடியும். இதற்காகவே பிரச்சினைகளைக் கடவுள் உண்டாக்கியிருக்கின்றார் என்று அறிஞர்கள் கருதுகிறார்கள். இது உண்மையே.

பிரச்சினைகளை எதிர்த்து வென்று வாழ்பவன்தான் மனிதன். மற்றவர்கள் எல்லோரும் மிருகங்களைப் போன்றவர்கள்.

மிருகங்கள் எவ்வளவுதான் வலிமையுடன் இருந்தாலும் ஆபத்தைக் கண்டு ஓட்டம் பிடிக்கும் மனிதனும் இதே செயலைச் செய்யலாமா?

ஒவ்வொருவருக்கும் தேவையான உண்மையான பலம் அவர்கள் மனத்தில் மறைந்திருக்கிறது. இதை எல்லோரும் உணர வேண்டும்.

எதிர்வீட்டு இராமனுக்கு இருக்கும் துணிவும் ஆற்றலும் நமக்கு இல்லையே? என்று ஒருவன் எண்ணுகிறான். அப்படி எண்ணுகிறவன் கோழையாகி விடுகிறான்.

ஆனால் அவன் மனதிலும் துணிவும் ஆற்றலும் பதுங்கி இருக்கின்றன. இவற்றை பயன்படுத்த அவனுக்குத் தெரியவில்லை. அவ்வளவுதான்!

துன்பம் வந்தால் மற்றவர்கள் மீது பழி போடுவதில் பயன் இல்லை. விதியின் மீது பழியைப் போடுவதும் தவறு.

துன்பத்துக் காரணம் என்ன என்று கண்டு பிடித்து முதலில் காரணத்தைப் போக்க வேண்டும். இல்லாவிட்டால் தொடர்ந்து துன்பங்கள் வரும்.

ஒருவருக்கு மனம் தான் எல்லாம். அவன் மனதில் என்ன எண்ணுகிறானோ அதே போல அவன் மாறி விடுகிறான் என்கிறார் புத்தர்.

எண்ணம் போல் வாழ்வு என்பதும் இதை ஒட்டிய கருத்தே.

தான் நல்லவனாக வேண்டும் என்று ஒருவன் மனப் பூர்வமாக எண்ணினால் அவன் நல்லவனாக மாறுகிறான்.

கெட்டவன் என்று எண்ணினால் கெட்டவனாக மாறுகிறான்.

பலமுள்ளவன் என்று எண்ணினால் பலமுள்ளவன் ஆகிறான்.

கோழை என்று எண்ணினால் கோழை ஆகி விடுகிறான்.

ஆகையால் மனத்தைப் பக்குவப்படுத்திக் கொள்ள ஒவ்வொருவரும் பழகிக் கொள்ள வேண்டும். மனத்தில் தோன்றும் ஆரோக்கியமான எண்ணங்களே மனிதனைப் பெரும்பாலும் வெற்றியுள்ளமனிதனாக மாற்றி விடுகின்றன. இது உறுதி.

**லேனா தமிழ்வாணன்**



# சிறுவர் அரங்கம்

1394

## தூதன்!

முன்னொரு காலத்தில் பள்ளிபாளையம் என்னும் நாட்டை அரசன் ஒருவர் ஆண்டு வந்தார். அவர் சரியான சாப்பாட்டு ராமன். ஒவ்வொரு வேளையும் பலவிதமான பலகாரங்களும், அறுசுவை உணவுகளை உட்கொள்வார்.

இதைத் தவிர அவரிடம் இன்னொரு கெட்ட பழக்கம் இருந்தது. அனைவருடைய எதிரிலும் உட்கார்ந்து சாப் பிடுவதில் அவருக்கு ஓர் அலாதி இன்பம். அவர் சாப்பிடும் போது யாராவது ஒருவர் ஏக்கப் பார்வை பார்க்கணும். அப்போதுதான் அவருக்கு இன்பமாக சாப்பாடு இறங்கும்.

இதன் காரணமாக அரசர் சாப்பிடுவதற்கு முன் நிறையப் பேரைக் கொண்டுவந்து உணவுக் கூடத்திற்குள் நிறுத்தி விடுவர். அவர்கள் எதிரில் அமர்ந்து ஆனந்த மாகச் சாப்பிடுவார். அரசர் சாப்பிடும் அறுசுவை உண வைக் கண்டதும் பார்ப்பவர் களின் நாக்கில் நீர் ஊறும். ஆயினும் என்ன செய்ய முடியும்? பார்ப்பதோடு சரி.

இவ்வாறு பல காலம், பல பேர் முன்னிலையில் சாப்பிட்டு வந்தார் அரசர்.

ஒருநாள் அரசர் சாப்பிட்டுக் கொண்டிருப்பதைப் பார்த்த



ஒருவனுக்கு நாக்கில் தண் ணீர் ஊறியது. அவனால் ஆவலை அடக்க முடியவில்லை. கபகப வென்று கூட்டத்தை விலக்கிக் கொண்டு அரசரின் முன்னால் போய்விட்டான். சாப்பிட்டுக் கொண்டிருந்த அரசர் தன் எதிரே வந்து நிற்பவனைப் பார்த்து, "யார் நீ?" என்று கேட்டார்.

"நான் ஒரு தூதன்" என் றான் வந்தவன்.

"அப்படியா? சரி, உட்கார்," என்றார் அரசர்.

வந்தவனும் உட்கார்ந் தான். அவனுக்கும் உணவு பரிமாறப்பட்டது. வயிறு புடை க்கச் சாப்பிட்டான். தான் சாப் பிடுவதை மற்றவர்கள் பார்க்க வேண்டுமென்று நினைத்த, அரசர் இன்று மற்றவர் சாப்பிடு வதையும் பார்க்கலானார்.

புதியவன் ஆவல் ஆவலாக சாப்பிடுவதைப் பார்த்து பாவம், நீண்ட தூரத்திலிருந்து வந்தி ருக்கிறான் போலிருக்கிறது நன்றாகச் சாப்பிடட்டும் என்று நினைத்துக் கொண்டார்.

புதியவன் சாப்பிட்டு முடித்தான. நீண்டதொரு ஏப்பம் விட்டான்.

அரசர் அவனைப் பார்த்து, "நீ எந்த நாட்டின் தூதுவன்? வந்த செய்தியைச் சொல்," என்றார். "நான் எந்த நாட்டின் தூதுவனுமல்ல. வயிற்றின் தூதுவன்தான்," என்றான்.

இதைக் கேட்டதும் அரசரு க்கு கோபம் பொங்கியது.

"என்ன சொல்கிறாய்? வயிற்றின் தூதுவனா?" என்று கோபத்துடன் கர்ஜித் தார் அரசர்.

"ஆம் அரசே! நான் இந்த வயிறாகிய அரசரின் தூதன். இவருடைய வம்சத்தில்தான் இந்த உலகம் முழுவதும் அடங்கிக் கிடக்கிறது. இந்த அரசரின் ஆணைக்குக் கீழ்ப் படியாதவர்களே கிடையாது. வயிற்றுப் பசிக்காக ஊரை விட்டு, நாட்டை விட்டு எவ்வ ளவோ பேர் கடுமையாக உழைக்கின்றனர். இரவு, பகல் இடுப்பொடியப் பாடு படுகின்றனர். அனைத்துக் கும் காரணம் இந்த வயிற்று அரசின் கட்டளைதான்.

"தாங்கள் கூட அவருடைய கட்டளையை மீற முடியாது. அப்படிப்பட்ட அசாதாரணமான மகிமை பொருந்திய வயிற்று அரசரின் தூதன்தான் நான். அவருடைய ஆணையை நிறைவேற்றவே வந்தேன்," என்றான் புதியவன்.

அவனுடைய பேச்சு அரச ரைச் சிந்திக்க வைத்தது. அன்றுதான் பசிக் கொடுமை யின் தன்மையை அவர் புரிந்து கொண்டார்.

அன்று முதல் நாள் தோறும் அரண்மனை உணவுக் கூடத்தில் ஏழை, எளியவர் அனைவருக்கும் உணவு அளிக்குமாறு உத்தர விட்டார். அவர்கள் சாப்பிடும் போது நேரில் இருந்து கவனித்தார்.

முன்பு பார்வையாளர் களாக ஏழை மக்கள் இருந்த னர். அவர்கள் திரும்பிச் செல்லும்போது வயிற்றெரிச் சலுடன் திரும்பிச் சென்றனர்.

இப்போது பார்வையாள ராக அரசர் இருந்தார். இப் போது உணவு சாப்பிட்டுவிட்டு செல்லும் ஏழைகள் அரசரை மனமார வாழ்த்திச் சென்றனர்.



## இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

03.2016 28

- 193 - உரோம் பேரரசன் பேர்ட்டினாக்ஸ் படு கொலை செய்யப்பட்டான்.
- 845 - ரக்னார் லொட்புரொக் என்பவனின் தலை மையில் நடந்ததாகக் கருதப்படும் வைக் கிங் தாக்குதல்களுக்கு பாரிஸ் அடி பணிந் தது.
- 1802 - ஒல்பேர்ஸ் என்பவர் 2 பேலெஸ் என்ற சிறுகோளைக் கண்டுபிடித்தார்.
- 1809 - மெடெலின் என்ற இடத்தில் இடம்பெற்ற சமரில் பிரான்ஸ் ஸ்பெயினை வென்றது.
- 1879 - ஆங்கிலோ-சூலு போர்: பிரித்தானியப் படைகள் ஹ"லோபேன் நகரில் இடம்பெற்ற சமரில் படுதோல்வியடைந்தனர்.
- 1930 - கொன்ஸ்டன்டீனபில், அங்கோரா ஆகியன இஸ்தான்புல் மற்றும் அங்காரா எனப் பெயர் மாற்றம் பெற்றன.
- 1939 - ஸ்பானிய உள்நாட்டுப் போரில் பிரான் சிஸ்கோ பிராங்கோ மாட்ரிட் நகரைக் கைப்பற்றினான்.
- 1979 ஐக்கிய அமெரிக்காவில் பென்சில் வேனியா மாநிலத்தில் ஓடும் ஸஸ்குவான ஆற்றின் கரையில் உள்ள மிடில்டன் நகரில் அணுமின் நிலையத்தில் விபத்து ஏற்பட்டது.
- 1994 - தென்னாபிரிக்காவில் சூலு இனத்தவர் களுக்கும் ஆபிரிக்க தேசிய காங்கிரஸ் ஆதரவாளர்களுக்கும் இடையில் ஜோகார் னஸ்பேக் நகரில் இடம்பெற்ற கைகலப்பில் 18 பேர் கொல்லப்பட்டனர்.
- 1988 : ஹலப்ஜா நகரின் குர்திய இன மக் களுக்கு எதிராக இரசாயன ஆயுதங்கள் பாவிக்கப்பட்டதில் சுமார் 5 ஆயிரம் பொது மக்கள் கொல்லப்பட்டதாக மதிப்பிடப்பட் டது.
- 2005 - இந்தோனீசியாவின் சுமாத்ராவில் இடம்பெற்ற 8.7 ரிக்டர் அளவு நிலநடுக் கத்தினால் 1,300 பேர் கொல்லப்பட்ட னர்.

### பிறப்புக்கள்

- 1862 - அரிஸ்டைட் பிறயண்ட், நோபல் பரிசு பெற்றவர் (இ. 1932)
- 1868 - மாக்சிம் கார்க்கி, ரஷ்ய எழுத்தாளர் (இ. 1936)
- 1892 - கோர்னெயில் ஹைமான்ஸ், நோபல் பரிசு பெற்றவர் (இ. 1968)
- 1919 - டி. கே. பட்டம்மாள், கருநாடக இசைப் பாடகி (இ. 2009)
- 1930 - ஜெரோமி பிரீட்மான், நோபல் பரிசு பெற்ற அமெரிக்கர்
- 1982 - சோனியா அகர்வால், இந்தியத் திரைப்பட நடிகை

### இறப்புக்கள்


- 1943 - எஸ். சத்தியமூர்த்தி, இந்திய விடு தலைப் போராட்ட வீரர்
- 1982 - வில்லியம் ஜியோக், நோபல் பரிசு பெற்ற கனடியர் (பி. 1895)
- 2006 - வேதாத்திரி மகரிஷி, தத்துவஞானி (பி. 1911)

# விடுதலைப்புலிகளை என்றும் ஆதரிப்பேன்

## வைகோ பேட்டி

(கொழும்பு)

**பொடா நீதிமன்றில் விடுதலைப் புலிகளை ஆதரிக்கிறேன் என்று நான் கூறியபோது, நீதிபதி குறுக்கிட்டு நன்றாக யோசித்து சொல்லுங்கள் என்றார். அதற்கு நான், விடுதலை புலிகளை நேற்றும், இன்றும், என்றும் ஆதரிப்பேன் என்று கூறினேன். நான் எதிலிருந்தும் வாபஸ் வாங்கியது இல்லை. இவ்வாறு வைகோ தெரிவித்துள்ளார்.**



மக்கள் நலக்கூட்டணியின வழக்கறிஞர்கள்மாநில மாநாடு நேற்று முன்தினம் முற்பகல் 10 மணிக்கு திருச்சி ஹோட்டல் பெமினா லோடடஸ் அரங்கத்தில் தொடங்கியது.

இதில் ம.தி.மு.க. பொதுச் செயலாளர் வைகோ, விடுதலை சிறுத்தைகள் கட்சி தலைவர் தொல்.திருமாவளவன், இந்திய கம்யூனிஸ்டு மாநில செயலாளர் முத்தரசன், மார்க்சிஸ்டு கம்யூனிஸ்டு மாநில செலயாளர் ஜி.ராம கிருஷணன், தே.மு.தி.க.மாநில சட்டத்தரணி அணி செயலாளர் பன்னீர், துணை செயலாளர் பாலாஜி ஆகியோர் கலந்துகொண்டனர்.

மாநாட்டில் பங்கேற்க வந்த ம.தி.மு.க. பொதுச் செயலாளரும், மக்கள் நலக்கூட்டணி ஒருங்கிணைப்பாளருமான வைகோ நிருபர்களிடம் தெரிவிக்கையில்,

இந்த மாநாட்டில் கலந்து கொள்ள வந்த நேரத்தில் எனக்கு தி.மு.க.வில் இருந்து ஒரு நோட்டீஸ் அனுப்பி உள்ளார்கள், மிக்க மகிழ்ச்சி. நேற்று முன்தினம் நான் கூறியதை வாபஸ வாங்காவிட்டால் சிவில், கிரிமினல் வழக்கு தொடருவோம் என்று அதில் கூறப்பட்டுள்ளது.

2006 சட்டமன்ற தேர்தலில் இதேபோன்று நான் ஊழல் குற்றச்சாட்டு கூறியதற்கு என் மீது ஒரு அவதூறு வழக்கு தொடர்ந்தார்கள். அந்த வழக்கும் 10 வருடமாக நடந்து வருகிறது. ஆனால் வழக்கு தொடர்ந்த அவர்கள் நீதிமன்றுக்கு வரமாட்டேன் என்கிறார்கள்.

இதேபோன்று ஈழத்தில் நடப்பது என்ன? என்று நான் கேட்ட கேள்விக்கு என் மீது தேசத்துரோக வழக்கு போட்டார்கள். இதில் சாட்சிகள் விசாரிக்கப்பட்டு விட்டார்கள். இதை நிரூபித்தால் ஆயுள் தண்டனை வரை விதிக்க முடியும். ஆயுள் தண்டனை விதித்தால் சந்தோசமாக ஏற்றுக்கொள்வேன். அது தற்போது உச்ச நீதிமன்றம் சென்று முடிந்து இருக்கிறது. எதையும் வாபஸ் பெறும் எண்ணம் இல்லை.

இதேபோன்று பொடா நீதிமன்றம் விடுதலைப்புலிகளை ஆதரிக்கிறேன் என்று நான் கூறியபோது, நீதிபதி குறுக்கிட்டு நன்றாக யோசித்து சொல்லுங்கள் என்றார். அதற்கு நான், விடுதலைப்புலிகளை நேற்றும், இன்றும், என்றும் ஆதரிப்பேன் என்று கூறினேன். நான் எதிலிருந்தும் வாபஸ் வாங்கியது இல்லை.

இப்போது எனக்கு நோட்டீஸ் அனுப்பியவர்களை பார்த்து நான் ஒரு கேள்வி கேட்கிறேன். இந்த நோட்டீஸ் அனுப்ப வேண்டும் என கலைஞரே நினைத்திருக்கமாட்டார். அவருக்கு தெரிந்து இருக்காது. ம.தி.மு.க.வில் இருந்து நிர்வாகிகளை பணம் தருகிறோம், எம்.எல்.ஏ. சீட் தருகிறோம் என்று கூறி இழுத்தார்கள். இந்த விடயம் கருணாநிதிக்கு தெரியாமல் தான் நடந்திருக்கும் என்றேன்.

அதன் பிறகு கலைஞரை தொந்தரவு செய்து பதில் பேச வைத்தார்கள். அவர் அதற்கு எனக்கு தெரியாமல் கட்சி நடந்திருக்குமா? என்று பிறகு சொன்னார். இப்போதும் நோட்டீஸ் அனுப்பியது க ணாநிதிக்கு தெரிந்திருக்காது. இதிலும் பின்னர் கலைஞரை விட்டு பிறகு பேச வைப்பார்கள்.

2ஜி அலை வரிசை ஊழல் வழக்கில் கனிமொழியை பலிகடா ஆக்கிவிட்டார்கள்.. பல ஆயிரம் கோடி கொள்ளையடித்தவர்கள் பதுங்கி கொண்டார்கள்.

ஸ்டாலின், சாதித் பாவா சந்தப்பின்போது நடந்தது என்ன? சாதிக் பாட்ஷா மரணத்தின் பின்னணியில் நடந்தது என்ன? பிரதமரை பார்த்து கேட்கிறேன். இது குறித்து சி.பி.ஐ. விசாரிக்க வேண்டும். சாதிக் பாட்ஷா மரணத்திற்கு தி.மு.க. தான் காரணம். சேராத இடம தேடி சேர்ந்து வஞ்சத்தில் வீழ்ந்தாயடா... என்ற வாசகத்துடன் அவரது குடும்பத்தினர் நோட்டீஸ் அச்சடித்து உள்ளாரகள். இதற்கு வழக்கு போட தைரியம் இல்லாத ஸ்டாலின், எனக்கு நோட்டீஸ் அனுப்பியுள்ளார்.

இவ்வளவு சீட் கொடுக்கிறார்கள், பணம் கொடுக்க முயற்சிக்கிறார்கள் என்று செய்தித் தாள்களில் வந்தவற்றைத் தான் நான் கூறினேன்.

இதற்கு எனக்கு நோட்டீஸ் அனுப்பி இருக்கிறார்கள். இந்த வழக்கை சந்திக்க தயாராக இருக்கிறேன். 2ஜி வழக்கின் பின்னணியில் இருந்தது மு.க.ஸ்டாலின் என்று உறுதியாக கூறுகிறேன். இதற்கு தைரியம் இருந்தால் என் மீது வழக்கு தொடரட்டும் என்று அவர் மேலும் தெரிவித்தார். (இ-5)


## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 675

Search for people, places and things | Nagendram Home

சுதர்சன்





றொகான்



கோகுலன்





ரதி



செரோன்




மீனன்





நீங்கள் பார்த்த ஃபேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

# நீதித்துறையை அச்சுறுத்த முனையும் ராஜபக்ஷக்கள்

**யோ**ஷித கைது செய்யப்பட்ட போது, இவரது கைதை எதிர்த்து நாடு முழுவதும் பாரிய மக்கள் ஆர்ப்பாட்டங்கள் மேற்கொள்ளப்படும் என மகிந்த கருதினார். ஆனால் இவரது இந்த நம்பிக்கையானது பகற்கனவாக முடிந்து போனது.

**இவ்வாறு சிலோன் ருடே நாளிதழில் உபுல் ஜோசப் பெர்னாணடோ எழுதியுள்ள கட்டுரையில் குறிப்பிட்டுள்ளார். இதனை மொழியாக்கம் செய்துள்ளார் நித்தியபாரதி.**



ராஜபக்ஷாக்கள் மற்றும் மைத்திரி-ரணில் அரசாங்கத்திற்கு இடையிலான முறுகல்நிலையானது தற்போது உச்சக் கட்டத்தை அடைந்துள்ளது. அடுத்த மூன்று மாதங்களுக்குள் ராஜபக்ஷாக்களின் ஊழல், மோசடிகள் அனைத்தும் வெளிக்கொணரப்படும் என பிரதமர் ரணில் விக்கிரமசிங்க கடந்த வாரம் தெரிவித்துள்ளதுடன் ராஜபக்ஷாக்கள் அவர்களது வழக்கறிஞர்களுடன் தயாராக இருக்குமாறும் பிரதமர் எச்சரித்துள்ளார்.


ரணில் இந்த எச்சரிக்கையை விடுப்பதற்கு முன்னரும் கூட, தமக்கெதிராக முன்வைக்கப்பட்ட ஊழல் மோசடிக் குற்றச்சாட்டுக்களிலிருந்து தம்மைப் பாதுகாத்துக் கொள்வதற்கான சட்ட ஆலோசனைகளைப் பெறுவதில் ராஜபக்ஷாக்கள் நேரத்தைச் செலவிட்டுள்ளனர். இலங்கையின் தற்போதைய அரசாங்கத்திற்கு எதிராக மக்களைத் திசைதிருப்பி விடுவதன் மூலம் நீதிச்சேவை மீதான அச்சத்தை ஏற்படுத்துவது மட்டுமே ராஜபக்ஷாக்கள் தம்மைப் பாதுகாத்துக் கொள்ளக்கூடிய ஒரேயொரு வழி என சட்ட ஆலோசகர்கள் தெரிவித்துள்ளனர். இவ்வாறான ஒரு சட்ட ஆலோசனையின் விளைவாகவே 'ஹைட் பார்க்' பேரணி இடம்பெற்றது.

யோஷித கைதுசெய்யப்பட்ட போது, இவரது கைதை எதிர்த்து நாடு முழுவதும் பாரிய மக்கள் ஆர்ப்பாட்டங்கள் மேற்கொள்ளப்படும் என மகிந்த கருதினார். ஆனால் இவரது இந்த நம்பிக்கையான்து பகற்கனவாக முடிந்துபோனது. முதலாவது நாள் யோஷித நீதிமன்றுக்குக் கொண்டு வரப்பட்ட போது, அங்கு மகிந்த ராஜபக்ஷாவின் விசுவாசிகளில் ஒரு சிலர் மட்டுமே சமூகம் தந்திருந்தனர். இதன்பின்னர் எப்போதெல்லாம் யோஷித நீதிமன்றுக்கு அழைத்து வரப்படுகின்ற போதிலெல்லாம், ராஜபக்ஷாவின் சொற்ப விசுவாசிகளை மட்டுமே அங்கு காண முடிந்தது. அப்போதுதான் தனது குடும்ப உறுப்பினர்கள் அனைவரும் சிறையில் அடைக்கப்பட்டால் இந்த நிலைதான் காணப்படும் என்கின்ற உண்மையை மகிந்த உணர்ந்து கொண்டதுடன் இவருக்கு பீதி ஏற்பட்டது.

ஆகவே, 'ஹைட் பார்க்' பேரணியானது நீதித்துறைக்கு எச்சரிக்கை சமிக்கையை அனுப்புவதை நோக்காகக் கொண்டே மகிந்தவால் திட்டமிடப்பட்டது. தற்போதைய அரசாங்கத்தை விட நீதிச்சேவை மீதே மகிந்த அதிக அச்சம் கொண்டிருந்தார். மக்களை சிறையில் அடைக்கவோ அல்லது தடுத்து வைக்கவோ வேண்டாம் எனவும் இதனால் அவர்கள் துன்பப்படுவார்கள் எனவும் மகிந்த இந்தப் பேரணியில் தெரிவித்திருந்தார். இது நீதிச்சேவை மீதான மறைமுகமான அச்சுறுத்தலாகவே நோக்கப்படுகிறது.

ஹைட் பார்க் பேரணியானது பாரிய நிதிச் செலவில் மகிந்த விசுவாசிகளால் ஒழுங்குபடுத்தப்பட்டது. மக்களைக் கொண்டு செல்வதற்கான பேரூந்துகள் வாடகைக்கு ஒழுங்குபடுத்தப்பட்டது தொடக்கம் இடம்பெற்ற பல்வேறு செயற்பாடுகள் பாரிய செலவு மேற்கொள்ளப்பட்டதைச் சுட்டிநிற்கின்றன.

இதற்கும் மேலாக, இந்தப் பேரணியில் பாரியளவிலான மக்கள் கலந்து கொண்டனர் என்பதை உறுதிப்படுத்தும் முகமாக air-space



camera தொழிநுட்பத்தைப் பயன்படுத்திய முதலாவது அரசியல்வாதிகளாக ராஜபக்ஷாக்கள் காணப்படுகின்றனர். இவ்வாறானதொரு பேரணியில் அதிக எண்ணிக்கையான மக்கள் வருகை தந்துள்ளனர் என்பதைக் காண்பிப்பதற்காக இதற்கு முன்னர் எவ்வித அரசியற் கட்சிகளாலோ அல்லது பேரணியை ஒழுங்குபடுத்துபவர்களாலோ இவ்வாறானதொரு ஒளிப்பதிவுத் தொழிநுட்பம் பயன்படுத்தப்படவில்லை.

மக்களைத் தவறாக வழிநடத்த விரும்பும் எவரும் மேலதிக தொழிநுட்பத்தைப் பயன்படுத்த முடியும். ஆகவே, தனக்கு ஆதரவாக ஹைட் பார்க் மைதானத்தில் பெருந்தொகையான மக்கள் பேரணியில் கலந்து கொண்டனர் என்பதைக் காண்பித்து அதன்மூலம் நீதிச்சேவை மீது அச்சுறுத்தலை ஏற்படுத்துவதற்கான முயற்சியை மகிந்த மேற்கொண்டார். மேலும் இவர் தனது திட்டங்கள் வெற்றியடைய வேண்டும் என்பதற்காக கோயில்கள் மற்றும் விகாரைகளில் தேங்காய் உடைப்பு வழிபாட்டிலும் ஈடுபட்டார். இலங்கை அரசாங்கத்திற்கு எச்சரிக்கை விடுவதற்காக மட்டுமல்லாது நீதிச்சேவைக்கும் எச்சரிக்கை விடுவதற்காகவே மகிந்த தேங்காய்களை உடைத்து வழிபாட்டை மேற்கொண்டார்.

அரசாங்கத்திற்கு எதிராகத் தேங்காய்களை உடைத்து வழிபாடு செய்ததால் அரசாங்க அமைச்சர்கள் சிலர் இறந்துள்ளதாகவும் பலர் நோய்வாய்ப்பட்டுள்ளதாகவும் மகிந்த தெரிவித்துள்ளார். மேலும், தனது குடும்பத்தினருக்கு எதிராக தீர்ப்பை வழங்கும் நீதிபதிகள் அதே நிலைமையை எதிர்கொள்ள வேண்டியேற்படும் எனவும் மகிந்த நீதிபதிகளுக்கு எச்சரிக்கை விடுத்துள்ளார்.

**பேரணிகளை ஒழுங்குபடுத்துதல்**

பெரும் எண்ணிக்கையிலான மக்கள் பேரணியில் பங்கு கொள்வார்கள் என்பதைக் கூறி மக்களை அச்சுறுத்திய முன்னைய அரசாங்கங்களில் முதலாவது தலைவர் திருமதி.சிறிமாவோ பண்டாரநாயக்க ஆவார். அப்போதைய ஜே.ஆர் அரசாங்கத்தால் சிறிமாவின் சிவில் உரிமை பறிப்பதற்கான முயற்சிகள் இடம்பெற்ற போது அதனை முறியடிப்பதற்காக இவ்வாறானதொரு பேரணி ஒழுங்குபடுத்தப்பட்டது. ஆனால் ஜே.ஆர், சிறிமாவின் தந்திரோபாயத்தை தோல்வியுறச் செய்தார். ஜே.ஆர் ஜெயவர்தன தொடர்பான சுயசரிதை நூலில் பின்வருமாறு விபரிக்கப்பட்டுள்ளது:

'செப்ரெம்பர் 27 இல் முன்வைக்கப்பட்ட அமைச்சரவைத் தீர்மானத்தை எதிர்த்து. திருமதி.பண்டாரநாயக்கவின் ஒழுங்குபடுத்தலில் நாடு தழுவிய பரப்புரை மேற்கொள்ளப்பட்டது. தனது ஆதரவாளர்களை கொழும்பில் ஒன்று சேர்த்து பாரிய பேரணிகளை மேற்கொண்டதுடன் தனது அரசியற் பழிவாங்கலுக்கு ஆதரவாக மக்களைத் திரட்டுதல் போன்றன சிறிமாவின் பிரதான பணிகளாகக் காணப்பட்டன. எந்தவொரு வன்முறையும் இலங்கை அரசாங்கத்தை பாதிக்கும் என்பது இங்கு முக்கியமானதாகும். ஒக்ரோபர் 16 அன்று இடம்பெற்ற மிக முக்கிய விவாதம் ஒன்றில் பங்கெடுப்பதற்கு இலங்கை அரசாங்க நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு தடை விதிக்கப்பட்டது.

**(20 ஆம் பக்கம் பார்க்க...)**

# மேலதிகாரி நல்லவரா? கெட்டவரா?

நாம் பணிக்குச் செல்லும்போது பணியை மட்டும் செய்வதில்லை. பணிகளை மேற்கொள்ளும்போது சில கூட்டல் கழித்தல்கள் ஏற்படுகின்றன. அவை சில நேரங்களில் நன்மையானதாகவும் சில நேரங்களில் தீமை தரத்தக்கதாக இருக்கும். பொதுவாக பணியில் வேண்டும் என்றே சிறுமைபடுத்தப்படுவதும், நோக செய்வதும், எள்ளி நகையாடுவதும் மேலதிகாரியை பொறுத்ததே. கணக்கில் அடங்காத பணி தொடர்பான சிறுமைப்படுத்தும் நிகழ்சசிகள் ஒரே ஒரு இடத்தில்தான் மையம் கொள்ளும் அதுதான் மேலதிகாரி.

SUTTON என்ற நூலாசிரியர் கணக்கிலடங்கா நிகழ்வுகளை தொகுத்து நல்ல மேலதிகாரி யார் அவருடன் எவ்வாறு பணியாற்ற வேண்டும் என்றும் கெட்ட மேலதிகாரியை அறிந்து கொள்ளவும், கண்டு கொள்ளாமல் போவதற்கும் ஆன உத்திகளை விளக்கமாக தெரிவிக்கின்றார. புளோரிடா பல்கலைக் கழகத்தில் மேற்கொள்ளப் பட்ட ஒரு ஆய்வு முடிவில் கெட்ட மேலதிகாரிகள் 30% தேவையில்லாத வேலைகளையும், தவறான முறையில் வேலை செய்வதையும், வேண்டுமென்றே தவறான முறையில் பணியாற்றுவதையும் தூண்டி விடுகின்றார்கள். நம்பிக்கை இல்லாத, திட்டுகின்ற மேலதிகாரிகளை பணியாளர்கள் தவிர்க்கிறார்கள்.

விண்ணை முட்டும் இலக்கை எட்டினாலும், பரிசு பாராட்டு மழைகளில் மூழ்கி எழுந்தாலும, செயற்கரிய சாதனைகளைச் செய்தாலும் உடன் பணிபுரிபவர்களை மோசமாக நடத்தும் எந்த மேலதிகாரியும் சிறந்தவர் என்றும், சாதனையாளர் என்றும் போற்றப்படுவதில்லை. நல்ல மேலதிகாரி என்று குறிப்பிடுவது மிக சிறந்த மேலதிகாரியையே ஆகும். திறமை இல்லாத சாதாரணமான மேலதிகாரியை பற்றி எந்த குறிப்பையும் நூலாசிரியர் குறிப்பிடவில்லை. மாறாக, கீழே குறிப்பிடும் 5 முக்கியமான நம்பிக்கைகளையும், மனப்பாங்குகளையும் பெற்று இருக்க கூடிய ஒருவர் நிச்சயம் மிக சிறந்த மேலதிகாரியாக இருப்பார் என்ற ஆழ்ந்த கருத்துகளை வெளிப்படுத்துகிறார்.

### லசோர்டாஸ் விதி?

இந்த லசோர்டாஸ் விதி என்பது மிக அதிகமான மற்றும் மிக குறைவான கட்டுபாடுகளைத தவிர்த்து மிக சரியான நடுநிலையான கட்டுப்பாடுகளை மேற்கொள்ளுவது ஆகும், உதாரணமாக, ஒரு புறாவை மிகவும் அழுத்திப் பிடித்தால் அது கூடிய விரைவில் மாண்டு விடும். அதேபோல அந்த புறாவை மிகவும் லேசாக கையாண்டால் பறந்து விடும். இந்த இரண்டு நிகழ்விலும் இழப்பு புறாவை கையில் வைத்திருப்பவருக்குதான். ஒரு சிறந்த மேலதிகாரி பணியாளர்களை புறாவைப் போல கையாள வேண்டும், இல்லை என்றால் இழப்பு யாருக்கு? இன்னும் சொல்லப் போனால் ஒரு சிறந்த ஆசிரியர் வகுப்பறையில் மாணவர்களை மிகவும் கட்டுப்படுத்தவோ, கண்டுகொள்ளாமலோ விட்டு விடுவ்திலலை, மாறாக வழிகாட்டி திருத்தி ஒழுக்கத்தை ஊட்டி விடுபவர் சிறந்த ஆசிரியர் ஆகின்றார். ஒரு நல்ல மேலதிகாரியும் அதே போல தான்.

### நிதானத்தை நாடு?

சிறந்த மேலதிகாரிகள் பணியாளர்களை மராத்தான் ஓட்டத்திற்கு தயார் செய்ய வேண்டுமே தவிர 100 மீற்றர் ஓட்டத்திற்கு தயார்ப் படுத்தக் கூடாது. மிக சிறந்த மேலதிகாரிகள் அவசரகால நிலையை அறிவிக்கக் கூடாது மாறாக, அவசர கதியில் பணியாற்றக் கூடிய இயல்பை விதைக்க வேண்டும். எப்போதும் அவசர கதியில் இயங்கும் மேலதிகாரிகள் தானும் வீழ்ந்து பணியாளர்களையும் குழியில் தள்ளி விடுகின்றனர்.

### சின்ன சின்ன வெற்றிகள்?

நீண்ட கால சாதனைகளுக்கு சின்ன சின்ன வெற்றிகள் படிக்கட்டுகளாகும. சிறந்த மேலதிகாரிகள் சின்ன சின்ன வெற்றிகளை நோக்கி பணியாளர்களை நகர்த்துவார்கள். வாத்தின் வயிற்றுக்குள் கையை விட்டு தங்க முட்டை யை படுங்கி எடுக்க மாட்டார்கள். மிக சிறந்த மேலதிகாரிகள் பெரிய பணியை சிறு பங்குகளாக பகிர்ந்து, தாங்கக் கூடிய அளவிற்கு வடிவ மைத்து பணியாளர்கள் பளுவை உணராத வண்ணம் பணிகளை எளிதில் செய்து முடிக்கச் செய்வர்.

### மறதியை மறத்தல்?

பல்வேறு வகையான பணிக் காரணிகளால மேலதிகாரிகள் பணியாளர்களுக்கு என்ன வேண்டும், எப்படி சொல்வது, எதை செய்யச்சொல்லுவது குழப் பத்தில் இருப்பார்கள். அது போன்ற நேரங்களில் பணியாளர்களுடன் ஒவ்வொரு வார்த்தையும் கூர்ந்து கவனித்து, ஒவ்வொரு செயலையும் முறையாக செய்து முடிக்கப் பழக்குதல் அவசியம். மேலதிகாரி என்ன செய்வார் எப்படி செய்வார் என்ற உத்திகளை மற்றவர்கள் அறிந்துகொள்ளும் வண்ணம் திறந்த புத்தகங்களாக செயல்பட வேண்டும். எந்த நிகழ்விலும் மறதியினால் செய்யக் கூடாத செயல்களை செய்து மேலதிகாரிகளுக்கு பின்னடைவு ஏற்படுத்தும் பணி யார்களை சரிவரக் கண்டறிந்துகளை நீக்கியும், முறையான பயிற்சியும் அளிக்க வேண்டும்.

### காக்க காக்க?

மிக சிறந்த மேலதிகாரிகள் பணியாளர்களை பாதுகாத்தும் அவர்களுக்காக போராடியும், அவர்களை நல்ல முறையில் பணியாற்றச் செய்வார்கள். சில நேரங்களில் மோசமான விளைவுகளை சுமந்து கொண்டு பணியாளர்களுக்கு பாதுகாப்பு வளையத்தை ஏற்படுத்தி நம்பிக்கையை கூட்டுவார்கள்.

சிறந்த மேலதிகாரிகள் பணியாளர்களின் இரத்த ஓட்டத்தையும், எண்ணங்களையும் எளிதில் அறிந்து கொள்ளுவார்கள். பணியாளர்கள் என்ன நினைக்கிறார்கள், எவ்வாறு உணர்கிறார்கள், எவ்வாறு நடந்து கொள்கிறார்கள் என்பதை பற்றி முழுமையாக அறிந்து இருப்பார்கள். பணியாளர்களின் பயனுக்காக பாடுபடுவார்கள். தன்னை பற்றியும், மற்றவர்களைப் பற்றியும் வலிமையையும் மற்றும் பலவீனங்களையும் பற்றி உணர்ந்தவர்களாகவும், வெட்டிய குழியை தாண்டி வருவதில் வீரர்களாகவும், சதிகளையும் நிறுவன அரசியலையும் தீர்த்து வைப்பவர்களாகவும் இருப்பார்கள். சிறந்த மேலதிகாரியாக மாறு வது ஒரு நாளில் நடக்கும் செயல் அல்ல. இதில் ஏதும் மாய மந்திரங்கள் நிகழ்வது கிடையாது. அவ்வாறு யாராவது கூறினால் அவர்கள் அறியாதவராகவும், ஏமாற்றுக்காரர்களாகவும் மட்டுமே இருப்பார்கள்.

சிறந்த மேலதிகாரியாக மாறுவதற்கு சர்வரோக நிவராணி ஏதும் கிடையாது. மாறாக, மேற்சொன்ன வழிகளில் விழுந்து, எழுந்து, உணர்ந்து, சிறந்து செயல்பட்டால் வெற்றிகரமான மேலதி காரியாக மாறலாம். வெற்றிக்கு நேரம், திறன் இவைகளை செலவழிப்பதைத் தவிர பணியாளர்களின் உணரவுகளையும் செயல்களையும் சேர்த்து எடுத்து, புரிதலை ஏற்படுத்திக் கொள்ளுதல் வெற்றிக்கு வழிகாட்டும்.

மேலதிகாரி நல்லவரா கெட்டவரா என்பதற்கு கீழ்காணும் கேள்விகள் பொருத்தமாக அமையும். நல்ல மேலதிகாரி தன்னுடைய பணியில் முனைப்பை காட்டி தினந்தோறும் எப்படி எல்லாம் இருக்க வேண்டும் என்பதை பற்றி விவரிக்கும் கேள்விகள் வருமாறு.


### உங்களிடம் பணிபுரிவதை மற்றவர்கள் விரும்புகிறார்களா?

ஒரு மாற்றத்திற்கு பிறகு மீண்டும் பணியாற்றும் வாய்ப்பு கிடைத்தால் எத்தனை பேர் உங்களிடம் மீண்டும் பணியாற்றுவார்கள்?

நீங்கள் உங்களுக்காக வேலை செய்கிறீர்களா அல்லது மற்றவர்களை திருப்தி படுத்தவும் மகிழ்ச்சி அடையவும் பணியாற்றுகிறீகளா?

நீங்கள் உங்களுக்காக பணியாற்றும் பொழுது உங்களுக்கு என்ன தேவை என்பதை உணர்கிறீர்களா?


இந்த கேள்விகளை முதலில் படித்து பெரும்பான்மையானவர்கள் ஆம் என்ற பதிலைக் கொடுத்தால் சிறந்த மேலதிகாரி என்ற முகட்டிற்கு செல்கிறீர்கள் என்று பொருள்.




எள்ளிநகையாடும், நல்ல மற்றும் கெட்ட மேலதிகாரிகள் எவ்வாறு செயல் பட வேண்டும் என்பதை பற்றி வலிமை யான கதைகள் மூலமும், ஆய்வு முடிவு கள் மூலமும் பணியாளர்களின் பங்களிப் பை பற்றியும் அவற்றின் வெற்றி தோல்விகளை பற்றியும் மிக தெளிவாக எடுத்துக் கூறப்பட்டுள்ளது. ஒரு மந்திர மருந்தோ விரைவான தீர்வுகளோ, உடனடியாக வந்து சேரும் மிக சிறந்த மேலதிகாரியாக உருமாற முடியம் என்ற எண்ணத்தில் இருப்பவர்கள் இந்த புத்தகத்தை நினைத்து கூட பார்க்க வேண்டாம். உங்கள் ஆழ் மனதின் எண்ண ஓட்டங்களையும், உங் களை பற்றிய அறிதலையும் இணைத்து அவைகளின் செழுமையான ஓட்டத்தில் சிறந்த மேலதிகாரியாக மாற முயற்சிக்கும் ஒவ்வொருவரும் இந்த புத்தகத்தைக் கட்டாயம் படிக்க வேண்டும்.




# சிறந்த ஊழியர்கள் 492 பேருக்கு விருது வழங்கி கௌரவித்தது செலிங்கோ




சிறந்த செயற்பாடுகளை வெளிப்படுத்திய 492 ஊழியர்களுக்கு ஒரே மாலை பொழுதில் விருது வழங்கி கௌரவித்து செலிங்கோ லைஃப் சாதனை படைத்துள்ளது. 2015 நிதி ஆண்டில் ஆயுள் காப்புறுதியில் தலைமை தாங்கும் நிறுவனம் சிறந்த பெறுபேறுகளை அடைய மூல கர்த்தாவாக இருந்தவர்களே இவ்வாறு கௌரவிக்கப்பட்டனர்.

ஆயுள் காப்புறுதிக்கு வழிகாட்டியவர்கள் எனும் தொனிப் பொருளில் களியாட்டங்கள் நிறைந்த கண கவர் நிகழ்வாக கொழும்பு பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் (BMICH) அண்மையில் இந்நிகழ்வு இடம்பெற்றது. செலிங்கோ லைஃப்பின் அதி சிறப்பு வாய்ந்த விற்பனை அணியைச் சேர்ந்த 250க்கும் மேறபட்ட, விற்பனை அதிகாரிகள், அலகு மற்றும் கிளைத் தலைவர்கள் ஆகியோர் விருதுகளையும் வெளிநாட்டுப் பயணங்களையும் பண வெகுமதிகளையும் வென்றனர். தனி நபர்களுக்கும் குழு செயற்பாட்டாளர்களுக்கும் நட்சத்திர ஹோட்டல்களில் வார இறுதி விடுமுறை பொதிகளும் வழங்கப்பட்டன.

இங்கு உரையாற்றிய செலிங்கோ லைஃப்பின் முகாமைத்துவப் பணிப்பாளரும் பிரதம நிறைவேற்று அதிகாரியுமான ஆர்.ரெங்கநாதன், 2015 சவால்களை எதிர்கொண்ட ஒரு ஆண்டு என வர்ணித்தார்.

# வாகனங்களின் பதிவில் சரிவு

இந்நாட்டு சிற்றூந்து வாகனங்களின் பதிவு பெப்ரவரி மாதம் சரிவை சந்தித்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவ்வருட பெப்ரவரியில் 2897 சிற்றூந்து வாகனங்கள் பதிவு செய்யப்பட்டுள்ள நிலையில் கடந்த வருடம் 4138 பதிவு செய்யப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. கடந்த வருடம் செப்டம்பர் மற்றும் நவம்பர் மாதங்களில் சிற்றூந்து வாகனங்களின் பதிவு பத்தாயிரத்தை தாண்டியிருந்து.

இவ்வருட ஆரம்பத்தில் இருந்தே இந்நாட்டு வாகனப்பதிவுகள் குறைவாகவே காணப்பட்டது. ஜனவரி மாதத்தில் 2888 வாகனங்கள் பதிவு செய்யப்பட்டு இருந்தன.

குத்தகை கடன் வீதத்தினை கட்டுப்படித்தியது , மற்றைய வானங்கள் மீதான வரி , ரூபாவின் மதிப்பு குறைவடைந்தது , யென் பெறுமதி அதிகரிப்பு மற்றும் வட்டி விகிதங்களின் அதிகரிப்பு போன்ற காரணங்களால் இவ்வாறு வாகன பதிவுகள் குறைவடைந்துள்ளது.

# கம்பனி சட்டத்தில் திருத்தம்

இலங்கையின் 2007ம் ஆண்டு 7ம் இலக்க கம்பனிகள் சட்டத்தில் திருத்தங்களை மேற்கொள்ள அமைச்சரவை தீர்மானித்துள்ளதாக கூறப்படுகிறது.

கைத்தொழில் மற்றும் வர்த்தக அமைச்சர் றிசாட் பதியுதீனின் யோசனைக்கு அமைய இந்த தீர்மானம் மேற்கொள்ளப்ப்டுள்ளது.

கைத்தொழில் மற்றும் வர்த்தக அமைச்சின் ஆலோசனை குழுவும், கணக்காய்வு நாயகமும் இந்த சட்ட மூலத்தில் திருத்தப்பட வேண்டிய சில விடயங்ளை அடையாளப்படுத்தியுள்ளனர். இதன் அடிப்படையில் இந்த திருத் தங்கள் மேற்கொள்ளப்படவுள்ளதாக கூறப்படுகிறது.

## பங்குச் சந்தை விபரம்

CSE COLOMBO STOCK EXCHANGE

(வார இறுதியில்)

| துறை | கடந்த வாரம் | இந்த வாரம் |
|---|---|---|
| அனைத்துப் பங்கு விலைச்சுட்டி | 6,092.45 | 6,057.79 ⇩ |
| எஸ் & பி 20 சுட்டி | 3,197.30 | 3,167.46 ⇩ |

விலை அசைவுகளின் அடிப்படையில் | புரள்வு (ரூபா.மில்.) 2,222.605

*உயர்வடைந்த பங்குகள்(ரூ)* பிமுத் பினான்ஸ்(51.00), மல்வத்தை(3.00), சிஎப்ஐ (77.30)ரன்கிறின்(65.00), பிறின்ட்கெயர் பிஎல்சி(38.40)

*சரிவைக் காட்டிய பங்குகள்(ரூ.):* பரகன்(61.50), சிலோன் பிறின்டர்ஸ் (151.00),செரன்டிப் என்ஜீ(6.80),தலவாக்கல(33.10),மொரிசன் (290.10).

மேலதிக தகவல்கள்: www.cse.lk

## வெளிநாட்டு நாணயமாற்று வீதம்

(வார இறுதியில்)

| நாணயம் | கொ/வு விலை ரூபா. | வி/னை விலை ரூபா. |
|---|---|---|
| ஐக்கிய அமெரிக்க டொலர் | 143.91 | 147.87 |
| பவுண்ட்(ஐக்கிய இராச்சியம்) | 202.06 | 209.26 |
| யூரோ (ஐரோ.ஒன்றியம்) | 159.73 | 166.12 |
| சுவிஸ் பிராங் | 146.41 | 152.51 |
| கனேடிய டொலர் | 108.03 | 112.55 |
| அவுஸ்திரேலிய டொலர் | 106.97 | 112.00 |
| சிங்கப்பூர் டொலர் | 104.69 | 108.70 |
| ஜப்பான் யென் | 1.26 | 1.31 |
| இந்திய ரூபாய் | சுட்டி விலை 2.15 | |
| ஐக்.அரபு இராச்சிய டிராம் | சுட்டி விலை 39.17 | |

மூலம்: இலங்கை மத்திய வங்கி

# தமிழ் சினிமா வரலாறு

128

## தெலுங்கில் 'அபூர்வ சிந்தாமணி' பாதி படம் தயாரான பின் கதாநாகன் நீக்கம்!

...பிற்காலத்தில் கேரளாவின் தலைசிறந்த டைரக்டர்களில் ஒருவராக உருவான கே.எஸ். சேது மாதவன், அப்போது மாடர்ன் தியேட்டர்சில் துணை டைரக்டராக பணியாற்றிக்கொண்டிருந்தார். மலையாள மொழியின் முதல் வண்ணப்படத்தை இயக்கும் பொறுப்பை அவருக்கு சுந்தரம் கொடுத்தார்.

படத்தின் பெயர் கண்டம் பெச்சகோட்டு என்பதாகும். ஒட்டுபோட்ட கோட்டு என்பது இதன் பொருள். இப்படத்தில் பிரேம் நசீர், அம்பிகா (ராதாவின் சகோதரி அம்பிகா அல்ல), முத்தையா ஆகியோர் நடித்தனர்.

1961 இல் வெளியான இப்படம் வெற்றிபெற்று கேரளாவில் சக்கை போடு போட்டது.

வாரிசு

டி.ஆர். சுந்தரம் இங்கிலாந்தில் திருமணம் செய்து கொண்டு அழைத்து வந்த கிளாடிஸ்அம்மையார், 2 குழந்தைகள் பிறந்த பிறகு மீண்டும் லண்டனுக்கே திரும்பிச் சென்றுவிட்டார்.

இந்த தம்பதிகளின் மூத்த மகன் பெயர் ராமசுந்தரம், இளைய மகன் கந்த சுந்தரம்.

ராமசுந்தரம் கேவையில் என்ஜினீயரிங் கல்லூரியில் படித்துக் கொண்டிருந்தார். படிப்பை முடித்ததும் அவரை ஒரு தொழிற்சாலைக்கு அதிபராக்க வேண்டும் என்பது டி.ஆர்.சுந்தரத்தின் திட்டம்.



பெற்ற மகனை விற்ற அன்னை

எனவே தனக்குப் பிறகு மாடர்ன் தியேட்டர்ஸ் நிர்வாகத்தை கவனிக்க யாரை நியமிக்கலாம் என்று யோசித்தார்.

கம்பெனியின் இதர இயக்குனர்களுடன் கலந்து ஆலோசித்து தன் சகோதரர் வி.வி. சி.ஆர்.வையாபுரி முதலியாரின் மகன் ஆர்.வி.சொக்கலிங்கத்தை நிர்வாக இயக்குனராக நியமித்தார்.

சொக்கலிங்கம் நிர்வாகப் பொறுப்பை ஏற்றதும் முதன் முதலாக தயாரித்த படம் குமுதம்.

டி.ஆர்.சுந்தரத்தின் மேற்பார்வையில் தான் படத் தயாரிப்பு நடந்தது. கதை வசனத்தை கே.எஸ்.கோபாலகிருஷ்ணன் எழுத ஆதுர்த்தி சுப்பராவ் டைரக்ட் செய்தார்.

கே.வி.மகாதேவன் இசை அமைத்தார். எஸ்.எஸ். ராஜேந்திரன், எம்.ஆர்.ராதா, ரங்காராவ், விஜயகுமாரி, சவுகார் ஜானகி, பி.எஸ்.சரோஜா ஆகியோர் நடித்தனர்.

படத்தில் கதை, வசனம், இசை மூன்றும் சிறப்பாக அமைந்ததால் குமுதம் வெற்றி படமாக அமைந்தது.

இதன்பின் நடிகை பத்மினியை வைத்து காட்டு ரோஜா என்ற படம் தயாரிக்கப்பட்டது.

எஸ்.எஸ்.ராஜே ந்திரன் மனேகர், எம்.ஆர். ராதா ஆகியோர் நடித்தனர். டைரக்ஷனை ஏ.சுப்பாராவ் கவனித்தார். வசனம்: சோலைமலை, ஜி.தேவராசன் இசை: கே.வி.மகாதேவன். படம் சாதாரணம்.

(தொடரும்)

# நீதித்துறையை ....

(18 ஆம் பக்கத்தில் வெளியான தொடர்ச்சி)

...ஜே.ஆர் இந்த அச்சுறுத்தல்களை மிகத் தீவிரமாகக் கவனத்திற் கொண்டார். சிறிமாவின் விசுவாசிகளால் ஒன்றுதிரட்டப்பட்ட மக்கள் கூட்டத்தை இலங்கை காவற்துறையினர் கலைக்காது விட்டிருந்தால் ஓகஸ்ட் 08 அன்று மிகப் பாரிய இரத்தக் களரி ஏற்பட்டிருக்கும். இவ்வாறானதொரு உயிர்த்தியாகத்துடன், சிறிமாவின் கனவும் நனவாகியிருக்கும். இப்பேரணியின் பின்னரும் கூட, ஜே.ஆர் அரசாங்கத்தின் காலத்தில் வேலைவாய்ப்பின்மை மற்றும் பணவீக்கம் போன்றன அதிகமாக இருந்தன. இதனால் இவர் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி இலங்கைத் தீவு முழுமையும் சுற்றுப்பயணம் மேற்கொண்டு மக்களைக் குழப்புவதற்கான காலஅவகாசத்தை வழங்கினார். இதன்மூலம் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி மீதான மக்களின் கருத்துக்கள் எவ்வாறு உள்ளன என்பதை ஜே.ஆர். ஜெயவர்த்தனவால் அறிய முடிந்தது.

இதுமட்டுமல்லாது, ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் முக்கிய உறுப்பினர்கள் பலர், அரசியல் விமர்சனங்கள் மற்றும் ஜே.ஆர் மற்றும் பிறேமதாஸா, பல்வேறு அமைச்சர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள் போன்றவர்கள் மீதான தாக்குதல்கள், நாடாளுமன்றம் தாக்குதலுக்கு உள்ளாக்கப்படுவதற்கான அச்சுறுத்தல்கள், வன்முறைகள் போன்ற பல்வேறு பிரச்சினைகளுக்குப் பதிலளிப்பதற்கான சூழலும் உருவாக்கப்பட்டது. ஒக்ரோபர் 16 அன்று சிறிமாவின் பேரணியின் போது மிகப் பெருமளவான மக்கள் கலந்து கொள்வார்கள் என்பதால் இதில் ஏற்படக்கூடிய பல்வேறு வன்முறைகளைத் தடுப்பதற்காக ஜே.ஆரால் பாதுகாப்புப் படையினர் அதிகளவில் கடமையில் ஈடுபடுத்தப் பட்டனர்.

நாடாளுமன்ற உறுப்பினர்களைப் பாதுகாக்குமாறு ஐ.தே.க ஆதரவாளர்களிடம் கூறப்பட்டது. அத்துடன் இவர்கள் அன்றைய தினம் நாடாளுமன்றில் நிறைவேற்றப்படவிருந்த முக்கிய வரைவுக்கு வாக்களிப்பதற்கு கொழும்பிற்கு வரவேண்டும் என்பதால் இவர்களுக்கான பாதுகாப்பை உறுதிப்படுத்துமாறு கோரப்பட்டது. ஐ.தே.க நாடாளுமன்ற உறுப்பினர்கள் காவற்துறையினரின் பாதுகாப்பிற்கு அப்பால் தமது ஆதரவாளர்களின் பாதுகாப்பைப் பெற்றுக் கொள்வதென்பது சற்று வித்தியாசமானதாகும். மக்களை வன்முறைக்குத் தூண்டும் எவரும் கைது செய்யப்பட வேண்டும் எனவும் காவற்துறையினருக்கு அறிவுறுத்தப்பட்டது. இவ்வாறான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் மூலம் ஜே.ஆர் தனக்கு எதிராக சிறிமாவால் முன்வைக்கப்பட்ட சவாலை முறியடித்தார்.

பாதுகாப்புப் படையினர் மற்றும் காவற்துறையினரின் மிகத் தீவிர பாதுகாப்பு முன்னெடுப்புக்களால் தன்னால் திட்டமிடப்பட்ட பேரணி தோல்வியுறும் என்பதை சிறிமா உணர்ந்து கொண்டார். இதனால் இவர் உடனடியாகப் பேரணியை நிறுத்துமாறு தனது ஆதரவாளர்களுக்கு கூற வேண்டிய நிர்ப்பந்தத்திற்கு ஆளானார்.

ஏனைய அரசியற் கட்சிகளிடமிருந்தும் சிறிமாவிற்கான ஆதரவு பெரிதளவில் கிடைக்கவில்லை. இதில் லங்கா சமாசமாஜக் கட்சியின் நிலைப்பாடு தெளிவற்றதாகக் காணப்பட்டது. இந்தக் கட்சியினர் சிறிமாவிற்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணைக்கு எதிராக 1975 இல் நாடாளுமன்றில் தமது ஒரு வாக்கை மட்டுமே வழங்கியிருந்தனர். ஆனால் இவர்கள் தமது அரசியல் நலன்களுக்காக மட்டுமே இதனை எதிர்த்தனரே ஒழிய, இவர்கள் சிறிமாவை ஆதரிக்கவில்லை.

இவ்வாறானதொரு சூழலில், ஒக்ரோபர் 16 அன்று திட்டமிட்டபடி சிறிமா மீதான விவாதம் இடம்பெறும் எனவும், இதில் எவ்வித மாற்றத்தையும் செய்ய முடியாது எனவும் சட்டம் தன் கடமையைச் செய்யும் எனவும் ஐ.தே.க அறிவித்தது. இந்நிலையில் ஒக்ரோபர் 12 அன்று கொழும்பின் புறநகர்ப் பகுதியான தெஹிவளையில் பாரிய மக்கள் ஒன்றுகூடலை ஜே.ஆர் நடத்தினார். இக்கூட்டத்தில், சிறிமாவிற்கு இடம்பெற்றது போலவே ஐ.தே.க அமைச்சர்கள் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு எதிராக விசாரணை ஆணைக்குழுவானது ஊழல் மற்றும் மோசடிக் குற்றச்சாட்டுக்களை முன்வைத்தால் இவர்கள் மீதும் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என ஜே.ஆர் தெரிவித்தார்.

அமைச்சரவை விவாதம் இடம்பெறுவதை முன்னிட்டு ஊரடங்குச் சட்டம் பிறப்பிக்கப்படவில்லை, அவசரகாலச் சட்டமும் பிரகடனப்படுத்தப்படவில்லை. ஆனால் பாதுகாப்புக் கடமையில் ஈடுபடுவதற்கான அழைப்பு காவற்துறையினர் மற்றும் இராணுவத்தினர் மீது விடுக்கப்பட்டது. இவர்கள் தமது தலைமையகங்களைப் பாதுகாக்குமாறும் அறிவுறுத்தப்பட்டனர். நாடாளுமன்ற உறுப்பினர்கள் நாடாளுமன்றுக்கு வரும் போது கொல்லப்படுவதைத் தடுப்பதற்காக ஜே.ஆரால் அவசரகாலச் சட்டம் பிறப்பிக்கப்பட்டது. இதன்மூலம் இவர் தனது அமைச்சரவை அதிகாரத்தைப் பாதுகாத்தார்.

**இதையொத்த தந்திரோபாயங்கள்**

இலங்கையின் கடந்த கால வரலாற்றில் இடம்பெற்ற இந்தச் சம்பவத்தை ஆராய்ந்து இதிலிருந்து எதிர்காலத்திற்கான பாடங்களைக் கற்றுக்கொள்ளும் போது, ஜே.ஆர் போலவே மைத்திரி-ரணில் அரசாங்கமும் ஒரேவிதமான தந்திரோபாயத்தையே பயன்படுத்துகின்றது. இத்தந்திரோபாயமானது மைத்திரி- ரணில் அரசாங்கம், மகிந்த தொடர்பான அச்சுறுத்தல்களை ஒழிப்பதற்கு உதவும்.

யோஷித கைதுசெய்யப்பட்ட போது, மகிந்தவின் இளைய மகனான றோகித தற்போதைய நல்லாட்சி அரசாங்கத்திற்கு தனது முகநூலின் ஊடாக எச்சரிக்கை ஒன்றை வழங்கியிருந்தார். அதாவது 'அன்பிற்குரிய நல்லாட்சி அரசாங்கமே, நீங்கள் தற்போது சிங்கத்தின் வாலின் மீது நிற்கிறீர்கள். தற்போது இந்தச் சிங்கம் உங்களைத் துண்டு துண்டாக்கிவிடும் என நீங்கள் நினைக்கவில்லையா?' என்பதே றோகிதவின் முகநூல் எச்சரிக்கையாகும்.

இது ராஜபக்ஷாக்களின் தற்போதைய பொதுவான போக்கைச் சுட்டிநிற்கிறது. ஆகவே ராஜபக்ஷாக்களிடமிருந்து எழும் இவ்வாறான அச்சுறுத்தல்களுக்கு எதிராக சட்டங்களை அமுல்படுத்துவதற்கு மைத்திரி-ரணில் அரசாங்கமானது காவற்துறை மற்றும் நீதிச் சேவையை மேலும் பலப்படுத்த வேண்டிய கடப்பாட்டைக் கொண்டுள்ளது.

'எல்லா இடங்களிலும் விடுக்கப்படும் அச்சுறுத்தல்களானது நீதிக்கான அச்சுறுத்தலாகும்' என மார்டின் லூதர் கிங் குறிப்பிட்டுள்ளார். (முற்றும்)

நம்மிடமுள்ள குறைகளை நீக்கிக்கொள்வதே நமக்கு ஏற்படக்கூடிய பெரிய அதிர்ஷ்டமாகும்.
- ஓர் அறிஞர்

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

# எங்களிடம் முதலில் நிதானம் ஏற்படட்டும்

மக்கள் விடுதலை முன்னணியின் தலைவர் அநுர குமார திஸாநாயக்க கொழும்பில் நடந்த கம்பன் விழாவில் இலங்கை ஒரு இனத்துக்குரிய நாடல்ல. அது பல்லின மக்களுக்கும் உரியது என்று தெளிவுபடக் கூறியமை அரசியல் புலத்தில் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

யதார்த்தத்தை உரைத்ததனாலேயே அந்தப் பரபரப்பு ஏற்படக் காரணம் எனலாம். பொதுவில் இலங்கை பௌத்த சிங்கள நாடு என்பதே நீண்டகாலப் பேச்சாக இருந்தது.

அந்தப் பேச்சில் பெரும் பங்கு வகித்த மக்கள் விடுதலை முன்னணி (ஜே. வி.பி) இன்று தனது நிலைப்பாட்டை மாற்றிக் கொண்டு இலங்கை சிங்களவர்களுக்கு மட்டும் உரிய நாடல்ல. இது சிங்கள தமிழ், முஸ்லிம் மக்களுக்கும் உரிய நாடென்று பகிரங்கமாக அறிவித்துள்ளது.

அதிலும் தமிழ் மக்களின் இலக்கிய விழா ஒன்றில் கலந்து கொண்ட போது ஜே.வி.பியின் தலைவர் அநுர குமார திஸாநாயக்க மேற்போந்தவாறு தெரிவித்தமை ஒரு முக்கியமான விடயம் என்பதை ஏற்றுத்தான் ஆக வேண்டும்.

இது குறித்து நேற்றைய தினம் இவ்விடத்தில் பிரஸ்தாபித்திருந்தோம். அநுரகுமார திஸாநாயக்கவின் கருத்தை வரவேற்ற தேசிய சுகவாழ்வு கலந்துரையாடல் மற்றும் அரச கருமமொழிகள் அமைச்சரும் ஜனநாயக மக்கள் முன்னணியின் தலைவருமான மனோ கணேசன் அவர்கள், அதிகாரப் பரவலாக்கலிலும் ஜே.வி.பி காத்திரமான வகிபங்கைக் கொண்டிருக்க வேண்டும் எனக் குறிப்பிட்டுள்ளதுடன் அதிகாரப் பகிர்வு தொடர்பான தனது அதிகாரபூர்வமான நிலைப்பாட்டை வெளிப்படுத்த வேண்டும் எனவும் கேட்டுள்ளார்.

அமைச்சர் மனோ கணேசனின் கருத்து ஏற்புடையது என்பதிலும் மாற்றுக் கருத்துக்கு இடமில்லை. அதேவேளை ஜே.வி.பியின் தலைவர் அநுரகுமார திஸாநாயக்க அதிகாரப் பகிர்வு என்பதைத் தாண்டி இலங்கை சிங்கள மக்களுக்கு மட்டும் சொந்தமானதல்ல என்று கூறியமை ஒரு பெரும் மாற்றம் என்பதை எவரும் மறுத்துவிட முடியாது.

அதிகாரப் பகிர்வு தொடர்பில் ஜே.வி.பியின் நிலைப்பாடு வெளிப்படுத்தப்பட வேண்டும் என்பது உண்மையாயினும் அநுரகுமார திஸாநாய்க்காவின் உரை அதிகாரப் பகிர்வு என்பதையும் தாண்டி ஒரு நீண்டகால மரபை உடைத்து இலங்கையை சிங்கள மக்கள் தனித்து தமக்கான நாடாக உரிமை கோரமுடியாது என்பதை தெளிவுபடுத்தியுள்ளார்.

இத்தெளிவானது இன்றைய சூழ்நிலையில் கட்டாயமானதாகும். இலங்கை சிங்களவர்களுக்கு மட்டும் உரிய நாடு அல்ல என்பதை தமிழர்கள் சொல்வதை விட சிங்களவர்கள் சொல்வது மிகவும் முக்கியமானது. அந்த முக்கியமான விடயத்தை தற்துணிவோடு மக்கள் விடுதலை முன்னணியின் தலைவர் அநுரகுமார திஸாநாயக்க கூறியுள்ளார்.

எனவே இப்போது நாம் கேட்பது எல்லாம் அதிகாரப் பகிர்வு தொடர்பில் ஜே.வி.பியின் நிலைப்பாடு என்ன? என்று கேள்வி எழுப்பும் அமைச்சர் மனோ கணேசன் அவர்கள் தமிழ் மக்களிடம் ஓர் உண்மையை முதலில் கூற வேண்டும்.

அதாவது தேர்தலுக்கு முன் அமைச்சுப் பதவி கிடைப்பதற்கு முன் தமிழ் மக்கள் தொடர்பில் கொண்டிருந்த கொள்கைகள், கோட்பாடுகள் இன்னமும் தங்களிடம் அப்படியே உள்ளதா? அல்லது அமைச்சுப் பதவி கிடைப்பதற்கு முன் ஒரு கதை அமைச்சுப் பதவி கிடைத்த பின் இன்னொரு கதை என்பதாக நிலைமை மாறியுள்ளதா?

இது தொடர்பில் அமைச்சர் மனோ கணேசன் தன்னை மீள்வாசிப்புக்கு உட்படுத்துவாராயின் அண்மைக் காலங்களில் அமைச்சர் மனோ கணேசனில் ஏற்பட்டிருந்த மாற்றங்களை தமிழ் மக்கள் நன்கு உணர்ந்துள்ளது போல அவரும் உணர்ந்து கொள்வார்.

ஆக, தெளிவான கருத்துக்களை முன்வைக்கும் அநுரகுமார திஸாநாயக்கவிடம் அதிகாரப் பகிர்வு குறித்து ஜே.விபியின் நிலைப்பாடு என்ன என்று கேட்பதற்கு முன்னர் நாங்கள் எப்போதும் கொண்ட கொள்கையில் உறுதியாக உள்ளோமா? என்பதை நிதானமாக உறுதி செய்து கொள்வதே நல்லது.

அந்த வகையில் அமைச்சர் மனோ கணேசன் தான் வகிக்கக்கூடிய அமைச்சுப் பதவியை ஆதாரமாகக் கொண்டு தமிழ் மக்களுக்கு கிடைக்க வேண்டியவற்றை கிடைக்கச் செய்வதில் நல்லாட்சிக்கு அழுத்தம் கொடுக்க வேண்டும். அந்த அழுத்தம் அர்த்தமற்றுப் போகுமாயின் அமைச்சுப் பதவியை தூக்கி எறியவும் தயாராவது அவசியம். இது சாத்தியமானால்தான் அநுரகுமார திஸாநாயக்காவிடம் மனோ கணேசன் எழுப்பிய கேள்வி நியாயப்படும்.

# சுதந்திர கட்சியின் கொள்கைகள் ஐ.தே.கவுடன் இணைந்து பாதுகாக்கப்படும்

## முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா கருத்து



(கொழும்பு)

கடந்த அரசாங்கத்தின் 9 வருட ஆட்சிக்காலத்தில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்கு அதிகாரம் இருக்கவில்லை என முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க தெரிவித்துள்ளார்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் கொள்கைகள் கடந்த அரசாங்கத்தின் காலத்தில் அமுல்படுத்தவில்லை எனவும் சில நபர்களின் விருப்பங்கள் மாத்திரமே கடந்த காலத்தில் நடைமுறைப்படுத்தப்பட்டது எனவும் முன்னாள் ஜனாதிபதி கூறியுள்ளார்.

எவ்வாறாயினும் தற்போது ஐக்கிய தேசியக் கட்சியுடன் இணைந்து ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் கொள்கைகளை பாதுகாக்கும் வேலைத் திட்டத்தை செயற்படுத்தி வருவதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

காலி நெலுவ பிரதேசத்தில் நடைபெற்ற ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தொகுதி அதிகார சபைக் கூட்டத்தில் பேசும் போதே அவர் இதனை கூறியுள்ளார்.

கடந்த ஆட்சியில் கல்வி சீர்குலைந்து போனது, உண்மை இல்லாதொழிந்து போனது.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியை உடைத்து கொண்டு செல்ல முயற்சிக்கும் கோஷ்டியினர் நாட்டில் குற்றச் செயல்கள் அதிகரித்திருப்ப தாக கூறுகின்றனர்.

குற்றம் அதிகரித்துள்ளதாக கூறும் நபர்களின் காலத்திலேயே குற்றச் செயல்கள் அதிகரித்து காணப்பட்டன.

சட்டம் வீழ்ச்சியடைந்து போனது, பொலிஸ் துறை முற்றாக அழிக்கப்பட்டது. நீதிமன்றத்திற்கு அழுத்தங்கள் கொடுக்கப்பட்டன. கொலையாளிகளும், கசிப்பு முதலாளிகளும் பாதுகாக்கப்பட்டனர்.

இப்படி இருந்த நாட்டை ஒரு நாளில் சுத்தப்படுத்தி மீண்டும்கட்டியெழுப்ப முடியாது. அதற்கு ஓரிரு வருடங்களாகும் எனவும் சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க தெரிவித்துள்ளார். (செ-12)

# குறுக்கே நாய் பாய்ந்ததில் குடும்ப பெண்ணின் கால் முறிவு

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு , வெல்லாவெளி பொலிஸ் பிரிவிலுள்ள பழுகாமம் -தும்பங்கேணி பிரதான வீதியில் நேற்று முன்தினம் மாலை இடம்பெற்ற வீதி விபத்தில் 4 மாதக் குழந்தையின் தாய் ஒருவர் கால் முறிவடைந்த நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

பழுகாமத்தைச் சேர்ந்த நந்தினி தேவராஜன் (வயது 26) என்ற தாய், தனது கைக குழந்தையுடன் பழுகாமத்திலிருந்து திக்கோடை நோக்கி முச்சக்கர வண்டியில் பயணம் செய்து கொண்டிருந்த போது, தும்பங்கேணி எனுமிடத்தில் வீதிக்குக் குறுக்கே நாயொன்று திடீரெனப் பாய்ந்ததால் முச்சக்கர வண்டி குடை சாய்ந்தது.

இதனால் குறித்த தாயின் கால் முறிவடைந்து அவர்களுவாஞ்சிக் குடி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு பின்னர் மேலதிக சிகிச்சைக்காக மட்டக்களப்பு போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளார்.

இச்சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை வெல்லாவெளி பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (செ-12)

# மக்களுக்கு தகவல்களை வழங்கும் அதிகாரியொருவர் நியமிக்கப்படுவார்!

## பிரதி ஊடக அமைச்சர் தகவல்

(கொழும்பு)

மக்களுக்கு தகவல் களை வழங்க அதிகாரியொருவரை நியமிக்க நடவடிக்கை எடுக்கப்படும் என பிரதி ஊடக அமைச்சர் கரு பரணவிதான தெரிவித்துள்ளார்.

தகவல் அறிந்து கொள்ளும் சட்டம் தொடர்பில் அவர் இந்த கருத்தை கொழும்பு ஊடகமொன்றுக்கு வெளியிட்டுள்ளார். அவர் மேலும் குறிப்பிடுகையில்,

கடந்த காலங்களைப் போன்று மக்களுக்கு தகவல்களை வழங்கும்போது அதிகாரிகள் அதனை தடுக்க முடியாது.

தகவல்களை அறிந்து கொள்வதற்காக சட்ட ரீதியாக தகவல்களை வழங்கும் அதிகாரியொருவர் நியமிக்கப்படுவார்.

ஏதேனும் காரணத்திற்காக குறித்த அதிகாரி தகவல்களை வழங்க மறுத்தால் அவர் சட்டத்தின் முன் குற்றவாளியாக்கப்படுவார்.

நல்லாட்சிமற்றும்ஜனநாயகத்தை நிலைநாட்டும் நோக்கில் இந்த சட்டம் அமுல்படுத்தப்பட உள்ளது.

தகவல்களை அறிந்து கொள்ள ஊடகவியலாளர்களுக்கு நம்பகமான செய்தி மூலங்கள் இந்த சட்டத்தின் ஊடாக கிடைக்க வழியேற்படுத்தி கொடுக்கப்படும்.

மறுபுறத்தில் ஊடக சுதந்திரம் இந்த சட்டத்தின் ஊடாக முழு அளவில் அமுல்படுத்தப்படும் எனவும் கரு பரண விதாரன தெரிவித்துள்ளார்.(செ-12)

# பாரவூர்திகள் விபத்து இருவர் படுகாயம்

(யாழ்ப்பாணம்)

இரு பாரவூர்திகள் ஒன்றோடு ஒன்று மோதி விபத்துக்கு உள்ளானதில் இருவர் படுகாயமடைந்துள்ளனர்.

இச் சம்பவம் நேற்றுக் காலை 6 மணியளவில் புத்தூர்ச் சந்தியில் இடம்பெற்றுள்ளது. இச்சம்பவத்தில் புத்தூரைச் சேர்ந்த ரங்கநாதன் சதீஸ்குமார் (வயது34) மற்றும் ஆதித்யன் மதனரூபன் (வயது30) என்பவர்களே படுகாயமடைந்த நிலையில் யாழ்.போதனா வைத்தியசாலையில் அதிதீவிர சிகிச்சைப் பிரிவில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இச் சம்பவம் தொடர்பில் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (செ-30)

# மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ அழுத்த மின்விநியோக மார்க கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை செவ்வாய்க்கிழமை காலை 8.30 மணியிலிருந்து மாலை 5 மணி வரை யாழ்.பிரதேசத்தில் அம்பலவாணர் வீதி, உடுவில் பிரதேச செயலக வீதி, சபாபதிப்பிள்ளை வீதி ஆகிய பிரதேசங்களிலும வவுனியா பிரதேசத்தில தீவிரகம (பெரிய உளுக்குளம்) ஆகிய பிரதேசங்களிலும் மின் விநியோகம் தடைப்பட்டிருக்கும். (இ-9)

# வேதாத்திரி மகரிஷியின் நற்சிந்தனை

## கவலை ஏன்?



பொருள், புகழ், செல்வாக்கு, புலனின்பம் என்பனவற்றில் பேராசை கொண்டு, கற்பனையால் சில வரவுகளை எதிர்பார்ப்பார்கள் அல்லது பிறரிடம் இருந்து கிடைக்க வேண்டும் என்று எதிர்பார்ப்பார்கள். செயலுக்குத் தக்க விளைவு என்பது இறையாற்றலின் திருவிளையாடலாக இருக்கிறது. இந்த உண்மையறியாமல் செயலின்றிக் கற்பனையால் ஒரு விளைவை எதிர்பார்ப்பதும், கடமைக்கு உறவுக்கும் பொருந்தாமல் பிறரிடமிருந்து ஒன்றை எதிர்பார்ப்பதோ அல்லது ஆசையின் பெருக்கத்தால் அளவுக்கதிகமாக எதிர்பார்ப்பதோ வெற்றியடைவதில்லை. இது இயற்கை நியதி. சிந்தனையின்றி இயற்கையின் நியதிப்படி அமைந்த விளைவுகளை ஏற்றுக் கொள்ளாமல் எதிர்பார்த்த ஆசையையும் அப்படியே வைத்துக் கொண்டு, ஏமாற்றத்தையும் ஒப்புக் கொள்ளாமல், ஏற்படும் மனப்பிணக்கு தான் கவலை. இங்கு கடமைகளை ஒட்டி, செயல்களையொட்டித் திட்டமிட்ட விளைவுகளை எதிர்பார்ப்பது தவறாகாது. இது கடமையைச் சார்ந்ததாகும்.

கற்பனை எதிர்ப்பார்ப்பும் நீதியான தோல்வியும் பற்றியே இங்கு சிந்திக்கிறோம். தோல்வி தான் இயற்கை நீதியென்று ஒப்புக் கொண்டால் தனது தவறு என்ற கற்பனை எதிர்பார்ப்புக் கலைந்து போகும். இந்த இரண்டையுமே ஒன்றோடு மற்றொன்றைச் சேர்க்காமல் வைத்துக் கொண்டு இரு நினைவுகளுக்கு மத்தியிலே மனதை வைத்துக் கொண்டு வருந்துவது தான் கவலை. எனவே, ஒருவர்படும் கவலையும் உள் ஒன்றிருக்கப்புறம் ஒன்று நினைக்கும் பொருந்தா மன நிலையே. இந்நிலையும் அறிவின் வளர்ச்சியைத் தடுக்கும்.

அறிவின் வளர்ச்சியுடைய உயிர்தான் ஆக்க வாழ்வு பெற முடியும். அறிவின் மதிப்புக் குறையாமல் உயிர் போனாலும் சரி அதை ஏற்றுக் கொள்வோம். அறிவு கெட்டு உயிர் நீடித்துப் பயனில்லையென்பது அறிஞர் கண்ட தெளிவு.

# கே.சி.சி.சி.வெற்றிக் கிண்ணம்-2016 ஓல்ட்கோல்ஸ் கால் இறுதிக்குத் தெரிவு



வெற்றிக் கிண்ணத்துக்காக கொக்குவில் மத்திய சனசமூக நிலைய விளையாட்டுக் கழகத்தினர் 1991ம் ஆண்டிலிருந்து தொடர்ந்து 23 வருடங்களாக நடத்திவரும் 30 பந்து பரிமாற்றங்களை கொண்ட துடுப்பாட்ட சுற்றுப் போட்டியின் 7 வது போட்டி நேற்று முன்தினம் சனிக் கிழமை காலை 8.30 மணிக்கு கொக்குவில் இந்துக் கல்லூரி மைதா னத்தில் நடைபெற்ற போட்டியில் வட்டுக்கோட்டை ஓல்ட்கோல்ஸ் அணி, பருத்தித்துறைஹாட்லியைற்ஸ் அணியை 63 ஓட்டங்களால் வெற்றி பெற்று காலிறுதிக்கு தகுதி பெற்று ள்ளனர்.

முதலில் துடுப் பெடுத்தாடிய ஓல்ட் கோல்ஸ் அணி 30 ஓவர்களில் 7 இலக்குகளை இழந்து 250 ஓட்டங் களைப் பெற்றது. நிரோஸன்-62, மதூசன்-42,சிறிகுகன்-15, கஜேந் திரா-14 ஓட்டங்களைப் பெற்றனர். களத்தடுப்பில் பிரதீப்-01, சாகித் தியன்-02, சேயோன்-01, புரு சோத் மன்-02 இலக்குகளைக் கைப்பற் றினர். பதிலுக்குத் துடுப்பெடுத்தா டிய ஹாட்லியைற்ஸ் அணி 28.4 ஓவர்களில் சகல இலக்குகளையும் இழந்து 187 ஓட்டங்களை பெற்ற னர். சேயோன்- 56,பிரதீப்-26, சாகித்தியன்-24, நிஸாந்தன்-18, நிதர்ஸன்-16 ஓட்டங்களைப் பெற்ற னர். களத்தடுப்பில் நிமலேந்திரா-02,சாகித்தியன்-03,மாதவன்-02, கஜேந்திரன்-01, திலிபவன்-01 இல க்கினைக் கைப்பற்றினர். இப் போட் டியின் மூலம் யாழ்.சென்றல் விளை யாட்டுக் கழகம் 7வது ஆண்டாக நடத்தும் தரவரிசைப் பட்டியலுக்கு ஓல்ட்கோல்ஸ் அணி 7.13 புள்ளி களையும், ஹாட்லியைற்ஸ் அணி 2.57 புள்ளிகளையும் பெற்றுக் கொண்டன. (க)

### யாழ். வலய காற்பந்தாட்டம்

## சென்.ஜோன்சை வீழ்த்தி சென்.பற்றிக்ஸ் சம்பியன்

யாழ். கல்வி வலய காற்பந்தாட் டத்தில் 15 வயதுப்பிரிவில் சென். ஜோன்ஸ் கல்லூரி அணியை வீழ் த்தி சம்பியனானது சென்.பற்றிக்ஸ் கல்லூரி அணி.

யாழ். கல்வி வலய பாடசாலை களுக்கு இடையிலான 15வயது ஆண்களுக்கான காற்பந்தாட்டத் தொடரின் இறுதியாட்டம் கடந்த வியாழக்கிழமை ஸ்ரான்லிக் கல் லூரி மைதானத்தில் இடம்பெற்றது. இறுதியாட்டத்தில் சென்.பற்றிக்ஸ் கலலூரிஅணியுடன் சென்.ஜோன்ஸ கல்லூரி அணி மோதிக் கொண் டது.

எந்த அணியும் தனித்து ஆதிக் கம் செலுத்த முடியாத வகையில் அமைந்தது முதல் பாதி. இதனால் கோல் கணக்குகள் ஆரம்பிக்கப் படாமலேயே அப்பாதி முடிவுக்கு வந்தது. இரண்டாம் பாதியிலும் பெரிதான மாற்றங்கள் ஏதும் இடம் பெறவில்லை.

நிர்ணயிக்கப்பட்ட நிமிடங் களில் ஒரு கோலைத்தானும் எந்த அணியாலும் பதிவுசெய்ய முடியாது போக சமநிலைத் தவிர்ப்பு உதை யில் கிண்ணம் தீர்மானமாக வேண்டிய நிலைமை ஏற்பட்டது. இதில் சென்.பற்றிக்ஸ் கல்லூரி அணி 3:2 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றுச் சம்பியனானது.(க)

## இன்றைய போட்டிகள்


பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக் அனுமதியுடன் திக்கம் இளைஞர் விளையாட்டுக்கழகம் நடத்தும் யாழ்.மாவட்ட ரீதியிலான உதைபந்தாட்டப் போட்டியில் இன்று திங்கட்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு நடைபெறும் போட்டியில் ஸ்ரீ அம்பாள் விளையாட்டுக்கழகத்தை எதிர்த்து மணற்காடு சென்.அன்ரனிஸ் விளையாட்டுக்கழகமும்

தொடர்ந்து நடைபெறும் போட்டியில் இமையாணன் மத்திய விளையாட்டுக்கழகத்தை எதிர்த்து யங்கென்றீஸ் விளையாட்டுக்கழகமும் மோதவுள்ளன.

97 ஆவது அரியாலை சுதேசிய திருநாள் கொண்டாட்ட விழாவினை முன்னிட்டு உள்ளூர் ரீதியிலான கரப்பந்தாட்ட (ஓவர்கேம்) சுற்றுப்போட்டி நடைபெறவுள்ளது.

இந்நிலையில் இன்று திங்கட்கிழமை இரவு 7 மணிக்கு சரஸ்வதி சனசமூக நிலைய மைதானத்தில் நடைபெறும் முதல் போட்டியில் திருமகள் சனசமூக நிலையத்தினை எதிர்த்து கலைமகள் சனசமூக நிலைய A அணியும் இரவு 7.30 மணிக்கு நடைபெறும் போட்டியில் காந்தி சனசமூக நிலைய A அணியினை எதிர்த்து அரியாலை சனசமூக நிலைய A அணியும் மோதுவுள்ளது. (க)

## மாவட்ட ரீதியிலான இருபாலாருக்குமான கராத்தே போட்டி முடிவுகள்





யாழ்.மாவட்ட ரீதியிலான விளை யாட்டு போட்டியினை முன்னிட்டு ஆண், பெண் இருபாலாருக்குமான கராத்தே போட்டி கடந்த செவ்வாய்க் கிழமை யாழ்ப்பாணம் YMHA உள்ளக அரங்கில் இடம்பெற்றது.

பெண்களுக்கான திறந்த கரா த்தே போட்டியில் பருத்தித்துறையை சேர்ந்த கே.பிரியசாந்தினி முதலா மிடத்தையும் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த ஏச். நர்மதா இரண்டாமிடத் தையும் பருத்தித்துறையைச் சேர் ந்த எஸ். சிந்துஜா, பி.துவாரகா ஆகியோர் மூன்றாமிடத்தையும் பெற்றுக்கொண்டனர்.

ஆண்களுக்கான போட்டியில்

பருத்தித்துறையைச் சேர்ந்த பி.மகிந்தன் முதலாமிடத்தையும் யாழ் ப்பாணத்தைச் சேர்ந்த ஏ.தனுசன் இரண்டாமிடத்தையும் யாழ்ப்பா ணத் தைச் சேர்ந்த ஆர். ஆனந்தகுமார், என்.ஜெயதீஸ் ஆகியோர் மூன்றாமிட த்தையும் பெற்றுக்கொண்டனர்.

50 கிலோ எடைப்பிரிவில் யாழ்ப் பாணத்தைச்சேர்ந்த ஏ.சுகந்தன் முதலாமிடத்தையும் பருத்தித்துறை யைச் சேர்ந்த எஸ்.ரகுவர்மன் இர ண்டாமிடத்தையும் உடுவிலைச் சேர் ந்த எம். திசன். நல்லூரைச்சேர்ந்த ரி.தனுசன் ஆகியோர் மூன்றாமி டத்தையும் பெற்றுக்கொண்டனர்.

50-55 கிலோ எடைப்பிரிவில் பருத்தித்துறையைச்சேர்ந்த என். செந்தூரன் முதல்ாமிடத்தையும் பருத்தித்துறையைச் சேர்ந்த ஏ. அருள்தாஸ் இரண்டாமிடத்தையும் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த யு.தயா நிதி, கோப்பாயைச் சேர்ந்த ரி.சங்கீ தன் ஆகியோர் மூன்றாமிடத்தை யும் பெற்றுக் கொண்டனர்.

55-60 கிலோ எடைப்பிரிவில் சாவகச்சேரியைச்சேர்ந்த வை. விம லேஸ்வரன் முதலாமிடத்தையும் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த யு. உதயசங்கர் இரண்டாமிடத்தையும் பருத்தித்துறையைச் சேர்ந்த பி.மகி ந்தன், உடுவிலைச் சேர்ந்த ரி. கஜே ந்திரன் மூன்றாமிடத்தையும் பெற் றுக் கொண்டனர்.

60-67 கிலோ எடைப்பிரிவில் தெல்லிப்பழையைச்சேர்ந்த எஸ். ரகுலாபூசனா முதலாமிடத்தையும் உடுவிலைச்சேர்ந்த ரி.சதீஸ்கனன் இரண்டாமிடத்தையும் பருத்தித்து றையைச்சேர்ந்த எஸ். ஸ்ரீகரன் மூன்றாமிடத்தையும் பெற்றுக் கொண்டனர்.

67-75 எடைப்பிரிவில் யாழ்ப் பாணத்தைச்சேர்ந்த கே.பார்த்தீபன் முதலாமிடத்தையும் சாவகச்சேரி யைச்சேர்ந்த பி.நிலக்ஷன் இரண்டா மிடத்தையும் நல்லூரைச்சேர்ந்த எஸ். றஜீந்தன், கரவெட்டியைச் சேர் ந்த கே.சிந்துஜன் மூன்றாமிடத்தை யும் பெற்றுக்கொண்டனர்.

75-85 எடைப்பிரிவில் கோப் பையைச்சேர்ந்த பி.விஜயகணேஸ் முதலாமிடத்தையும் யாழ்ப்பாணத் தைச்சேர்ந்த எ.எட்மண்ட்றிகன் இர ண்டாமிடத்தையும் பருத்தித்துறை யைச்சேர்ந்த எ.சஞ்சிவன் மூன்றா மிடத்தையும் பெற்றுக்கொண்டனர்.

85 எடைப்பிரிவில் சங்கானை யைச்சேர்ந்த பி.ஜெயந்தன் முதலா மிடத்தையும் சாவகச்சேரியைச் சேர் ந்த எ.அஜந்தன் இரண்டாமிடத் தை யும் தெல்லிப்பழையைச் சேர்ந்த எப்.என். அன்ரனி ஜெஸ்மன், கோப் பாயைச்சேர்ந்த செந்தூரழகன் மூன் றாமிடத்தையும்பெற்றுக்கொண்டனர்.



அண்மையில் நடைபெற்ற சண்டிலிப்பாய் NCC கிரிக்கெட் தொடரில் சம்பியன் கிண்ணம் வென்ற அளவெட்டி விநாயகர் விளையாட்டுக் கழகத்தை படங்களில் காணலாம்.

## அச்சுவேலி மத்தி சம்பியன்

யாழ். கல்வி வலய பாடசாலைக ளுக்கிடையிலான 19வயது ஆண்க ளுக்கான கரப்பந்தாட்டத்தில் அச்சு வேலி மத்திய கல்லூரி அணி சம்பி யன் கிண்ணத்தை சுவீகரித்தது.

கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரி மைதானத்தில் கடந்த செவ்வாய்க் கிழமை இடம் பெற்ற இந்த இறுதி யாட்டத்தில் அச்சுவேலி மத்திய கல் லூரிஅணியை எதிர்த்து ஆவரங்கால் மகாஜனா வித்தியாலய அணி மோதி யது. இதில் அச்சுவேலி மத்திய கல் லூரி அணி 25:20, 25:22 என்ற புள்ளிகளின் அடிப்படையில் வெற்றி பெற்று சம்பியன் கிண்ணத்தை சுவீ கரித்தது. மூன்றாமிடத்தை புத்தூர் சோமஸ்கந்தா கல்லூரி அணி பெற் றது. (க)

# அடக்குமுறைகளுக்கு முற்றுப்புள்ளி வைத்து பூரண ஊடக சுதந்திரத்தை வழங்கியுள்ளோம்

## ஊடக அமைச்சர் கயந்த யாழில் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

கடந்த காலங்களில் இடம்பெற்ற ஊடக அடக்குமுறைகள் தற்போதுள்ள நல்லாட்சியில் இடம்பெறமாட்டாது. எனவே அனைத்து ஊடகங்களும் பூரண சுதந்திரத்துடன் தமது கடமைகளை மக்களுக்கு ஆற்ற முடியும் என நாடாளுமன்ற மறுசீரமைப்பு மற்றும் வெகுஜன ஊடக அமைச்சர் கயந்த கருணாதிலக தெரிவித்தார்.

ஊடக அமைச்சர்; காணாமல்போன மற்றும் படுகொலை செய்யப்பட்ட ஊடகவியலாளர்கள், ஊடகப் பணியாளர்களது குடும்பங்கள், ஊடக அமைப்புக்கள், தென்னிலங்கை ஊடகவியலாளர்கள், ஊடகச் செயற்பாட்டாளர்களுக்கிடையிலான சந்திப்பு யாழ்ப்பாணம் நாச்சிமார் கோவிலடியிலுள்ள ராஜா கிறீம் ஹவுஸ் சரஸ்வதி மண்டபத்தில் நேற்றைய தினம் நடைபெற்றது. அதில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறுதெரிவித்தார்.

அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்,

வடக்கு, தெற்கு ஊடகவியலாளர்களுக்கிடையில் நல்லிணக்கத்தினை ஏற்படுத்தும் முயற்சியில் தெற்கில் இருந்து யாழ்ப்பாணதது க்கு தென்னிலங்கை ஊடகவியலாளர்களுடன் வருகை தந்துள்ளோம். இப்பயணத்தின் போது வடமாகாண முதலமைச்சர், ஆளுநர், அரசியல் தலைவர்கள், சமயத் தலைவர்கள், முப்படையினர், பொலிஸ் அதிகாரிகளுடன் சந்திப்பினை மேற்கொண்டுள்ளோம்.

நயினாதீவு சென்று பௌத்த இந்து ஆலயங்களை தரிசித்துள்ளோம். அம்மக்களுடன் அவர்களுடைய தேவைகள் தொடர்பாக கலந்துரையாடக்கூடிய வாய்ப்பு கிடைத்திருந்தது.

கடந்த காலத்தில் வடக்கு, தெற்கு உடகவியலாளர்கள் ஊடக அடக்குமுறையில் பல துன்பங்களை எதிர்கொண்டிருந்தனர். இதனை எண்ணி நாம் வருந்துகின்றோம். எதிர்காலத்தில் அவ்வாறான சம்பவங்கள் இடம்பெறமாட்டாது.

எமது நல்லிணக்க அரசானது ஊடக சுதந்திரம் வழங்கிய அரசு என்ற வகையில் இன மத வேறுபாடு இன்றி பொறுப்புடன் செயற்பட விரும்புகின்றது.

எமது அரசு பொறுப்பேற்றபின்பு ஊடகவியலாளர்களுக்கு எதிரான அடக்குமுறைகள், பிரச்சினைகள் என்ற விடயம் இல்லாமல் போய்விட்டது. ஜனாதிபதி ஆட்சியின் கீழ் எதிர்காலத்தில் கடந்தகால அரசில் ஏற்பட்ட துரதிர்ஷ்டவசமான சம்பவங்கள் இடம்பெறமாட்டாது என உறுதியுடன் கூறுகின்றோம்.

ஏற்கெனவே கடந்த கால அரசில் வடக்கு தெற்கு உடகவியலாளர்கள் ஊடக அடக்குமுறைக்கு எதிர்கொண்டு துன்பப்பட்டார்கள். இச் சம்பவத்தினை எண்ணி வருந்துகின்றோம். எதிர்காலத்தில் அவ்வாறான சம்பவங்கள் இடம்பெறாது.

பாதிக்கப்பட்ட ஊடகவியலாளர்களின் குடும்பங்களினால் பலகருத்துகள் கூறப்படுகின்றன. அவற்றினை செவிமடுக்கின்றோம். சட்டத்துக்கு அரசியல் தலையீடு கிடையாது. ஊடகவியலாளர்கள் கேட்ட ஊடக சுதந்திரத்தினை நாம் வழங்கியுள்ளோம். இதனை மக்களுக்கு சேவையாற்ற பயன்படுத்தி கொள்ளவேண்டும்.

இப்பயணத்திற்கு பிறகு ஊடகவியலாளர்களின் பிரச்சினை தொடர்பாக விசாரித்து அமைச்சு என்ற வகையில் பல செயற்பாடுகளை செயற்படுத்த உள்ளோம். ஊடகவியலாளர்களின் நலன் தொடர்பாக கவனம் செலுத்தி செயற்படுகின்றோம்.



யாழ்ப்பாணத்தில் கொல்லப்பட்ட மூன்று ஊடகவியலாளர் குடும்பத்திற்கு வீடு அமைத்துகொடுக்க உள்ளோம். இதற்கு லேக்கவுஸ் சுயாதீன தொலைக்காட்சி ரூபவாஹினி ஆகியன 3 வீடுகளினையும் அமைக்க அனுசரனை வழங்குகின்றன.

வடக்கு, கிழக்கு ஊடகவியலாளர்களின் நட்புறவு தொடர்பாக இவ் மூன்று வீட்டிற்கான அடிக்கல்லினை நாட்டி வைக்கவுள்ளோம்.

ஊடகவியலாளர்களைசந்தித்து அவர்களின் குடும்பங்களுக்கு நிதி உதவிவழங்கப்படுகின்றது. யாழ்.மாவட்டத்தில் 41 ஊடகவியலாளர்களுக்கு இலகு கடன் அடிப்படையில் மோட்டார் சைக்கிள் கொள்வனவு செய்வதற்க்கான காசோலை ஆவணம் கையளிக்கப்படுகின்றது. நாங்கள் ஊடகவியலாளர்களுக்கு இலகு கடன் அடிப்படையில் வீட்டுத்திட்டத்தினை தொடங்க உத்தேசித்துள்ளோம். இதற்கான கலந்துரையாடல்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

ஊடக சுதந்திரம் வழங்கிய அரசு என்ற வகையில் இன மத வேறுபாடு இன்றி பொறுப்புடன் செயற்பட விரும்புகின்றோம். இங்கு முன்வைக்கப்பட்ட அனைத்து கோரிக்கைகளும் கவனத்தில் எடுத்து செயற்படுவோம் என அவர் மேலும் தெரிவித்தார். (செ-9)

## காணாமல்போனோரை...

தனித்தனியாக அழைப்பு விடுக்கப்பட்டது. கடந்த 25ஆம் திகதி முதல் 27ஆம் திகதி வரை இதனை நடத்தினோம்.

இதில் 366 பேர் தமது விடயங்களை தெரிவித்திருக்கின்றனர். இதனடிப்படையில் நாங்கள் ஒரு தீர்மானத்தை எடுத்தோம். இவர்களது முறைப்பாடுகளின் அடிப்படையில் விசாரனைக் குழுவிடம் இதனை கையளித்து விசாரணைகளை நடத்தி விபரங்களை பெற்றுக் கொள்ளவுள்ளோம் இன்றைய தினத்துடன் (நேற்று) முல்லைத்தீவு மாவட்டத்திற்கான ஜனாதிபதி ஆணைக்குழுவின் சாட்சியமளிப்பை நிறைவு செய்கின்றோம் என தெரிவித்தார்

இதற்கு ஊடகவியலாளரொருவர் இந்த மூன்று தினங்களிலும் 110 பேர் புதிதாக பதிவுகளை மேற்கொண்டுள்ளனர். இதற்காக நீங்கள் என்ன நடவடிக்கை எடுக்கப் போகிறீர்கள் என கேட்டதற்கு,

இது தொடர்பாக நான் எதுவும் கூறமுடியாது. ஏனெனில் எமது ஆணைக்குழுவின் காலம் யூன் மாதம் வரைதான் நீடிக்கப்பட்டுள்ளது. எனவே இந்த காலத்திற்குள் பதிவு செய்து சாட்சியமளித்தவர்களுக்கான விசாரனைகளை நிறைவு செய்ய வேண்டும். எமது குழு முடிக்காவிட்டாலும் அரசாங்கத்தால் வேறு ஏதாவது குழுக்கள் அமைக்கப்படலாம். அவ்வாறு அமைத்தால் அவர்களிடம் கையளிப்போம் என தெரிவித்தார்.

இந்திய இராணுவத்தால் காணாமல் செய்யப்பட்டோர் தொடர்பான உங்களது நிலைப்பாடு என்ன என வினவியதுக்கு,

இந்திய இராணுவத்தால் காணாமல் செய்யப்பட்டோர் தொடர்பாக சிலமுறைப்பாடுகள் எமக்கு கிடைக்கப்பெற்றது. நாங்கள் இது தொடர்பாக விசாரித்து எமது ஆணைக்குழு எங்களுடைய இறுதி அறிக்கையில் குறிப்பிட்டு இதுதொடர்பாக தீர்மானமெடுப்பதற்காக ஜனாதிபதியிடம் கையளிப்போம் என தெரிவித்தார்

இந்த ஆணைக் குழுவின் தலைவராகிய நீங்கள் ஓரிடத்தில் பகிரங்கமாக குறிப்பிட்டிருக்கிறீர்கள் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் இராணுவத்தை குற்றவாளியாக்க மாட்டேன் எனக் கூறிவிட்டு உங்களுடைய தலைமையில் இந்த விசாரணை நடத்துவது எந்தவொரு நீதியையும் கொண்டுவராது என்று கருத்துகள் வெளியிடப்படுகிறது இந்த விசாரணை நடைபெறுமிடத்திற்கு நேற்று முன் தினம் வந்த பாராளுமன்ற உறுப்பினரொருவரும் இந்தக் குற்றச்சாட்டை முன்வைத்தார் இது தொடர்பான உங்களது கருத்து என்ன?

எமது ஆணைக்குழு தொடர்பாக எங்களுடைய இறுதியறிக்கையை பார்க்க முன்னர் அதிருப்தி வெளியிடுவது நியாயமானது அல்ல என நான் கருதுகிறேன். எமது குழு அண்மையில் இரண்டாவது பணிப்பாணை தொடர்பான இறுதி அறிக்கை நாம் வெளியிட்டிருக்கிறோம். இறுதி யுத்தத்தின் போது சரவதேச சட்ட விதிமுறைகள் மீறியமை தொடர்பானதே.

அந்த அறிக்கையை சுயாதீனமான முறையில் நாம் சமர்ப்பித்தோமென என்னால் கூற முடியும். அந்த அறிக்கை எந்த விதத்திலும் விமர்சனத்திற்கு உள்ளாகவில்லை. அந்த அறிக்கை பாராளுமன்றத்திலும் சமர்ப்பிக்கப்பட்டிருக்கிறது. அது பாரியளவு விமர்சனத்துக்கு உள்ளாக்கப்படவில்லை எனவே அந்த அறிக்கையின் மூலம் எமது குழு.எவ்வாறு செயற்படுகிறோமென தீர்மானிக்க முடியும்.

இந்த ஆணைக்குழு இராணுவத்தின் மீது குற்றம் சுமத்தாது என்ற முடிவுக்குவர முடியாது. இராணுவமோ விடுதலைப்புலிகளோ அல்லது வடக்கின் வேறெந்த அரசியல் கட்சியோ குற்றவாளியென நிரூபிக்கப்பட்டால் அதை நிச்சயமாக எமது இறுதி அறிக்கையில் குறிப்பிடுவோம். எமக்கு எல்லோரும் ஒன்றுதான் இந்த ஆணைக்குழு மிகவும் சுயாதீனமாக வெளிப்படைத் தன்மையுடன் செயற்படுகிறது. எல்லோருக்குமே வெளிப்படையாக நாம் செயற்படுகிறோம். ஊடகங்கள் கூட எங்களுடன் அமர்ந்திருந்து சுயாதீனமாக வெளிப்படையாக உங்களுடைய கடமையை செய்கிறீர்கள்.

நாங்கள் ஒரு பக்கச் சார்பாக செயற்படுவதாக கூறுவது அநீதியானது. எமது பணிகள் நிறைவடைந்து இறுதி அறிக்கை சமர்ப்பித்த பின்னர் எங்களை பாராட்டினாலோ விமர்சித்தாலோ அதை நாங்கள் ஏற்றுக்கொள்கிறோம் அவ்வளவுதான் என்னால் கூறமுடியும் என்றார்.

குற்றவாளிகள் தொடர்பாக மாறுபட்ட கருத்துக்கள் உங்களுக்கு வழங்கப்பட்டால் உதாரணமாக ஒரு உறவினரால் ஒருகருத்தும் மற்றைய உறவினரால் இன்னொரு கருத்தும் கூறப்பட்டால் உங்களது நிலைப்பாடு என வினவியதற்கு,

நாங்கள் இப்போது விசாரித்த இந்த விபரங்களை கொண்டு எமது புலனாய்வுக் குழு சென்று அவர்கள் இது தொடர்பாக விசாரனைகளை மேற்கொண்டு சரியான தகவல்களை பெற்று எங்களுக்கு அறிவித்ததன் பின்னரே நாம் ஒரு முடிவுக்கு வரமுடியும்.

இது ஆரம்ப கட்ட விசாரணை. இந்த ஆரம்ப கட்ட விசாரணை என்பது இதில் பாதிக்கப்பட்டவர்கள் வந்து அவர்களுடைய மனக் கவலையை கொட்டித் தீர்ப்பதற்கு ஒருவாய்ப்பளித்தள்ளோம் இதுதான் இந்த முதற்கட்ட விசாரணை என தெரிவித்தார். (செ-281)

## படுகொலையான ஊடகவியலாளர்களுக்கு யாழில் நினைவுத் தூபி திறப்பு



இலங்கையில் ஊடக பணியின்போது படுகொலை செய்யப்பட்ட ஊடகவியலாளர்கள் நினைவாக யாழ். பிரதான வீதியில் நினைவு தூபி திறந்து வைக்கப்பட்டுள்ளது.

நாட்டில் 44 ஊடகவியலாளர்கள் ஊடக பணியின் போது படுகொலை செய்யப்பட்டிருக்கும் நிலையில் அவர்கள் நினைவாக குறித்த நினைவு தூபி அமைக்கப்பட்டுள்ளது.

குறித்த தூபியை நேற்றைய தினம் மாலை 6.30 மணிக்கு ஊடகத்துறை அமைச்சர் கயந்த கருணாதிலக, வடமாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் மற்றும் வடக்கில் படுகொலை செய்யப்பட்ட ஊடகவியலாளர் நிமலராஜனின் சிறிய தந்தை க. லோகநாதன் ஆகியோரால் இணைந்து திறந்து வைக்கப்பட்டுள்ளது.

மேலும் வடக்கு, தெற்கு ஊடகவியலாளர்கள், ஊடகத்துறை அமைச்சர், முதலமைச்சர், ஆகியோர் நிகழ்வு தொடர்பாக ஞாபகக் கையொப்பங்களையும் இட்டுள்ளனர். (செ-12)

## அதிக வெப்பம்...

ரின் சைக்கிளில் திருநெல்வேலி சந்திப்பகுதியில் உள்ள வர்த்தக நிலையத்துக்கு அன்று மதியம் வந்துள்ளார்.

வெயில் கொடுமை தாங்கிக் கொள்ளமுடியாமல், வீதியின் அருகில் உள்ள கடை ஒன்றில் ஒதுங்கி நின்று களைப்பாறியுள்ளார். அவ்வேளை அவர் கடையின் முன்பாக மயங்கி வீழ்ந்துள்ளார்.

உடனடியாக யாழ்.போதனா வைத்தியசாலைக்கு எடுத்து செல்லப்பட்டு சிகிச்சை பெற்று வந்த நிலையில் மேற்படி முதியவர் நேற்று உயிரிழந்தார்.

வைத்தியசாலையின் திடீர் மரணவிசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேம்குமார் விசாரணைகளை மேற்கொண்டார். உடற்கூற்று பரிசோதனையின் பின் சடலம் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டது. (செ-12)

## பரந்தனில் விபத்து...

வாகன விபத்தில் 6 பேர் படுகாயமடைந்து கிளிநொச்சி வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

பரந்தன் நோக்கி பயணித்துக் கொண்டிருந்த கப் ரக வாகனமொன்று வேகக்கட்டுப்பாட்டை இழந்தமையால், இவ் விபத்து ஏற்பட்டுள்ளது.

இதில் வாகனத்தில் பயணித்த அறுவர் படுகாயமடைந்ததாகவும் கப் வாகனமும் பலத்த சேதங்களுக்கு உள்ளாகியுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இவ் விபத்து தொடர்பான மேலதிக விசாரணைகளை கிளிநொச்சி பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (செ-12)

## இலங்கை அணி...

தோல்வியைத் தழுவி, அரையிறுதிக்கு முன்னேறும் வாய்ப்பினை இழந்துள்ளது. இவ்வாறான ஓர் நிலையில் அணியை தைரியப்படுத்தும் நோக்கில் ஜனாதிபதி டுவிட்டரில், குறித்த தோல்வி குறித்து கருத்து வெளியிட்டுள்ளார்.

வெற்றியோ தோல்வியோ இலங்கை அணி வீரர்களின் அபாரமான திறமைகளை கண்டுகளிப்பதில் தாம் பெருமிதம் அடைவதாகத் தெரிவித்துள்ளார்.

அடுத்த தடவை இலங்கை அணி இதனை விட வலுவாக சிறந்த திறமைகளை வெளிப்படுத்தும் என ஜனாதிபதி இதன்போது நம்பிக்கை வெளியிட்டுள்ளார். (செ-12)

## இலங்கையி...

இதுதொடர்பில் புலனாய்வுப் பிரிவினர் தெரிவித்துள்ள மேலதிக தகவல்கள் என்று குறித்த அவ்ஊடகம் வெளியிட்டுள்ள செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு,

இலங்கையிலுள்ள முஸ்லிம் தீவிரவாதிகளில் சுமார் முப்பது பேர் ஐ.எஸ். பயங்கரவாத இயக்கத்துடன் தொடர்பு கொண்டிருக்கின்றனர் என்று சந்தேகிக்கப்படுகின்றது.

கலேவெல பிரதேசத்திலிருந்து சென்று ஐ.எஸ். இயக்கத்துடன் இணைந்துகொண்டார எனச் சந்தேகிக்கப்படும் நபரொருவர் இராணுவத் தாக்குதலொன்றில் அண்மையில் கொல்லப்பட்டிருக்கின்றார்.

இந்தப் பயங்கரவாத இயக்கம் இலங்கையில் வேரூன்றுவதைத் தடுப்பதற்கு போதுமான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் இதுவரை எடுக்கப்படாததால் அந்த இயக்கம் காலப்போக்கில் நாட்டின் பாதுகாப்புக்குப் பெரும் அச்சுறுத்தலாக மாற இடமிருப்பதாக ஊகங்கள் வெளியாகியுள்ளன.

நிலைமை மேலும் விபரீதமாவதற்கு முன் இந்த இயக்கத்துடன் தொடர்புவைத்திருப்பவர்களை ஒடுக்கும் பொறுப்பு புலனாய்வுப் பொலிஸ் பிரிவினருக்கும் பயங்கரவாத ஒழிப்புப் பிரிவினருக்கும் வழங்கப்படவேண்டும். அத்துடன், இந்த இயக்கத்தை இலங்கையில் தடைசெய்யப்பட்ட இயக்கமாகப் பிரகடனப்படுத்தவும் வேண்டும். வேலைவாய்ப்புகள் என்ற போர்வையில் மத்திய கிழக்கு நாடுகளுக்குச் சென்று திரும்பும் இலங்கையர்கள் தீவிரமாகக் கண்காணிக்கப்படவேண்டும். அவர்கள் தொழிலுக்காக சென்ற இடங்களில் தொழில் செய்துகொண்டிருக்கிறார்களா என்பதை ஊர்ஜிதம் செய்துகொள்ள வேண்டியது முக்கியமாகும்.

அத்துடன், பல்வேறு வெளிநாடுகளில் இருந்து இலங்கைக்கு வருபவர்களில் சந்தேகத்துக்கு இடமானவர்களை விமான நிலையத்திலிருந்தே கண்காணிக்கத் தொடங்க வேண்டும். ஐ.எஸ். இயக்கத்துடன் சம்பந்தப்பட்ட சுமார் 60 வலைத்தளங்கள் இன்னும் தடைசெய்யப்படாமல் இருக்கின்றன. இதன் மூலம் இலங்கையில் அந்த இயக்கம் வேரூன்ற வாய்ப்புகள் உள்ளன என்று உயர்மட்ட இராணுவ புலனாய்வுத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

அத்துடன், மாலைதீவிலிருந்து புடைவை வியாபாரம் செய்யும் போர்வையில் இலங்கைக்கு வருபவர்களும் தீவிரமாகக் கண்காணிக்கப்படவேண்டும். மாலைதீவு அரசு இதுவரை அந்த இயக்கத்துடன் தொடர்புடைய பலரைக் கைது செய்துள்ளது.

அவர்கள் இலங்கை வழியாகவே மாலைதீவுக்கும் அதே வழியாகவே வெளிநாடுகளுக்கும் செல்வது நிரூபணமாகியுள்ளது. இராணுவப் புலனாய்வுப் பிரிவினரின் தகவல்களின்படி இலங்கையில் கொலன்னாவ, சாலமுல்ல, தெஹிவளை, குருநாகல் மற்றும் கிழக்கு மாகாணத்தின் ஒரு சில பகுதிகளிலும் ஐ.எஸ். பயங்கரவாத இயக்கத்துடன் தொடர்புடைய நபர்கள் ஊடுருவியுள்ளனர் எனத் தெரியவந்துள்ளது.

அத்துடன், சிரியாவிலுள்ள ஐ.எஸ். இயக்கத்தின் ஆதரவாளர்கள் சுமார் 45 பேர் இலங்கையில் இருக்கின்றனர் எனவும் சந்தேகிக்கப்படுகின்றது என்று குறித்த ஊடகம் செய்தி வெளியிட்டுள்ளது. (செ-12)

## கடற்புலிகளின்...

நேற்று திருகோணமலையில் உள்ள கிழக்குப் பிராந்திய கடற்படைத் தலைமையகத்துக்குப் பயணம் மேற்கொண்டார்.

இதன்போது இலங்கை படை அதிகாரிகளுடன் ஆலோசனைகளை நடத்தியதுடன், கடற்படை அருங்காட்சியகத்தில் வைக்கப்பட்டுள்ள தமிழீழ விடுதலைப் புலிகளின் கடற்புலிகளால் தயாரித்து பயன்படுத்தப்பட்ட தாக்குதல் படகுகள், கடற்கண்ணிவெடிகள் மற்றும் ஆயுதங்களையும் பார்வையிட்டார்.

இலங்கை கடற்படையின் அதிவேக ரோந்துப் படகில் திருகோணமலைத் துறைமுகத்தின் அமைப்பு மற்றும் அதன் பாதுகாப்பு அம்சங்கள் குறித்தும் வைஸ்அட்மிரல் ஜோசப ஓகொயின் ஆய்வுகளை மேற்கொண்டார்.

அத்துடன், இலங்கை கடற்படையின் சிறப்புப்படகுப் படையணியின் பயிற்சியாளர்களுடனும் அவர் கடற்போர்முறை தொடர்பாக கலந்துரையாடியுள்ளார். (செ-12)

## பெண் பிள்ளை...

கக வேண்டும் என்று காணாமல் போனோரை கண்டறியும் ஜனாதிபதி ஆணைக்குழுவின் தலைவர் மக்ஸ்வெல் பரணகம தெரிவித்துள்ளார்.

காணாமல் போனோரை கண்டறியும் ஜனாதிபதி ஆணைக்குழுவின் இறுதிக்கட்ட விசாரணைகள் முல்லைத்தீவில் ஆரம்பிக்கப்பட்டு நேற்றுடன் முடிவடைந்திருந்தது.

இந்த நிலையில் காணாமல்போன தன்னுடைய மகள் தொடர்பில் தந்தை ஒருவர் நேற்று சாட்சியம் வழங்கியபோதே ஆணைக்குழுவின் தலைவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

முல்லைத்தீவு நகரத்தில் வசிக்கும் சொக்கலிங்கம் என்பவர் 19 வயதான தன்னுடைய மகள் பாமினி இறுதி யுத்தத்தின்போது இராணுவப் பகுதியில் காணாம்ல் போயுள்ளதாக தெரிவித்தார். இராணுவத்தின் சோதனைப் பிரிவில் தன்னுடைய மகளை இறுதியாக கண்டதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

தனது மகளை மீட்க பல இடங்களுக்கும் அலைவதாக தெரிவித்த அவர்,

பொலிஸாரும் புலனாய்வுத் துறையினரும், இராணுவத்தினரும் காணாமல்போன தன்னுடைய மகள் தொடர்பில் தகவல்களைப பெற்ற நிலையில் நட்டஈட்டை பெறுமாறு அவர்கள் கூறியதாகவும் தெரிவித்தார்.

அதனை மறுத்ததுடன் நட்டஈடு வேண்டாம் என்றும் உயிருடன் இருக்கும் எனது மகளே தேவை என்றும் தான் அவர்களிடம் வலியுறுத்தியதாகவும் அவர் குறிப்பிட்டார். தனது மகள் தம்முடன் இணைந்து வாழ வழிசெய்யுமாறு அந்த தந்தை கண்ணீர் மல்க ஆணைக்குழு தலைவரிடம் சாட்சியம் அளித்துள்ளார்.

இதன்போது கருத்துத் தெரிவித்த காணாமல் போனோரை கண்டறியும் ஜனாதிபதி ஆணைக்குழுவின் தலைவர் மக்ஸ்வெல் பரணகம இராணுவப் பகுதிக்குள் பெண் பிள்ளைகளை கொண்டு வரும்போது அவதானமாக இருந்திருக்க வேண்டும் என்று அத்தந்தையிடம் தெரிவிதத்துள்ளார். (செ-281)

## சர்வதேச அழுத்...

உட்பட சர்வதேச சமூகத்தினால் தொடர்ந்தும் மனித உரிமைகள் தொடர்பில் அழுத்தம் கொடுக்கப்பட்டது.

அதேபோன்று பொதுநலவாய மாநாடு இலங்கையில் நடத்தப்பட்ட போது அம்மாநாட்டில் கலந்துகொள்ள பல வெளிநாட்டு தலைவர்கள் தயக்கம் காட்டினர். பொதுநலவாய நாடுகளின் சில தலைவர்கள் தமது வருகையை தவிர்த்துக் கொண்டனர்.

இந்த நாட்டில் மனித உரிமைகள் மீறப்பட்டிருக்கின்றன. ஜனநாயகம் இல்லாத நிலை தோன்றியுள்ளது. ஊழல் மிக்க ஆட்சி நிலவுகின்றது. சுதந்திரம் இல்லாமல் செய்யப்பட்டுள்ளது போன்ற காரணங்களை முன்வைத்த சில அரச தலைவர்கள் நமது நாட்டுக்கு விஜயம் மேற்கொள்வதை தவிர்த்துக்கொண்டனர்.

சில முக்கிய சர்வதேச தலைவர்கள் நமது நாட்டுக்கு வருகைதந்த போதிலும், நம்நாட்டு பொதுமக்கள் பலரை சந்தித்து விடயங்களைக் கேட்டறிந்து கொண்ட அவர்கள் நமது நாட்டில் பாரிய பிரச்சினைகள் இருப்பதாகவும் அவற்றை துரிதமாக தீர்த்துக்கொள்ள வேண்டும் என்றும் கோரினார்கள்.

இந்நிலையிலேயே அவசர அவசரமாக நடத்தப்பட்ட ஜனாதிபதி தேர்தலில் 42 நாட்களில் ஆட்சியிலிருந்த அரசாங்கத்தை மாற்றி மக்களின் எதிர்பார்ப்புகளை நிறைவேற்றும் வகையில் நாம் ஆட்சிக்கு வந்தோம்.

அவ்வாறு ஆட்சிக்கு வந்த நாம் கடந்த அரசாங்கத்தினால் விடைகூறமுடியாதிருந்த வினாக்களுக்கு விடையளித்ததுடன், நாட்டு மக்களின் எதிர்பார்ப்புகளை நல்லமுறையில் நிறைவேற்றி வருகின்றோம்.

எமது அரசியல் விஞ்ஞாபனத்தில் முன்வைத்தவற்றை நிறைவேற்றுவதே எமது கடமையாகும். சர்வதேச ரீதியில் எமது நாட்டுக்கு எதிராக முன்வைக்கப்பட்டுள்ள குற்றச்சாட்டுக்களுக்கு பதிலளிக்க வேண்டுமாயின் எமது நாட்டின் மீது சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுக்களுக்கு உரிய முறையில் விசாரணைகள் நடத்தப்பட்டு உண்மையை வெளிப்படுத்த வேண்டும்.

யுத்தகாலம் தொடர்பாக எழுப்பப்பட்ட குற்றச்சாட்டுக்கள் காரணமாக எமது படையினருக்கான பல பயிற்சி வாய்ப்புகளை இழக்க நேரிட்டது. பல தசாப்தங்களாக அமெரிக்காவால் படையினருக்கு வழங்கப்பட்டு வந்த பயிற்சியினை இழக்க நேரிட்டது.

இந்தியா உட்பட இன்னும் பல நாடுகளில் இருந்து கிடைக்கப் பெற்ற பல பயிற்சிகளை இழக்க நேர்ந்தது. எமது புதிய அரசு ஆட்சிக்கு வந்ததன் பின் அவ்வாறு இழக்க நேர்ந்த வாய்ப்புகளை மீண்டும் எமது படையினருக்கு பெற்றுக்கொள்ள முடிந்துள்ளது. உலக தரத்திலான பயிற்சிகளை அனுபவங்களை அறிவினை பெற்றுக்கொள்ளும் வாய்ப்பு இப்போது படையினருக்கு கிடைக்கப் பெற்றுவருகிறது என ஜனாதிபதி தனதுரையில் குறிப்பிட்டுள்ளார். (செ-12)

## பாகிஸ்தானில்...

சிறார்கள் விளையாடிக் கொண்டிருந்த பூங்காவிற்கு அருகில் குறித்த தற்கொலை தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

சம்பவ இடத்தில் ஒரு பதற்றமான சூழல் காணப்படுவதாகவும், மக்கள் அலறி அடித்துக் கொண்டு ஓடிய நிலையில், சிறார்கள் தமது பெற்றோரை காண முடியாமல் பிரிந்துள்ளதாகவும் சம்பவத்தை நேரில் கண்டவர்கள் தெரிவித்துள்ளனர்.

இந்தத் தாக்குதலில் காயமடைந்த சிறார்கள், பெரியோர்கள் என பலர் மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்டுள்ளனர்.

யார் இந்தத் தாக்குதலை மேற்கொண்டார்கள் என்பது தொடர்பில் நேற்றிரவு வரை எநத் தகவலும் வெளியிடப்படவில்லை. (செ-12)

## "பனையோலையும் எழுத்தாணி...



ணக்கப் பயணம் எனும் தொனிப்பொருளில் வடக்கு தெற்கு ஊடக சகோதரத்துவத்தை ஒன்றாக இணைக்கும் நோக்குடன் யாழ்ப்பாணத்துக்கு 3 நாட்கள் நல்லிணக்க பயணம் ஒன்றினை மேற்கொண்டுள்ள இக் குழுவினர் 2 ஆம் நாளான நேற்றுக் காலை நாகவிகாரைக்கு சென்றதுடன்,

யாழ்ப்பாணத்தில் உள்ள அச்சு மற்றும் இலத்திரனியல் ஊடக நிறுவனங்களை சென்று பார்வையிட்டனர், பின்னர் பலாலியில் உள்ள இராணுவ படைத்தலைமையகத்துக்கு சென்று இராணுவ உயர் அதிகாரிகளை சந்தித்து கலந்துரையாடியுள்ளனர்.

நேற்றையதினம் மாலை யாழ். நாச்சிமார் கோவிலடியில் அமைந்துள்ள சரஸ்வதி மண்டபத்தில் நடைபெற்ற நிகழ்வில் உயிரிழந்த மற்றும் பாதிக்கப்பட்ட ஊடகவியலாளர்களின் குடும்பங்களுக்கு நிதி உதவி வழங்கியதுடன், வடக்கில் உள்ள 41 ஊடகவியலாளர்களுக்கு கடனடிப்படையிலான மோட்டார் சைக்கிள்களும் வழங்கப்பட்டன.

மேலும் வடமாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரனைச் சந்தித்ததுடன் படுகொலை செய்யப்பட்ட ஊடகவியலாளர்களின நினைவாக யாழ்.சுப்பிரமணியம் பூங்காவுக்கு அருகில் நினைவு தூபி ஒன்றும் அமைச்சரினால் திறந்து வைக்கப்பட்டது. (செ-9)

தமிழ் சிங்களப் புதுவருட சிறப்பு கட்டணங்கள்
கொழும்பு ⟷ சென்னை
19900 /=
Airlanka tours
24 மணித்தியால சேவை வழங்குனர்
0715 365 365

வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603
021 567 1532

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 28.03.2016 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.